Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් செப். 28 - ஒக் 04, 2006

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 681




## அரசின் சமரச நகர்வும் சர்வதேசத்தின் ஆதரவும்!



## திட்டங்களைத் தகர்க்கும் புதிய போர்க்களம்!






'ஜோ' விடம் பிடித்தது....
சிலிர்க்கிறார் சூர்யா

மக்கள் என்னை ரசிக்கணும்! நமீதா

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்



## நாயன்மார்களின் மனவுறுதி

நாயன்மார்களின் வரலாறுகள்தான் பெரியபுராணம் எழுவதற்குக் காரணமாயிருந்ததென்பது அநேகரும் அறிந்த செய்திதான். ஆயினும், ஏன் இந்த நாயன்மார்களின் வரலாறுகள் புராணமானது என்ற கேள்வி எழும் பட்சத்தில் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு எமதாகின்றது.

பண்டைய காலந்தொட்டு இன்று வரை எத்தனையோ அரசர்கள், தனவந்தர்கள் வாழ்ந்து மடிந்து விட்டபோதிலும், அவர்களின் வரலாறு பரதேசிகளாகத் திரிந்த நாயன்மார்களின் வாழ்க்கையோடு ஒப்பிட முடியாதிருந்ததற்கு ஒரு முக்கிய காரணம் இல்லாமலில்லை. அது என்னவெனில், இறைவன் மேல் அதாவது - இறைவனை ஒரே உருவத்தில் கண்டு அதையே விடாப்பிடியாக 'சிக்கெனப்பிடித்தேன்' என்ற தளராத நிலையில் நின்று ஒழுகியதன் மூலம் அவர்களால் அந்த நெறியை வளர்த்து அதில் நிம்மதியும் காணக்கூடியதாக இருந்தமை நினைவுகூரத்தக்கது. ஆனால், இன்று தெய்வழிபாட்டில் நம்பிக்கையின்மை மட்டுமல்ல, உறுவது சீர்தூக்கும் நிலைமை தெய்வத்தோடும் (வழிபாட்டிலும்) இழையோடி இருப்பதுதான் முத்தி எய்த முடியாததற்குக் காரணம் என்று துணியலாம். உறுதிப்பாடில்லாத வழிபாடு மனிதனை பல தெய்வ வழிபாட்டில் ஈடுபட வைத்திருப்பதுதான் நாயன்மார்களின் வழிபாட்டு முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாதலால்; இனி வருங் காலத்திலும் நாயன்மார் போற்றுதற்குரியவர்களாவே இருப்பர் என்பதில் ஐயமில்லை.

-என். எஸ். ராஜா, தம்பலகாமம்.

## இறையச்சம் வேண்டும்!

புனிதமான உள்ளமே புனிதராகிய கர்த்தர் வாழும் இல்லம். தூய உள்ளமும் தெளிந்த மனமும் உள்ளவர்கள் தேவனின் கருணை பெற்றவர்கள். மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்க நாம் தவறக்கூடாது. அப்படி நடப்பவர்கள் அனைவருக்கும் கர்த்தர் என்றும் அருள் பாலிப்பார்.

'உன்னைப் போல் உன் அயலானையும் நேசி; அயலவனின் கண்ணில் உள்ள துரும்பை அகற்றுமுன் உன் கண்ணில் உள்ள துரும்பை அகற்று. இப்படியெல்லாம் வேதம் சொல்கிறது. எதற்காக? நீ திருந்தினால் ஊர் திருந்தும். ஊர் திருந்தினால் உலகமே திருந்தும் என்பதற்காகத்தான்.

இவை எல்லாவற்றுக்குமே அடிப்படையானது இறையச்சம். தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற பய உணர்வு நம்மிடம் இருக்குமானால் தவறுகள் இடம் பெற வாய்ப்பில்லை. நமது ஒவ்வொரு செயலையும், அசைவையும் அவர் அவதானித்துக் கொண்டிருக்கிறார்.

ஆகவே, இறைவன் மீது அச்சம் கொண்டு, அவரை விசுவாசித்து அவர் நாமதத்தைப் போற்றி வாழ்வோமாக!

-எம். ஏ. எஸ். சண்முகம், வத்தளை

## ரஹ்மத்தான ரமழான்

இப்போது ஷ.்பான் மாதத்தின் இறுதி நிழலில் இருக்கும் நாம் ரஹ்மத்தான ரமழான் மாதத்தின் நுழைவாயிலை அடையப் போகிறோம்.

இம் மாதத்தின் மகத்துவத்தை அல்லாஹ் தன் அருள் மறையாம் அல்குர் ஆனில் அழகுபட விளக்கிக் கூறுகிறான்.

ரமழான் மாதம் எத்தகைய மகத்துவமுடையது என்றால், அதில்தான் அல்குர்ஆன் என்னும் வேதம் அருளப்பெற்றது. அது மனிதர்களுக்கு நேர்வழியாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவதற்கு தெளிவாகவும் உள்ளது. ஆகவே உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்.


ஆனால் அக்காலத்தில் உங்களில் யாராவது நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால் ரமழான் அல்லாத மற்ற நாட்களில் விட்டுப் போன நாட்களின் நோன்பைக் கணக்கிட்டு நோற்றுவிடவும்.

அல்லாஹ் உங்களுக்கு இலகுவான கட்டளையைக் கொடுக்க விரும்புகிறானே ஒழிய, கஷ்டத்தைக் கொடுக்க விரும்பவில்லை.

ஆம், பாவங்களைப் போக்கி நன்மைகளைப் பெருக்கும் நல் மாதமான ரமழான் மாதத்தில் வயது வந்த ஆணும், பெண்ணும் நோன்பு நோற்று, தீயவை களைந்து நன்மைகள் புரிந்து சிறப்பாலும் செம்மையாலும் அல்லாஹ்வின் அருளைப் பெறுவோமாக!

-எம். சி. கலீல், கல்முனை - 05

## கவிதைப் போட்டி இல.678



### பரிசுக்குரிய கவிதை

### சாபம்

ஓலைக் குடிசை
ஓட்டைக் குடிசை
என்று நக்கலா?
உங்க ஊரிலும்
குண்டு வெடிக்கும்
உயிரைக் காப்பாற்ற
அகதியா போவீங்க...
அப்ப தெரியும்
குடிசையின் அருமை.!

-விஷ்ணி,
சம்பூர்

## கவிதைப் போட்டி இல.681



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.10.2006.

கவிதைப் போட்டி இல.681
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### மாற்றம்

தனி நாடு கேட்டவர்களின்
தணியாத கோபத்தால்
ஏழை எங்கள் வாழ்வில்
எத்தனையோ மாற்றங்கள்.

- அனீஸா.அல்.ஆஸாத்,
ஏறாவூர் - 06.




### கொஞ்சம் சிந்தியுங்கள்

இந்தப் பிஞ்சுகளையேனும்
விட்டு வையுங்கள்
நாளை நாட்டிற்கு
இவர்களுக்காவது
ஏதேனும் நன்மைகள்
கிடைக்கட்டும்!

-பை.யூசுப்,
கிராண்ட்பாஸ்.

### அந்தி ரெட்டி...!

பசி எம் வயிற்றை எரிக்க
எமக்குரிய உலருணவு
கடல் கடக்க முடியாது
தரையில் நகர முடியாது
தத்தளித்து நிற்கையிலே...
அரிசி இங்கு வருமுன்னே
எம் அந்திரெட்டி வந்துவிடும்.

-சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### ஏங்கும் சிறுமி!

தாய், தந்தையை இழந்து
சோகத்தில்
கன்னத்தில் கைவைத்து
கவலையுடன்
கண்கலங்கப்
பெற்றோரின்
வித்துடலை எங்கு
காண்பேனோ என்று
ஏங்குகிறாள்
இச்சிறுமி!

-ஏ.எஸ்.எம்.ரவூப்,
கொழும்பு - 15.

### எதிர்பார்ப்பு

பசியின்
உக்கிரம்
பதறச்
செய்கிறது
பசியோடு இவள்
காத்திருக்கிறாள்
வேலைக்குப் போன
அம்மா
அப்பாவின்
வரவுக்காக...

-காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

### சுதந்திரம்

மாடி வீட்டு மன்னர்களே!
என் 'வாடி' வீட்டு
அவலம்
பாருங்களேன்!
உறவிழந்து பேசுகிறேன்
உண்மைச்
சுதந்திரத்தைத் தாருங்களேன்!

-கே.இந்திரன்,
சந்திவெளி.

### கிடைத்தது இதுதான்!

சுனாமி விழுங்கிய
என்னில்லத்திற்குப் பதில்
வருடங்கள் சில
வந்து போன பின்
கிடைத்த அரண்மனை
இதுதான்.

-அ.சந்தியாகோ,
கண்டி.

### நிகழ்வுகள்

வறுமையும் பிணியும்
அநாதையும்
அகதி வாழ்வும்
தூரத்து
இடப் பெயர்வும்
இம் மண்ணில்
இன்னுமே
சுத்திகரிக்கப்படாத
ஒட்டடைகள்
காலத்தின் எச்சங்கள்
கண் கூடு
பாருங்கள்!!

-ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

# உங்கள் பக்கம்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்கிடப்படுமா?

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட சென்ற பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் யுத்தம், வன்செயல்கள், சுனாமி போன்ற அனர்த்தங்கள் காரணமாக உயிர், உடைமைகளை இழந்து, அனாதைகளாக - அகதிகளாக அல்லல் படும் மக்களின் மறுவாழ்வுக்காக அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்கள் பலவும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த வகையில் மகிழூர் கிழக்கு 110ஏ, கி-உ. பிரிவிலும், வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தினால் வீடற்ற பல குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்ட பணக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பல குடும்பங்கள் விடுபட்டுள்ளன. உதாரணமாக யுத்தம் காரணமாக கணவனை இழந்த விதவைத் தாய், வயது வந்த பெண்ணுடன் ஓலைக் குடிசையிலும், தாயையும் தந்தையையும் குழந்தைப் பருவத்திலே யுத்தத்திற்கு பலி கொடுத்த பெண் குழந்தையை வாழ வைக்கத் தன் வாழ்வை அர்ப்பணித்து கன்னிப் பெண்ணாக, இன்று இப்பருவ வயதுடைய பெண் குழந்தையுடன் வீட்டு வசதி இன்றித் தவிக்கும் துயர் சூழ்ந்த நிலையிலும் வாழ்கின்றனர். இதேபோல் பல விதவைகள், ஏழைகள் விடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

ஆகவே, மேற்படி பிரிவில் நடந்துள்ள இத் தவறுகளுக்கு அரச மற்றும் நிறுவன அதிகாரிகள் காரணம் என்று கூற முடியாது. இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் கிராம, கிராம மக்களின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள நிர்வாகிகளின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கு ஏற்றவாறே இவை நடந்துள்ளன.

எனவே இது போன்ற கொடுப்பனவுகள் தகுதியுடைய சகல மக்களுக்கும் உரித்துடையதாகும் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதன் உண்மை நிலையை அறிந்து கொள்வதுடன் உண்மையாகப் பாதிக்கப்பட்ட விதவைகள், ஏழைகளுக்கு இவை சென்றடைய உதவவேண்டும் என இம்மக்கள் சார்பாக தயவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

-நலன் விரும்பி ஆ. கெங்காசலம்,
களுவாஞ்சிகுடி

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

## பிரபல்யங்களின் தேடலாய்!

கடந்த தினமுரசிலும் அதற்கு முந்திய தினமுரசிலும் டென்னிஸ் வீரர் அகாசி, மற்றும் ்.போமுலா கார் பந்தய வீரர் ஷீமேக்கர் பற்றி விரிவான செய்திகளைத் தந்ததுடன் சூர்யாவின் முகவரியையும் தந்து அசத்திய முரசிற்கு எனது நன்றிகள். மேலும் இதுபோன்ற இன்னும் பல பிரபல்யங்களின் செய்திகளைத் தொடர்ந்து தர வேண்டி நிற்கிறேன்.

-வி.இன்பராஜ்,
கண்டி.

## உண்மைகளை உள்ளபடி...

இலங்கையில் வெளிவரும் பல தமிழ் பத்திரிகைகளில், உண்மைகளை உள்ளபடி உரைப்பதிலும், துணிந்து கூறுவதிலும் உனது சேவை வரவேற்புக்குரியது. மூதூரிலும் யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுவதுடன் இதுபோன்ற இனச் சுத்திகரிப்புக்கு எதிர்த்துக் குரல் கொடுக்கும் உனது சேவை எனக்கு மிகவும் பிடித்துள்ளது. முரசு போல் ஒவ்வொரு ஊடகமும் இருந்தால் தவறுகள் குறைவதற்கு வழிவகுக்கும் என்பது எனது ஆதங்கம்.

-எச்.ஏ.பௌசர், கல்முனை.

## வரலாற்றுக் கண்ணாடி

நான் தினமுரசின் நீண்ட நாள் வாசகன். கடந்த காலங்களில் இதிகாசம் தொடக்கம் உலகப்போர் வரைக்கும் பல அரிய பொக்கிஷங்களை தினமுரசு ஏமக்கு வழங்கியுள்ளது. இதுவரையிலும் வியட்நாமில் அமெரிக்காவுக்கு எதிராக யுத்தம் நடைபெற்றது என்று கேட்டிருக்கிறேன். இப்போது தினமுரசில் அதன் வரலாற்றைப் படிக்கும்போது நிஜமாகப் பார்க்கும் உணர்வு ஏற்படுத்தப்பட்டது மகிழ்ச்சி. உங்கள் சேவை தொடர வாழ்த்துக்கள்.

-கு.வினோ,
கோப்பாய்.

## தடைகளை உடைத்து...

கடல் கடந்து நாம் உழைப்பிற்காக இங்கு வந்தாலும் தாய் நாட்டை மறக்கமுடியாது. நாட்டுச் செய்திகளை அலசி ஆராய்ந்து ஆதாரத்துடன் தருகின்றாய். எத்தடை, சோதனைகள் வந்தாலும், தடைகளையுடைத்து, அனுப்பிவைக்கத் தவறாதீர்.

-ஜப்பார் கான், துபாய்.

# வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் தலைமை
# புதுடில்லியில் பேச்சுவார்த்தை தீவிரம்

இந்தியாவின் அழைப்பையேற்று புதுடில்லி சென்றிருக்கும் மூன்று தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வின் முன்னோடியாக வடக்கு, கிழக்கு மாகாண சபையை இயங்க வைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவார்களென்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் இயக்கத்தின் சார்புக் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை பிரதமர் மன்மோகன்சிங் சந்திக்க மறுத்த நிலையிலேயே இந்த மூன்று அமைப்புகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி, புளொட் இயக்கத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி முக்கியஸ்தர் சிறிதரன் புதுடில்லியில் தங்கியிருக்கும் மூன்று நாட்களில் பிரதமர் மன்மோகன்சிங், இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.கே.நாராயணன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கான பொது இணக்கப்பாட்டு முயற்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டிருக்கும் இந்தத் தருணத்தில் இந்த மூன்று முக்கியஸ்தர்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததென்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 19 வருடங்களுக்கு முன்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு முன்னதாகப் பிரபாகரன் உள்ளிட்ட பல்வேறு தமிழீழ அமைப்புகளின் தலைமைப் பிரதிநிதிகளுடன் இந்திய மத்திய அரசு அதிகாரிகளும், முக்கிய அரசியல்வாதிகளும் கலந்துரையாடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தின் எதிரொலியாகவே வடக்கு - கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, புலி இயக்கத்தினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் 1988ஆம் ஆண்டு அங்கு தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த இணைப்பைப் பிரிக்குமாறு சில சிறிய சிங்கள தேசியவாதக் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைத்த போதும் இந்தியா இந்த இணைப்பை வலுவாக ஆதரித்து வருகிறது.

ஜனாதிபதியின் பொது இணக்கப்பாட்டு முயற்சியில் ஏற்படும் முடிவுகளை அமுல்படுத்துவதற்கு சட்டவாக்கச் சபையான பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் அதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு உச்ச நீதிமன்றத்தின் ஆணையையும் பெற வேண்டும். இந்த வழிமுறையை மேற்கொள்வதற்கு காலம் எடுக்கலாம். இதற்கிடையில் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளை மாற்றுவதன் மூலம் இதனைச் செய்ய முடியுமென்று முன்னாள் அரசியல் விவகார அமைச்சரும் இந்நாள் ஐ.தே.கட்சி எம்.பி.யுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார். இருந்தாலும் புலிகள் ஆரம்பித்த யுத்தத்தினால் வடக்கு, கிழக்கில் இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து அன்றாட வாழ்வை நடத்த முடியாமல் கஷ்டப்படுவதால் நிவாரண நடவடிக்கைகளை காத்திரமான முறையில் கையாள்வதற்கு அங்கு ஓர் அரசியல் தலைமை நிறுவப்பட வேண்டுமென்று இம்மூன்று முக்கியஸ்தர்களும் வற்புறுத்துவர் என்றும் தெரிய வருகிறது. தேர்தல்களை நடத்துவதற்கு கால தாமதம் எடுக்குமென்றால், ஜனாதிபதியின் செயலாற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஓர் இடைக்கால நிர்வாக சபையை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்துவது பற்றிய யோசனை முன்வைக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

நியூயோர்க்கில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு, கிழக்கு மாகாண சபையை மீண்டும் இயங்க வைப்பதற்கான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மூன்று கட்டத் திட்டங்களை எடுத்து விளக்கியிருந்தார். இதனையடுத்து அவசர அவசரமாக இந்த மூன்று தமிழ் அமைப்புகளின் முக்கியஸ்தர்களும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



லண்டன் வாழ் இலங்கைத் தமிழ் மக்களுடன் ஜனாதிபதி நடத்திய கலந்துரையாடலின்போது பிடிக்கப்பட்ட படம். ஜனாதிபதிக்கு அருகே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் காணப்படுகிறார்.

# படுகொலை கலாசாரத்தை முறியடிக்க அரசியல் தீர்வே அவசியம்

## -லண்டன் கூட்டத்தில் திருமதி அமிர்தலிங்கம்

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளையும், தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் பிரித்துப் பார்க்க வேண்டும். அவை ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட விடயமல்ல என்று கடந்த வாரம் லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய இலங்கைத் தமிழர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர். நியூயோர்க்கிலிருந்து லண்டன் சென்றிருந்த ஜனாதிபதியோடு அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, கீதாஞ்சன குணவர்த்தன ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்தின் பாரியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட நூற்றுக்கணக்கானோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

திருமதி அமிர்தலிங்கம் அங்கு கருத்து தெரிவிக்கையில், "தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்திய அரசின் உதவியோடு சமாதானமான முறையில் பேச்சுவார்த்தையூடாக அரசியல் தீர்வு காண்பதற்கு பெரும் முயற்சியை எடுத்தவர் எனது கணவர். 1983ஆம் ஆண்டு இனக் குழப்பத்தின் பின்னர் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதில் அவர் பெரும் பங்காற்றினார். முன்னாள் இந்தியப் பிரதமர்களான இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பெரும் முயற்சிகளை அவர் எடுத்து வந்தார். அரசியலிலிருந்து ஒதுங்குமாறு புலிகள் இயக்கம் அச்சுறுத்தல் விடுத்தபோதும் அவர் தமிழ் மக்களுக்கான தனது பணியினை முன்னெடுத்துச் சென்றார். இறுதியில் அவர் பயங்கரவாதிகளின் வேட்டுகளுக்கு தனது உயிரையே பலிகொடுத்தார். அரசியல் தீர்வொன்றினை முன்னெடுப்பதன் மூலமே இப்படுகொலை கலாசாரம் நீடிக்காமல் தடுத்து நிறுத்த முடியும்" என்று கூறினார்.

# சம்பந்தன் குழுவினரைச் சந்திக்க இந்தியப் பிரதமர் மறுத்ததன் காரணம்

ஜனநாயக விழுமியங்களுக்கு மாறாக இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் புலிகள் இயக்கத்தின் முகவரமைப்பாகச் செயற்படுகின்ற காரணத்தினாலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மறுப்புத் தெரிவித்தாரென்று இந்தியப் பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு இணங்கிப் போகாமல் ஆயுத வன்செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்த பலரைக் கொன்றொழிக்கும் புலிகள் இயக்கத்தின் சார்பில் பேச முன்வரும் எவருடனும் தாம் கலந்துரையாடத் தயாரில்லை என்று திட்டவட்டமாக மன்மோகன் சிங் தெரிவித்தாரென்றும் அந்த வட்டாரங்கள் கூறின. ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களினதும் அபிலாஷைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்பதே இந்திய அரசின் நிலைப்பாடு என்பதால், அதற்கு விரோதமான எவருடனும் பேசத் தயாரில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மாத காலமாக சென்னையில் காத்திருந்துவிட்டு, புதுடில்லியில் இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் எதிர்பார்ப்போடு சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஏமாற்றத்துடன் நாடு திரும்பியுள்ளனர். இதே காரணங்களுக்காகவே தமிழக முதல்வர் கருணாநிதியும் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்க மறுத்துவிட்டார். இந்தியப் பிரதி வெளிவிகார அமைச்சர் அஹமட்டையும், பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனையும் பலத்த முயற்சிகளின் பின்னர் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசியுள்ளனர். புலிகள் வன்செயல்களைக் கைவிட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் அரசியல் யோசனைகளை முன்வைக்க வேண்டுமென்றும் அஹமட்டும், நாராயணனும் கூட்டமைப்பினருக்கு வலியுறுத்தினர்.

# ஏ-9 பாதைக்குப் பதிலான மாற்றுப் பாதை அடுத்த மாதம்?

தற்பொழுது மூடப்பட்டிருக்கும் ஏ-9 பாதைக்குப் பதிலாக யாழ்ப்பாணம் - பூநகரி வீதியூடாகப் பரந்தன் வீதியுடன் இணைத்து புதிய பாதையொன்றினை ஏற்படுத்தும் வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப் படலாமென்று தெரிய வருகிறது. ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முகமாலை முன்னரங்கப் பகுதியை புலிகள் தாக்கியதையடுத்து ஏ-9 பாதை மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இப்பாதை திறக்கப்பட்டால் புலிகள் வரி, கப்பம் பெறாமல் தடுக்கப்பட வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வு குறித்து இந்திய அமைச்சர் முகர்ஜியுடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு

இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை நியூயோர்க்கில் சந்தித்துப் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவதியுறும் மக்களுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டிய மனிதாபிமான உதவிகள் குறித்தும் அப்பகுதி மாகாண சபையை அரசியல் ரீதியாக இயங்க வைக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்து விளக்கினார். சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது இனப்பிரச் சினைத் தீர்வின் ஓர் முன்னோடி முயற்சியாக 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்டமை குறித்து விளக்கினார். புலிகளும் அப்போதைய ஜனா திபதி ரணசிங்க பிரேமதாசாவும் மேற்கொண்ட கூட்டு முயற்சிகளின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண சபை செயலிழக்கச் செய்யப்பட்ட விதம் குறித்தும் சொன்னார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை இயங்க வைப்பதன் மூலம் ஐம்பது சதவீதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்று கூறிய அவர், மேலும் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதன் மூலம் 75 சதவீதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்றும் சொன்னார். அரசியலமைப்பின் 154 (G.2) சட்டப் பிரிவிவைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பெற்று கூடுதல் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க முடியும் என்றும் அமைச்சர் தேவானந்தா விளக்கினார். 20 வருடங்களுக்கு மேற்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏனைய மாகாண சபைகளை விடக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டிய தேவை பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

# இலங்கை ஊடகவியலாளர் படுகொலை பற்றியும் அறிக்கை

கடந்த பதினைந்து வருட காலத்தில் உலகளாவிய ரீதியில் 580 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்களென்று பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஈராக்கிலேயே அதிகமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்களென்றும் இதற்கு அடுத்தபடியாக அல்ஜீரியா, ரஷ்யா, கொலம்பியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல், யுத்தம், ஊழல் ஆகியவற்றை அம்பலப்படுத்திய காரணங்களுக்காகவும், பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கும் அறிக்கை இலங்கையில் ஆயுதக் குழுக்கள் ஊடகவியலாளர்களைக் கொன்ற சம்பவங்களையும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

# பேச்சுவார்த்தைக்கு அரசு தயார்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் நோர்வேயை ஏற்பாட்டாளர் பணியிலிருந்து நீக்கவேண்டுமென்று வற்புறுத்தின. ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. தீவிரவாதக் கட்சிகள் எனக்கு அழுத்தம் தருவதால் நான் இனப்பிரச்சினை தீர்வு முயற்சியைக் கைவிட்டு விடுவேனென்று அச்சம் தெரிவிப்பது அர்த்தமற்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருந்தார்.

புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கிறது. ஆனால் பேச்சுவார்த்தைக்கு வரத் தயாரென்று புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தெளிவான உறுதிமொழியொன்று வழங்கவேண்டும். ஏனென்றால் பேச்சுவார்த்தைக்கென ஒஸ்லோ சென்ற தமிழ்ச்செல்வன் அரசாங்கத் தூதுகோஷ்டியுடன் பேசத் தயாரில்லையெனக் கூறிவிட்டுச் சென்ற அனுபவம் எமக்குண்டு என்றும் கூறினார்.

# தோட்டப்புறங்களிலும் இனப்பிரச்சினை வெடிக்கலாம்

தோட்டப் பகுதியிலுள்ள சிங்கள அதிகாரிகளுக்குத் தமிழ் போதிக்கத் தவறினால் வடக்கு, கிழக்குப் பிரச்சினை போன்ற நெருக்கடி விரைவில் தோட்டப் பகுதிகளிலும் ஏற்படும். நுவரெலியா போன்ற பகுதிகளில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லையென்பது வேதனைக்குரியது. தற்போது அரசாங்க சேவையில் உள்ள ஊழியர்களில் ஐந்து சதவீதமானவர்களுக்கு மட்டுமே தமிழ் தெரியும். வடக்கு, கிழக்கிலும் கூட பதினைந்து சதவீதமான அரச ஊழியர்களுக்கு மட்டுமே தமிழ் தெரியும் என்று அரசியல் விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டியூ. குணசேகரா தெரிவித்தார். கண்டி அஸ்கிரிய பிரிவேனாவில் தமிழ் மொழி பயிற்சி பெற்ற பிக்குகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 65,000 பேரைக் கொண்ட பொலிஸ் பிரிவில் 3,000 பேருக்கு மட்டுமே தமிழ் தெரியும் என்றும் அவர் சொன்னார்.

# வெள்ளாங்குளம் கடற்புலி முகாம் நிர்மூலம்

மன்னாரிலிருந்து 33 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள வெள்ளாங்குளம் என்ற பகுதியில் கடற்புலிகளின் முகாமும் தளமும் கடந்த 26ஆம் திகதி காலை விமானப் படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்கானது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கிபீர் விமானங்கள் நடத்திய இத் தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்ட கடற்புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படகுகளும் தளமும் அண்டிய கடற்பரப்பும், தீப்பிடித்து எரிந்து புகை மூட்டமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிருபமா ராவ் - அமைச்சர் அநுரா ஹொரகொல்லவில் சந்தித்துப் பேச்சு



ஹொரகொல்லவில் நடைபெற்ற அமரர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்கா ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரின் சிராத்த தின நிகழ்வில் கலந்து கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ், உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டார நாயக்காவுடன் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. கடந்த 26ஆம் திகதி இந் நிகழ்வு பண்டார நாயக்கா குடும்பத்தினரின் ஹொகரகொல்ல வளவில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமாராவ் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகிறாரென்று பாராளுமன்றத்தில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா ஆற்றிய உரை பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. நிருபமா ராவ் தலை சிறந்த இந்திய இராஜதந்திரி என்றும் அவர் பொறுப்போடு செயற்படுகிறாரென்றும் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சு, அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவின் கூற்றினை நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அநுராபண்டார நாயக்காவின் கூற்று இலங்கை அரசின் கொள்கையல்ல என்று வெளிவிகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தார். அப்பலோ ஆஸ்பத்திரி விவகாரம் தொடர்பாக இந்திய முதலீட்டாளர்களின் நலனைப் பேணும் வகையில் தான் எடுத்த நடவடிக்கை இந்திய முதலீட்டாளர்களின் நலன் சார்ந்தது என்று திருமதி ராவ் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய நிபுணர் குழு நாடு திரும்பியது

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட பிரெஞ்சு தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேரின் பிரேத பரிசோதனைகளில் உதவுவதற்கென இலங்கை வந்திருந்த அவுஸ்திரேலிய நிபுணர் குழு நாடு திரும்பியுள்ளது. இருவரின் பிரேதங்கள் மட்டுமே தோண்டியெடுக்கப்பட்டிருப்பதாகவும், ஏனைய 15 பேரின் சடலங்களைத் தோண்டி எடுக்க காலதாமதமாகும் என்பதாலுமே அவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

சட்ட ரீதியான செயற்பாடுகள் பூர்த்தியாகும்போது அவர்கள் மீண்டும் இலங்கை வருவரெனத் தெரிய வருகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## பயங்கரவாதம், வன்முறை, பிரிவினை இவற்றை இந்தியா ஆதரிக்காது

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

**உலக** நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கும் இந்தச் சூழலில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பயங்கரவாதிகளாக அடையாளம் காணப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளும், அசைவுகளும் திசைக்கு ஒருவரால் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றது.

இந்தியா அதிக கவலையையும், கவனத்தையும் கொண்டிருக்கிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை, இந்தியாவை ஓரம் கட்டிவிட்டு எந்தவொரு நாடும் தனது செயற்பாட்டை கொண்டிருக்க முடியாது என்பதையும் மறுக்க முடியாது. ஆனாலும் இந்தியாவின் கண்ணுக்கு முன்னாலேயே பயங்கரவாதம் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பது இந்தியாவுக்கு விபரிக்க முடியாத அழுத்தத்தை நிச்சயம் வழங்கியுள்ளது. ஆகவே இந்தியா பயங்கரவாதத்தை நசுக்குவதுதான், தன் பிராந்தியத்தில் பிரிவினையையும், வன்முறையையும் இல்லாமல் செய்ய ஒரே வழியாகும்.

எனினும் இலங்கை விவகாரத்தில் இந்தியா இது விடயத்தில் கடுமையான முடிவுக்கு வருமாக இருந்தால், அது தமிழ் மக்கள் விரோத நிலைப்பாடாகவும் திரும்பி விடுமோ என்ற கவலையும், அது தமிழ் நாட்டில் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்ற குழப்பமும் இருப்பதால் இந்தியா அவசரப்படவும் முடியாத இக்கட்டான நிலையை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையின் பெரும்பான்மை அரசியல் தலைமைகளின் கடந்த காலத் தவறுகளும், நிகழ்கால நம்பகத்தன்மையற்ற நிலையும் இந்தியா கொண்டிருக்கும் அமைதிக்குப் பெரும் காரணமாக அமைந்துள்ளது.

இந்தியாவின் இந்த 'கத்தி மேல் பயணத்தை' தமக்குச் சாதகமாக மாற்ற முடியுமா என்பதும் இந்திய அரசோடு நெருங்கியிருக்கிறோம் என்று சர்வதேசத்துக்குக் காட்டுவதனூடாக பயங்கரவாதிகளாகப் பார்க்கும் சர்வதேசத்தின் பார்வையை வேறு திசைநோக்கித் திருப்பமுடியுமா என்ற எதிர்பார்ப்புமே தற்போதைக்குப் புலிகளின் பிரதான நோக்கமாக உள்ளது. இதன் ஒரு முயற்சியாகவே தமது பினாமிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பீ.க்கள் குழுவை புலிகள் இந்தியாவுக்கு அனுப்பி பிரதமரைச் சந்திக்க பெரும் பிரயத்தனம் செய்தனர். எனினும் புலிகளின் முயற்சி வெற்றியளிக்காமல் போய்விட்டது.

இதற்கிடையே இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்காவில் ஈ.பீ.டி.பீ.யின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இது புலிகளுக்கு இந்தியா ஜனநாயகத்தை வலியுறுத்தும் ஒரு செய்தியாகவும், வன்முறைகளையும், முறைகேடுகளையும், பயங்கரவாதத்தையும் இந்தியா ஒரு போதும், எதற்காகவும் ஏற்றுக்கொள்ளாது என்பதையுமே தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக மாற்றுத் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்திய மத்திய அரசின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். (நாபா) அணித் தலைவர் ஸ்ரீதரன் ஆகியோர் குழுவாகச் சென்றுள்ளனர். இந்த அரசியல் நகர்வுகள் இந்தியாவின் புதிய அணுகு முறையின் விரிவாக்கத்தை உணர்த்துகிறது. இலங்கையின் நிகழ்வுகளையும், அதன் விளைவுகளையும் மிகத் துல்லியமாக அவதானித்து வரும் இந்தியாவை இலகுவில் ஏமாற்றலாம், பயங்கரவாதத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு மெல்லத் திருப்பலாம் என்று நினைப்பது பெருத்த ஏமாற்றங்களையே தரும் என்பதை இனியாவது ஒவ்வொருவரும் புரிந்து கொள்வது அவசியமாகிறது.

புலிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கைவிட்டு, ஜனநாயகம், பன்முகத்தன்மை என்பவற்றை மதித்து பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் செயற்பட்டால் இந்தியாவின் ஆதரவைப் பெறுவது ஒன்றும் நடக்காத காரியம் அல்ல. அத்தகையதொரு உண்மையான நோக்கத்துடன் இந்தியாவின் ஆதரவுக்காக ஏங்கும் எவருக்காகவும் இந்தியாவின் வாசல் திறந்தே உள்ளது என்று இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கூறுவது ஏற்கக் கூடியதாகவே உள்ளது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அரசின் சமரச நகர்வும் சர்வதேசத்தின் ஆதரவும்!

**அ**ரசாங்கத் துருப்புகளுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தம், உக்கிரம் பெற்று ஒன்றரை மாதங்கள் உருண்டோடி விட்டன. கடந்த ஆகஸ்ட் பதினொராம் திகதி திருமலை, கிளாலி, முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் புலிகள் நடத்திய தாக்குதலோடு மோசமான யுத்தத்துக்குப் 'பிள்ளையார் சுழி' போடப்பட்டது. மோசமாக வெடித்த யுத்தம் அவ்வப்போது ஓய்ந்து, தணிந்து மீண்டும் அலையாக எழுந்து, ஆங்காங்கே பரவி...மழை விட்டாலும் தூவானம் போகவில்லையென்ற நிலைதான். மோதல்கள் இடி மின்னலோடு ஆங்காங்கே வடக்கு - கிழக்கில் விஸ்தரிக்கப்பட்டிருந்தாலும், அவ்வப்போது இரு தரப்புகளுமே சமாதான சமிக்ஞைகளை வெறும் ஒளிக்கீற்றாக வெளியிட்டு வருகின்றன. யுத்தமும் ஓய்ந்தபாடில்லை. சமாதானப் பேச்சுப் பற்றிய பேச்சுகளும் ஆங்காங்கேயும் அவ்வப்போதும் கேட்டு வருகின்றன.

பி.பி.ஸி. தமிழோசைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடைசியாக அளித்த பேட்டியில், புலிகளுடன் நிபந்தனை யற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாரென்று தெரிவித்திருக் கிறார். ஆனால் பேச்சுவார்த்தைக்கான இணக்கம் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனிடமிருந்தே வரவேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அதாவது, புலிகளின் சமாதான செயலகத் தலைவர் புலித்தேவன், அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் போன்ற இரண்டாம், மூன்றாம் பட்சத் தலைவர்களிடமிருந்து சமாதானப் பேச்சுக்காக வரும் அழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதே ஜனாதிபதி தெரிவித்த கருத்தின் உட்கிடக்கையாகும். நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாரென்று கூறியிருக்கும் ஜனாதிபதி, பிரபாகரனுக்கு நிபந்தனை விதித்திருப்பதைத் தவறென்று கூற முடியாது.

சம்பூரில் அரசாங்கப் படைகளிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட புலிகள், முகமாலை முன்னரங்கப் பகுதிக்குள்ளும் படைகள் முன்னேறத் தொடங்கியபோது, பின்வாங்கிக் கொண்டே பின் கதவு வழியாக, இணைத்தலைமை நாடுகளுக்கு, 'நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார்' என்று அறிவித்தனர். பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸில் கூடிய இணைத்தலைமை மாநாட் டுக்குத் தலைமை வகித்த எரிக் சொல்ஹெய்மும் ஆர்வ மேலீட்டால், அக்டோபர் முதல் வாரத்தில் இரு தரப்புகளுமே சமாதான மேசைக்கு வருமென்றும் அறிக்கை விடுத்தார். ஆனாலும் அரசாங்கமோ, புலிகளோடு சேர்த்து எரிக் சொல்ஹெய்மின் நப்பாசைக்கு ஆப்பு வைத்தது. விமானப் படை குண்டு வீச்சுகளை நிறுத்தவில்லையென்றால், அதனையே போர்ப் பிரகடனமாகக் கருதி பதிலடி கொடுப்போமென்று சண்டித்தனம் விட்ட புலிகளின் தமிழ்ச்செல்வன், பின்னர் அடுப்பங்கரைப் பூனையாகப் படுத்துறங்கி விட்டார். சம்பூரை விட்டு அரசாங்கப் படைகள் வெளியேறி முன்பிருந்த யுத்த நிறுத்த எல்லைக்குத் திரும்பாதவரை, பேச்சுக்கே இடமில்லையென்று ஆர்ப்பரித்த புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன், பின்னர் பேச்சுவார்த்தை குறித்து எதுவுமே பேசாது மௌனத் தவம் இயற்றத் தொடங்கி விட்டார். புலிகளின் சமாதான செயலகத் தலைவர் புலித்தேவனோ, தோல்வியால் துவண்டுபோய், கிலி கொண்டு எலி போல் பதுங்கி விட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக, சண்டையோ சமாதானமோ பிரபாகரனைத் தவிர முடிவெடுக்கும் அதிகாரம் புலிகள் இயக்கத்தில் எவருக்குமே கிடையாது. இதற்குமப்பால், சமாதான சமிக்ஞைகளை விடுமாறு மூன்றாம் தரப் புலித் தலைவர்களுக்குப் 'பச்சைக் கொடி' காட்டுவதும், பின்னர், யுத்தமென்று அபாயச் சங்கூதுவதும் பிரபாகரனின் வாடிக்கையென்பதால் நிபந்தனையற்ற பேச்சுக்கு அழைப்பு விடுத்திருக்கும் ஜனாதிபதி, இந்த நிபந்தனையை விதித்திருக்கிறார்.

புலிகள் ஏற்கனவே பல தடவைகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து விட்டு, அந்த யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தித் தாக்குதல்களுக்கான தயாரிப்புகளைச் செய்த பின்னர், மோதல்களை ஆரம்பிப்பதே அவர்களின் பாரம்பரியமென்பதால் ஜனாதிபதியின் அறிவிப்பை வெறும் வெட்டிப் பேச்சென்று கூற முடியாது. எனவே, நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுக்குப் புலிகள் உண்மையாகவே, விசுவாசமாகவே அழைப்பு விடுத்திருந்தால், ஜனாதிபதியின் இந்த அழைப்புக்கு பிரபாகரன் சாதகமாகப் பதிலளிக்கலாம். ஆனால், பிரபாகரன் பேச்சுவார்த்தைக்குச் சாதகமாகப் பதிலளிக்க மாட்டாரென்பதற்கான அறிகுறி தென்படுகிறது. கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்குப் புலிகளின் ஊடகப் பேச்சாளரான தயா மாஸ்டர் அளித்த தகவல் இதனைத்தான் குறிப்பிடுகிறது. பிரபாகரன் ஓர் இராணுவத் தலைவரென்றும் அவர் என்றுமே சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுப்பதில்லையென்றும் தயா மாஸ்டர் கூறியுள்ளார். பிரபாகரனின் பிரதிநிதியே தமிழ்ச்செல்வனென்றும், எனவே அதற்கான அழைப்பை தமிழ்ச்செல்வன் விடுக்கும்போது அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தயா மாஸ்டர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறாமல், நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் பற்றி எரிக் சொல்ஹெய்ம் அறிவித்தாரென்பதுதான் பிரச்சினையேயொழிய, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வர இரு தரப்புகளுமே இப்போது சம்மதம் தெரிவித்திருக்கின்றன. டோக்கியோ உதவி வழங்கும் இணைத்தலைமை நாடு களில் அங்கம் வகிக்கும் 28 நாடுகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை வரவேற்றுள்ளன என்பது வரவேற்கக் கூடியதே. இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளும் யுத்தம் நிறுத்தப்பட்டு, அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் படுவதையே விரும்புகின்றன. அயல் நாடான இந்தியாவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யுத்தம் வழியல்ல, அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையே ஒரே வழியெனக் கடந்த இருபதுக்கு மேற்பட்ட வருடங்களாக வலியுறுத்தி வருகிறது. அதாவது ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.


வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரா அமெரிக்கா இராஜங்கச் செயலாளர் கொண்டலீசா றைஸை நியூயோர்க்கில் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

இந்தியாவைப் போன்றே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் அரசியல் தீர்வு முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளன. இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ரொனி பிளேயரின் தொழிற் கட்சி அரசாங்கம், விசேட பிரதிநிதியொருவரை அனுப்பவுள்ளதாக இனிப்பான செய்தியொன்றும் அண்மையில் கிட்டியது. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் தேவையான பொருத்தமான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கலாநிதி கொண்டலிசா றைஸ், பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நோர்வே அனுசரணையாளர்களுடன் இணக்கமான வழிமுறையைக் கடைப்பிடிக்க இலங்கை அரசு முன்வர வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். அதாவது, அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதே அமெரிக்காவின் வலியுறுத்தலாகும். இதே வேளை, இலங்கை அரசு மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா பக்கபலமாக இருக்குமென்றும் றைஸ் கூறியுள்ளார். அமெரிக்காவின் நடவடிக்கையாலேயே நியூயோர்க்கில் புலிகளின் ஆயுதக் கொள்வனவு முயற்சி முறியடிக்கப்பட்டமையையும் றைஸ் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள் முறியடிக்கப்படும் அதே வேளை, தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும்.

இலங்கை நிலைவரம் பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் எடுத்து விளக்கி, இலங்கை அரசுக்கு யுத்தத்தை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கப் பாரத நாட்டுக்குப் பாய்ந்து சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள், கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகக் காத்துக் கிடந்து விட்டு நாடு திரும்பியுள்ளனர். புலி இயக்க முகவர்களான தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்க இந்த இருவரும் மறுத்தமை, முக்கிய செய்தியொன்றினைப் புலிகளுக்கு உணர்த்தியுள்ளது. அதாவது, யுத்த நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்புங்கள் என்பதே அதுவாகும். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியப் பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசியமையும் தமிழர் விடுத லைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப். வரதர் அணி ஆகியவற்றின் தலைவர்களை இந்தியா, புதுடில்லிக்கு அழைத்திருப்பது,ம் புலிகளின் ஈரல் குலையை உலுப்பியிருக்குமென்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றொரு விடயம். அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ள இந்தியா, ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பிய தமிழர் தரப்புகளைச் சந்திப்பது, தீர்வு விடயத்தில் இந்தியா காட்டும் அக்கறையையே எடுத்துக் காட்டுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு அரசியல் தலைமையொன்றினைக் கொடுப்பதன் மூலமே, பயங்கரவாத நடவடிக்கைகளை ஓரங்கட்டித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய பாதுகாப்பமைச்சரிடம் எடுத்து விளக்கியுள்ளார். அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாண சபையை மீண்டும் செயற்படுத்தி, மூன்று கட்ட நடவடிக்கைகளூடாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் தமது நிலைப்பாட்டினையும் அவர் எடுத்து விளக்கியுள்ளார்.

புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பினால், அவர்களையும் இணைத்துக்கொண்டு ஏனைய தமிழ் - முஸ்லிம் ஜனநாயக அமைப்புகளோடு இணைந்து புதிய தீர்வொன்றினை முன்வைப்பதில் இந்தியா நாட்டம் காட்டுவது வரவேற்கத்தக்கது. புலிகள் ஆரம்பித்த யுத்தத்தினால் இன்று வடக்கு - கிழக்கில் இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கின்றார்கள். புலிகள் ஆரம்பித்து வைத்த மனித வேட்டையை இன்று வேறு தரப்பினரும் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையே. ஆட்கள் திடீர் திடீரெனக் கடத்தப்படுகிறார்கள். காணாமல் போகிறார்கள். சடலங்கள் வீதிக்கு வீதி வீசப்படுகின்றன. இந்தக் காட்டுத் தர்பார்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். அரசாங்கம், தென்னிலங்கைக் கட்சிகளுக்கு மத்தியில் பொது இணக்கப்பாடொன்றினைக் காண்பதற்கு எடுத்துவரும் முயற்சிகளும் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் .புது விடியலுக்கான நம்பிக்கையைத் தருகிறது. "போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழி, நோர்வேயை விரட்டு, வடக்கு - கிழக்கைப் பிரி" என்றெல்லாம் கூப்பாடு போடுபவர்கள் வெறும் உதிரிகள்தான். 1956இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தினாலும் தமிழ் மக்களுக்கு விசேட அந்தஸ்து வழங்கும் வகையில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அமுல் நடத்த முனைந்தபோது அதனைக் கிழித்தெறிய வைத்த சிங்கள வகுப்புவாத சக்திகள், மீண்டும் அரங்குக்கு வந்துள்ளன. வரலாற்றுப் பாடங்களைக் கற்றுக்கொள்ள மறுக்கும் யுத்த விரும்பிகள், புலிகளைப் போன்று அரசியல் சாக்கடைக்குள் வீசப்படப்போவது மட்டும் திண்ணம்.

## ஊரிலிருந்து....



**ஓ**கஸ்ட் மாதம் 11ஆம் திகதி புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட சம்ருக்குப் பிறகு ஏ9 பாதை மூடப்பட்டுப் போச்சுது. எந்த ஒரு மாவட்டத்திலும் 3 மாதத்திற்குத் தேவையான உணவுக் கையிருப்பு வைச்சிருக்க வேணும். அதவிட இப்ப 6ஆவது கப்பலும் வடபகுதிக்குப் போகுது. இப்ப கேள்வி என்னவெண்டால் 2002 பெப்ரவரி ஒப்பந்தத்திற்கு முன்னரும் 10 வருசத்திற்கு மேல ஏ9 பாதை மூடித்தான் இருந்தது. அப்ப ஒரு கியூ இருக்கேல்லை. தட்டுப்பாடு இல்லை. ஏன் பட்டினியால யாரும் செத்தது எண்டு கூடி ஒரு செய்தி இல்லை எண்ட படியால இப்ப நிலவுற தட்டுப்பாடு ஒரு திட்டமிட்ட ஏற்பாடு எண்டு எல்லோருக்கும் விளங்குது. அவையிண்ட ஒரே நோக்கம் ஏ9 திறக்க வேணும். தங்களுக்கு காசாயும் பொருளாயும் வருமானம் வரவேணும் எண்டது மட்டும் தான். அரசாங்கம் இப்ப என்ன செய்யப் போகுது எண்டதுதான் ஊர்சனத்தின்ர கேள்வி.

# திட்டங்களை தகர்க்கும் புதிய போர்க்களம்!

**யா**ழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துப் பிரச்சினையின் விளைவானது இன்று பல மனிதாபிமானப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. 'ஏ-ஒன்பது' பாதை ஆகஸ்ட் பதினோராம் திகதி ஆரம்பித்த தாக்குதலைத் தொடர்ந்து மூடப்பட்டது. மீண்டும் 'ஏ ஒன்பது' வீதி உடனடியாகத் திறக்கப்படுவதில் நடைமுறைப் பிரச்சினைகள் இருக்கின்றன.

முகமாலையில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடந்த மோதலால் புலிகள் தமது பகுதியைக் கைவிட்டு, பின்வாங்கிச் சென்றுள்ளனர். இந்த நிலையில் படையினருக்கு முகமாலையை மீண்டும் திறந்து விடுவதில் இருக்கின்ற விருப்பத்தை விடவும் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதன் தேவை அதிகரித்து வருகிறது. இது ஒரு புதிய திட்டமில்லை என்பதும் கடந்த காலத்திலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை கைவிடப்பட்டன என்பதும் வடமுனை பிரச்சினைகளைத் தொடர்ந்து அவதானித்து வரும் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய விடயம்தான்.

கடந்த காலங்களைப்போல் இல்லாமல் இம்முறை கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையூடான போக்குவரத்து ஏற்பாடு செய்வதில் படையினருக்குப் பெரும் நெருக்கடிகள் இருந்த போதும் சாத்தியமான வாய்ப்புகளும் இருக்கின்றன. படையினருக்குப் பெரும் விநியோக மார்க்கமாகக் கருதப்படும் பலாலி விமான தளத்தை, அச்சுறுத்தும் பிரதேசமாகக் கொண்டிருக்காமல், அதைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலிலிருந்து நிரந்தரமாகப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது சாத்தியமானால் மட்டுமே, மக்களின் விமான சேவையையும் அச்சமின்றி அனுமதிக்க முடியும் என்பதுவே யதார்த்தமாகும். ஆகவே கேரதீவு - சங்குப்பிட்டி ஊடான பாதை திறப்பு முயற்சி ஆனையிறவு வரையான புலிகளின் பின்னடைவு என்பன படையினரைப் பொறுத்தவரையும், அரசுக்கும் பிரதான தேவையாக மாறியுள்ளது. அதனை நிறைவேற்றும் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் இத்திட்டத்தை முறியடிக்கவும், தமது பிடியை நிலை நிறுத்தவும் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள், எவ்வகையான தாக்குதல்களை தொடுக்கப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு, இலங்கை அரசுக்கும், புலிகளின் வெற்றிக்காகக் காத்திருக்கும் சிலருக்கும் முக்கியத்துவமிக்கதாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தை நோக்கிய புலிகளின் பிரதான தாக்கு தளங்களாக இருக்கும் கல்முனை, பூநகரி, கௌதாரிமுனை, சங்குப்பிட்டி போன்ற பகுதிகளும், நாகர் கோவில், வெற்றிலைக்கேணி, தாளையடி, பளை, இயக்கச்சி, ஆனையிறவுவெளி ஆகிய பகுதிகளும் தற்போதைய வட போர் முனையில் படையினரின் பிரதான இலக்குகளாக இருக்கின்றன. தற்போது நிலவும் தாக்குதல்கள் தொடரப்படுமாயின் மேற்படி இலக்குகளை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகும். இதில் கல்முனை, பூநகரி, கௌதாரிமுனை, சங்குப்பிட்டி போன்ற புலிகளின் தளங்கள் வட போர் முனை தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் அதே வேளை, மன்னாரிலிருந்தும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம். படையினரின் தற்போதைய தாக்குதல் திட்டத்தில் எதிர்காலத்தில் மன்னார் பிரதான பங்கை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

> **புலிகளின் கருத்துப்படி தற்போதைய நான்காம் ஈழப் போரில் கிபீர் தாக்குதலும், மல்டி, எறிகணை வீச்சும் மட்டும்தான் தங்களால் சமாளிக்க முடியாதுள்ளது. ஆனால் அதைக்கூட எதிர்கொள்ளக்கூடிய ஆயுதத் தளபாடங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் தமக்குக் கிடைத்துவிடும் என்றும், ஆயுதக் கப்பல்கள் வந்து சேர இருப்பதாகவும் புலிகள் புதிய பிரசாரம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கின்றனர். புலிகளால் தற்போதைக்குச் சொல்லக்கூடிய ஆகக்கூடிய உறுதிமொழி இதுவாகத்தான் இருக்க முடியும்.**

புலிகளைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் வகுத்துக் கொண்ட தாக்குதல் திட்டங்கள் தற்போதைய போர்க்களத்தில் படுதோல்வியடைந்துள்ளன. இனியும் தோல்வியடையும் என்ற கருத்துக்களும் இருக்கின்றன. கடந்த காலத்தில் புலிகள் வகுத்த தந்திரோபாயங்கள் அத்தனையையும் படையினர் தற்போதைய களத்தில் மிகத் துல்லியமாகக் கவனித்ததையும், அதை எதிர்கொண்ட விதத்தையும் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது. தற்போதைய வடபோர் முனையில் ஆயிரம் பேருக்கும் அதிகமான உறுப்பினர்களைப் புலிகள் இழந்துள்ளனர். இந்த இழப்பும், பின்னடைவும் வன்னியிலும், புலம் பெயர்ந்து வாழும் மக்கள் மனதிலும் புலிகள் குறித்த சந்தேகத்தையும், விமர்சனத்தையும் அதிகப்படுத்தியுள்ளது. இந்தக் குழப்பத்தைச் சரி செய்வதும் புலிகளுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

புலிகளின் கருத்துப்படி தற்போதைய நான்காம் ஈழப் போரில் கிபீர் தாக்குதலும், மல்டி, எறிகணை வீச்சும் மட்டும்தான் தங்களால் சமாளிக்க முடியாதுள்ளது. ஆனால் அதைக்கூட எதிர்கொள்ளக்கூடிய ஆயுதத் தளபாடங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் தமக்குக் கிடைத்துவீடும் என்றும், ஆயுதக் கப்பல்கள் வந்து சேர இருப்பதாகவும் புலிகள் புதிய பிரசாரம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கின்றனர். புலிகளால் தற்போதைக்குச் சொல்லக்கூடிய ஆகக்கூடிய உறுதிமொழி இதுவாகத்தான் இருக்க முடியும். புலிகளின் நிலைப்பாட்டில் இந்தக் கருத்து நியாயமானதுதான். ஆனால் இலங்கையைச் சுற்றியுள்ள கடல்வலயத்தில் முன்னரைப் போலல்லாமல் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணியில் இலங்கைக் கடற்படையினர் மட்டுமல்லாது, அயல் அண்டை நாடுகளின் கண்காணிப்பும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. புலிகளைக் கொடூரமான பயங்கரவாத அமைப்பாக வெளிக்காட்டிய விடயத்தில் அயல் நாடுகளினதும், சர்வதேச நாடுகளினதும் கவனத்தை இலங்கை அரசு கணிசமான அளவு பெற்றுள்ளது. இதன் எதிரொலியாகவும் இலங்கையின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் அவர்களின் செல்வாக்கு அதிகரித்திருப்பதை உணர்ந்து கொள்ள முடியும். அண்மையில் கல்முனைக் கடலில் சுமார் 120 கடல் மைல் தொலைவில் அடையாளம் காணப்படாத புலிகளின் ஆயுதக் கப்பல் என்று கருதப்படும் கப்பல் படையினரின் விரைந்த நடவடிக்கையால் தாக்கி அழிக்கப்பட்டது. இந்தக் கப்பல் அழிப்பு நடவடிக்கையில் கடற்படையினரும், விமானப் படையினரும் காட்டிய ஈடுபாடும், ஒத்துழைப்பும் தற்போதைய போர் நடவடிக்கைகளில் முப்படையினரும் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதனைக் காட்டுகிறது. ஆகவே எதிர்காலத்தில்,



முகமாலை முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்தும் படையினர்.

முப்படையினரின் கூட்டுத் தாக்குதல்களைப் புலிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முப்படையினருக்கும் தேவையான சில முக்கிய திட்டங்களை வழங்கவும், ஒத்துழைக்கவும் வெளி உதவியும் தயாராகவே இருக்கின்றது. தற்போதைய தாக்குதல்களின் உச்சக் கட்டமாக எதிர்பார்க்கப்படுவது, புலிகள் கொண்டிருக்கும் தற்கொலைப் படைத் தாக்குதல்கள்தான். இதைக்கூட போர்க்களத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்ற திட்டங்கள் தற்போதைக்கு வகுக்கப்பட்டிருக்கின்றன. புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் என்பது கடல் வழியாகவும் இருக்கலாம், தரை வழியாகவும் இருக்கலாம். இரண்டு மார்க்கத்திலும் தற்காப்பு மற்றும் தாக்குதல் வியூகங்கள் மிகத் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஒரு தாக்குதல் நடத்தப்படும் போது புலிகள் பெரும் இழப்புக்களை நிச்சயம் எதிர்கொள்வர் என்பது திட்ட வரைவாளர்களின் திடமான நம்பிக்கையாக இருக்கிறது.

இதற்கிடையே இந்தியாவுக்கு தமது பிரமுகர்களை அனுப்பி இந்திய அரசை கோபம் தணியச் செய்யும் முயற்சிகளும் புலிகளுக்குப் பெரும் பின்னடைவையும், அரசியல் முதிர்ச்சியின்மைக்குப் பெருத்த அவமானத்தையும் கொடுத்துள்ளன. இந்தியாவுக்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் சென்றதானது உடனடி நடவடிக்கை அல்ல. நீண்ட திட்டமிட்ட தந்திரமான நகர்வு என்பதை இந்திய அரசு நன்கு புரிந்து கொண்டுள்ளதாகவும் அறிந்துகொள்ள முடிகிறது.

தாக்குதல் நடைபெறப் போவதாக இரவோடு இரவாகப் பிரசாரம் செய்து, இதற்குத் தோதாக மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், படைத்தரப்பையும் தாக்கிய புலிகள், படையினரின் எதிர்த் தாக்குதல்களை மக்களை நோக்கித் திருப்ப எடுத்த முயற்சியின் பயனாகப் பெரும்பாலும் கிழக்கு மாகாண மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாகப் போனார்கள். பெரும்பாலானவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அதை அங்கிருக்கும் சில அரசியல் கட்சிகளைக் கொண்டு ஒரு உணர்வுபூர்வமான விடயமாக - உருக்கமாகப் பிரசாரம் செய்து அவற்றை ஊடகங்களில் முக்கிய பங்கு வகிக்கும்படியாகப் பார்த்துக் கொண்டனர். ஊடகங்களினதும், அரசியல் பிரமுகர்களினதும் பிரசாரங்கள் மெள்ள ஓய்வு நிலைக்கு வரவும், அந்தச் சரிவை சரி செய்யும் திட்டத்தோடு மனிதாபிமான பிரச்சினை என்ற போர்வையில் இந்திய அரசின் கவனத்தையும் திருப்ப முயற்சித்தனர். புலிகளின் இந்தத் தொடர்ச்சியான நகர்வுகளைக் கூர்ந்து அவதானித்த இந்திய அரசு புலிகளின் நோக்கத்தைச் சரியாக உள்வாங்கிப் பிரதிபலித்துள்ளது. என்னதான் உலகத்தைச் சுற்றி புலம் பெயர்ந்து போன மக்களை மூளைச் சலவை செய்த போதும், அருகிலிருக்கும் இந்தியாவை திருப்திப்படுத்த முடியாத பின்னடைவு, புலிகளுக்கும் - புலிச்சார்பு சக்திகளுக்கும் ஏமாற்றமும் அவமானமுமாகும். இதற்கிடையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூற்றுப்படி இலங்கையில் இரண்டு தேசங்கள் இல்லை. ஆகவே எல்லைகளும் இல்லை என்பதாக உள்ளது. இந்தக் கருத்து, மிகப் பாரதூரமான உள் அர்த்தத்தைக் கொண்டதாகவே அரசியல்

அலசுவது

**- மதியூகி -**

ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது. எனவே இனி தாக்குதல்கள் தொடரப்படுமாயின் புலிகள் தமது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசங்கள் எனக் கூறும் பல பகுதிகளை இழக்க நேரிடும். புலிகளுக்குத் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் பாதுகாப்பதே பெரும் போராட்டமாக இருக்கப் போகிறது. தாக்குதலுக்கான ஆயத்தத் திட்டமிடல்களோடு இடங்களைப் பாதுகாக்கும் திட்டங்களும் புலிகளால் சமாந்திரமாக வகுக்கப்படுகிறது. இன்னொரு ஆயுதக் கப்பல் வர முடியாத சூழலில், ஆயுதக் கப்பல் வரும் என்று எதிர்பார்த்து தாக்குதலை நடத்தாமலும் இருக்க முடியாத இக்கட்டானநிலை உருவாகியுள்ளது. இன்றைய நிலையில் புலிகள் மிரட்டும் வலுவைக்கூட இழந்து விட்டனரோ என்று மக்கள் கருதுகின்றனர்.

## அதிரடி அய்யாத்துரை



"**மதியாதார்** வாசல் மிதியாதிங்கோ" எண்டுவினம். நான் நினைக்கிறன் உந்த மொழி தமிழிலதான் இருக்கெண்டு. தமிழில இருந்து என்ன பயன்? எங்கட சனத்துக்கு உதின்ர அர்த்தம் விளங்குதில்லையே! சனம் எண்டு யாரைச் சொல்லுறன் எண்டு உங்களுக்கு விளங்கியிருக்கும். அதுவேற யாருமில்லை, கூத்தமைப்புக்காரர்தான். அவையள் அண்டை நாட்டுக்குப் போன நாளில இருந்து ஊடகங்கள் தங்கட ஊகத்துக்குச் செய்தி சொல்லிச்சினம். இந்தா பிரதமரைச் சந்திக்கப் போகினம், சென்னையில இருந்து டெல்லிக்குப் போயிட்டினம். டெல்லியில இருந்து பஸ் ஏறிட்டினம், பஸ்ஸில இருந்து ரிக்கட் எடுக்காமல் இறங்கிட்டினம் எண்டெல்லாம் நேரடி வர்ணனை குடுத்திச்சினம். ஆனால் அங்க அப்புடி ஒண்டும் நடக்கயில்லை. டெல்லியில இருக்கிற பிரதமரையோ, சென்னையில இருக்கிற முதல்வரையோ சந்திக்காமல் திரும்பினதுதான் மிச்சம். அதிலையும் தங்களை அடுத்த வருடமாவது பிரதமர், சந்திப்பார் எண்டு நம்பினமாம். உவைக்கு ஒண்டுதானுங்கோ சொல்வன், ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம் எண்டது மாதிரி, அமெரிக்காவில வச்சு வீணைக் கட்சியின்ர தலைவர் தேவமானவரை சந்திச்சு, தமிழ் மக்களின்ர உண்மையான நிலைமை என்ன என்பதை தெளிவாகக் கேட்டுப் புரிஞ்சு கொண்டுதான் அண்டை நாட்டுப் பிரதமர் நாடு திரும்பினவர் எண்டதை இவை புரிஞ்சு கொண்டால் சரிதான் எண்டினமுங்கோ...

**அதிகாரமானவர்** பதவிக்கு வந்து கொஞ்ச நாளைக்குள்ளேயே வாய்ப்புகளை சரியாப் பாவிச்சு சர்வதேசத்தில பல உயர் தலைவர்களைச் சந்திச்சு, தான் கொண்டிருக்கும் சமாதான விருப்பத்தையும் அதுக்கு எதிராகச் செயல்படும் பயங்கரவாதத்தைப் பற்றியும் தெளிவுபடுத்தியிருக்கார் எண்டு அதிகாரமானவரோட பயணம் செய்து திரும்பியிருக்கிற அதிகாரிகள் சொல்லினமுங்கோ. அணிசேரா நாடுகள் கூட்டத்திலையும், ஐக்கிய நாடுகள் கூட்டத்திலையும் அதிகாரமானவர் ஆற்றின உரைகள் உலகத் தலைவர்கள் மட்டத்தில மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்குங்கோ. அது மட்டுமில்லாம தனித் தனியான சந்திப்புகளும் நடத்தியிருக்காராம். எல்லாமுமே கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் ரெண்டெழுத்தார் சில்லறைத்தனமாக அரசுக்கு எதிராகச் செய்த அத்தனை பிரசாரங்களையும் துடைச்சு எறிஞ்சு உலக நாடுகள் இலங்கையை ஒரு அனுதாபத்தோடை பார்க்கும் நிலையை அதிகாரமானவரின்ர உந்தப் பயணம் ஏற்படுத்தியிருக்காம். அப்புடிப் பார்க்கேக்க செலவானதாகச் சொல்லப்படும் பணம் பிரயோசனமாகத் தானுங்கோ செலவு செய்யப்பட்டிருக்கு எண்டு சொல்லினமுங்கோ...

**தலைநகரில** வர்த்தர்களையும், தமிழ் பேசிறவையையும் கடத்தினம் எண்ட பிரச்சினையை தூக்கி எதிர்ப்புக்காட்டி கருத்துச் சொல்லிக் கொண்டு திரிஞ்ச எங்க மண்ணெண்ணெய்யாரைக் காணோமே. எங்க போயிட்டார் எண்டு விசாரிச்சால், அவரும் அடிப்படையில ஒரு வியாபாரி. அப்புறம் தான் அவர் எம்.பி. எண்டதாலை அவரையும் உந்தக் கடத்தல்காரர் தூக்கினாலும் தூக்குவினமோ எண்ட பயத்திலை ஆள் நாட்டை விட்டு வெளியேறிட்டாராம். உப்பிடித்தான் முன்னம் ஒருக்கால் அவரை ரெண்டெழுத்தார் போடப்போகினம் எண்டொரு கதையும் ஒரு சம்பவமும் நடந்த உடன நாட்டைவிட்டு ஓடிப்போனவர். அதே போலை இப்பவும் தற்காப்பா பயணம் ஒண்டைச் செய்திருக்காராம். அது சரி, யாராக இருந்தாலும் தன்னைத் தான்தான் காப்பாற்றிக் கொள்ளவேணும். விஷயம் அதில்லையுங்கோ. மண்ணெண்ணெய்யாரின்ர சகோதரம் புது பிஸினஸ் ஒண்டை யாழ்ப்பாணத்தில செய்யிற முயற்சியில இறங்கியிருக்காராம். யாழ்ப்பாணத்துக்கு வர்த்தகர்களும் சமான்களை அனுப்பலாம் எண்டு அ.அதிபர் அறிவிச்சிருக்காரெல்லோ. உதைத் தொடர்ந்து சில வர்த்தகர்கள் ரெண்டெழுத்தாரை பகைச்சுக் கொண்டால் வில்லங்கமே எண்டு யோசிக்கினமாம். ஆனால் இவர் சகோதரம் பரம்பொருள் ஈஸ்வரனார் யாழ்ப்பாணத்துக்கு மிக முக்கியமான பொருளை அனுப்பி தாகம் தீர்க்கப்போறாராம். இன்னும் புரியில்லையே. பரம்பொருள் அனுப்ப இருக்கிறது மன்மத பானம் மதுபானமுங்கோ. அங்க சனத்துக்கு சாப்பாடு சட்டுமுட்டு எப்புடியோ கிடைக்குது. மன்மத பானம்தான் தட்டுப்பாடு எண்டு அதை அனுப்பிவைக்க ரை பண்ணுறாராம்...ம்...தமையன் மண்ணெண்ணெய், சகோதரம் மன்மத பானம். எப்புடிங்கோ தொழில் கொடி கட்டிப் பறக்குதெல்லோ.

**நாட்டில** தங்குதடையில்லாம நாளுக்கு அஞ்சுக்கு மேற்பட்ட படுகொலையும் தாக்குதலும் சீராக நடந்து கொண்டிருக்கெண்டது உண்மைதான். ஆனால் சில ஊடகங்கள் மீதி வன்முறையை தமிழ் சனத்தின் மீது நடத்தினமெண்டதை அதிகாரமானவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு செவ்வி குடுக்கேக்க விரிவாச் சொன்னவர்.

அது நூறு வீதம் உண்மை தானுங்கோ. சில தமிழ் ஊடகங்கள் தங்கட விருப்பத்துக்கு செய்தி சொல்லினம். ஒரு செய்தி கிடைச்சால் அதை உறுதிப்படுத்திற நடைமுறையெல்லாம் இல்லாமல் தாறுமாறா நடந்து கொள்ளினமுங்கோ. அண்மையில குடாநாட்டில இருக்கிற ஊடகங்களை அழைத்த படைத்தரப்பு, ஒரு சந்திப்பு நடத்தினவையாம். அதில அன்பாக சொல்லியிருக்கினமாம். இனிமேல் அந்த அமைப்பு இந்த அமைப்பு எண்டு அநாமதேயக் கடிதங்களையெல்லாம் போட்டு சனத்தின்ர இயல்பு வாழ்க்கையைக் குழப்பாதேங்கோ. மாணவர்களின்ர படிப்பைக் குழப்பாதேங்கோ எண்டு. உப்பிடிச் சொன்னாப் பிறகும் தலைநகரில தலைமைக் காரியாலயங்களைக் கொண்டிருக்கிற ரெண்டு பத்தி ஊடகக்காரர் வம்பு பண்ணுமாப் போல, அவர் சொன்னார் இவர் சொன்னார் எண்டு தொடர்ந்து சனத்தைக் குழப்புற செய்திகளைப் போட்டுக் கொண்டிருக்கினமாம் எண்டு இனியாச்சும் யாழ்ப்பாணத்தில அமைதி திரும்பட்டும் எண்டு விரும்புற சனம் சொல்லினமாமுங்கோ...

**சிவப்புச்** சட்டைக்காரரும், நீலச் சட்டைக்காரரும் மாறி மாறி குடும்பிப் பிடி சண்டை பிடிக்கினம். அதை சக்தியான தொலைக்காட்சிக்காரரும், அதின்ர சகோதரத் தொலைக்காட்சிக்காரரும் அதி முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பினம். "ஊர் குழம்பினால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" எண்ட மாதிரி உந்த தொலைக்காட்சிக்காரரின்ர பிழைப்பும் கொண்டாட்டமாயிடுச்சுது. முன்னமெல்லாம் அவை ஒரு நல்லதைச் சொன்னாலும் செக்கன் கணக்கிலையும் காட்டமாட்டினம். இப்ப சண்டை பிடிக்கினம் எண்டதும் முழுமையா இடம் கொடுக்கினம். சிவப்புச் சட்டைக்காரரும் தாங்கள் என்ன பொஸிசனில இருந்து என்ன செய்யிறம் எண்டதை யோசிக்காமல் வாய்க்கு வந்ததையெல்லாம் மேடையில வாந்தி எடுக்கினம். ஒரு காலத்தில அவை மேடையில முழங்கினா அதில ஒரு சுவாரஸ்யம் இருக்கெண்ட சனம், இப்ப அவையின்ர கதையைக் கேட்டால் பைத்தியம் பிடிக்கும் எண்டினம். இனி எண்டாலும் மேடையில வாந்தி எடுக்கிறவை யோசிச்சுப் பேசுங்கோ...

# புகையிரதம்




**அடிக்கடி** வேலை நிறுத்தம் செய்யப்படுகின்ற இலாகாவாக இன்று புகையிரத சேவையும் மாறிவிட்டது. புகையிரதத்தைப் பற்றிக் கனவு காண்பதே மகிழ்ச்சிக்குரியதுதான். சிறு வயதில் புகையிரதப் பயணம் என்பது எவருக்கும் சந்தோசம் தரக்கூடியதுதான். புகையிரதத்தைப் பார்த்து இன்னும் நான் வியக்கிறேன். அத்தனை பெட்டிகளையும் இழுத்துக் கொண்டு இரண்டு தண்டவாளங்களில் எத்தனை வேகமான பயணம்.

அதே போல் புகையிரதங்கள் சந்திக்கும் விபத்துக்களும் எப்போதும் அகோரமானவை தான். ஒரு சாதாரண பஸ் வண்டியைப் போல் ஒரு பெட்டி என்று பார்த்தாலும் 10,12 பெட்டிகளை ஒன்றாக இணைத்துக் கொண்ட புகையிரதம் நம்மைக் கடந்து பயணிக்கும் அழகு சொல்லில் அடங்காதது.

ஒரு வகையான கறுப்பு அட்டை மற்றும் மட்டைத் தேள் ஆகிய பூச்சிகளைக் காணுகின்ற போது, அவை புகையிரதத்தைப் போல் துண்டு துண்டாக அசைந்து பயணிப்பது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அதைப் பார்த்துத்தான் புகையிரதத்தைத் தயாரித்தார்களோ என்று கூட எண்ணத் தோன்றும். புகையிரதத்தை "ஏழைகளின் விமானம்" என்று கூறுவார்கள். ஏழைகளுக்கு விமானப் பயணம் எப்போதும் ஒரு நல்ல கனவுதான். ஆனால் புகையிரதப் பயணம் எப்போதோ ஒரு நாள் சாத்தியப்படக்கூடியது.

எனது முதல் பயணம் ஊரிலிருந்து சித்தப்பாவின் திருமணத்திற்காக கொழும்புக்கு வந்தது. மூன்றாம் இலக்கப் பெட்டியில்தான் அப்பா பயணத்துக்கான அனுமதியை பெற்றிருந்தார். அப்பா அரசாங்க உத்தியோகத்தர் என்பதால் பயணச் சீட்டு வைத்திருந்தார். ஊரிலிருந்து பயணம் புறப்பட்டு கொழும்பு வரும்வரைக்கும் கல்லோயா வரை சிறிய கிராமங்களில் இருக்கும் அத்தனை புகையிரத நிலையங்களின் பெயர்ப் பலகைகளையும் நான் வாசித்துக் கொண்டே வந்தேன். கல்லோயாவுக்குப் பிறகு நான் பார்த்த பல சிறிய ஊர்களும் பெயர்களும் இப்போது மறந்து விட்டது.

பின்னர் நீண்ட நாட்களுக்குப் பிறகு கொழும்பிலிருந்து ஊருக்குப் போகும்போது எனக்கு 25 வயதிருக்கும். அப்போதும் சிறு வயதுக்காலம் போலவே ஊர்களையும், பெயர்களையும் வாசித்துக் கொண்டே போனேன்.

புகையிரதப் பயணத்தில் இரண்டு வசதிகள் உண்டு. ஒரே இடத்தில் இருக்க விரும்பாவிட்டால், பக்கத்துப் பெட்டிகளுக்குப் போய் கொஞ்சம் சுற்றிக் கொண்டு வரலாம். இன்னொன்று ஊர் போய் சேரும் வரை பக்கத்திலிருப்பவரிடம் சொல்லி விட்டு சாய்ந்து தூங்கலாம். புகையிரதப் பயணத்தின் போது எப்போதும் திருடர் பயம் இருந்து கொண்டே இருக்கும். புகையிரதத்தில் திருடன் ஒரு அலுவலரைப் போல, நல்ல குடிமகனைப் போலவே இருப்பான். அவனது தோற்றம் வெளிப்படுத்தும் அந்த நல்லபிப்பிராயம் நாம் அசந்துவிடும் வரைதான்.




சிலர் புகையிரதப் பயணம் என்று முடிவு செய்துவிட்டாலே பிடித்தமான எழுத்தாளர்களின் நாவல்களையும் எடுத்து வைத்துக் கொள்வார்கள். இது பொதுவாகவே பெண்களுக்குத்தான் பொருந்தும். ஏனென்றால் அநேகமான சந்தர்ப்பங்களில் ஆண்கள் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தையோ, பத்திரிகையையோ தூக்கி முகத்தை மூடிக் கொண்டு தூங்கிவிடுவார்கள்.

விமானம், பஸ் வண்டி என்பவற்றிலெல்லாம் அருகில் சக பயணிகள் இருப்பார்கள். எதிரில் இருப்பவரின் முதுகுப் பக்கம் தான் நமக்குத் தெரியும். ஆனால் புகையிரதத்தில் எதிரே இருப்பவர் நம்மைப் பார்த்து ஒரு பொருள் இல்லாத புன்னகையைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக நேருக்கு நேராக இருப்பார்.

ஒரு மெல்லிய புன்னகையால் உருவாகிற நட்பு மெல்ல நெருக்கம் வளர்த்து புகையிரதம் நிறுத்தப்படும் இடங்களில் பழங்கள் வேண்டித்தரவும், தண்ணீர் பிடித்துத் தரவும் உதவும். இந்த நட்பு அநேகமாக அவரவர் ஊர் வந்து இறங்கிக் கொள்ளும் வரைதான். ஒரு சிலர் மட்டும், அதற்குப் பின்னரும் தொடர்புகொள்ள விரும்பி, தொலைபேசி இலக்கத்தையோ, முகவரியையோ தந்துவிட்டுப் போவார்கள். அந்த நண்பர்கள் இளம் வயது ஆணும் பெண்ணுமாக இருந்தால் ஒரு சந்தர்ப்பத்துக்குப் பிறகு கூட வந்த உறவினர்கள் உறங்கமாட்டார்களா என்று நினைத்துக் கொள்வார்கள். அந்தப் புகையிரதப் பயணம் வீட்டுக்கு வந்து ஒரு கிழமையாகியும் ஞாபகத்தில் இருக்கும். ஒவ்வொரு நாள் நித்திரையின் போதும் தலையணைக்குக் கீழாக ஒரு புகையிரதம் பயணித்துக் கொண்டிருப்பது போல் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும்.

பார்வைகளும், புன்னகைகளும், மௌனங்களும் பறிமாறப்பட்டுக் கொண்டிருக்கையில், "பார்லி பார்லி, வடே வடே, ரெட்ட கஜு ரெட்டகஜு, ஆ இருங்கு இருங்கு, தோஸி தோஸி, இஞ்சி தோஸி, தெம்பிலி தெம்பிலி" என்று கத்திக் கூவிக்கொண்டு புகையிரத நிம்மதியைக் கெடுத்துக் கொண்டு ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கும். அவர்கள் முகத்தில் எப்போதும் ஏமாற்றுத்தனம் ஏறி அமர்ந்திருக்கும். சில சமயம் பராயமடையாத சிறுவர்களும் அந்தப் புகையிரத வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பார்கள்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## நம்பிக்கையைச் சிதறடிக்கும் சூரியன்

இலங்கையிலுள்ள தனியார் வானொலிகளில் செய்திகளை உடனுக்குடனும் நம்பகத் தன்மையுடனும், தருவதில் சூரியன் எப்.எம்.தனியிடத்தைப் பிடித்திருப்பது வரவேற்புக்குரியதுதான். எனினும் அண்மைக் காலங்களில் சில விடயங்களில் சூரியனின் செய்திகளில் சில நம்பகமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. உதாரணமாக 20-09-2006 அன்று காலை முதல் மாலை வரையான செய்தியில் இந்தியா சென்றுள்ள கூட்டமைப்பு எம்.பி.க்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை அன்றையதினம் அல்லது மறுநாள் சந்தித்துப் பேசவுள்ளதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் அன்றிரவு பி.பி.சி. தமிழோசையில் இதுபற்றிக் கூறிய இந்திய செய்தியாளர் ஒருவர், கூட்டமைப்பினர் பிரதமரைச் சந்திப்பது தொடர்பாக இதுவரையிலும் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்று தெளிவாகக் கூறியிருந்தார். எனவே இவ்வாறான உறுதிப்படுத்தப்படாத அல்லது உண்மைக்குப் புறம்பான செய்திகளை வழங்குவதன் மூலம் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு விளம்பரப் பிரசாரம் செய்கிறார்களோ! என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் உண்மையாக வழங்கப்படுகின்ற செய்திகளில் கூட சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே இனிவரும் காலங்களிலாவது சூரியன் செய்திகளில் நேயர்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மையைச் சிதறடிக்கும் வகையில் செய்திகள் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு எனது அபிமான வானொலியான சூரியன் எப்.எம்.நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

*-ப.கஜன், மட்டக்களப்பு.*

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையாள
மகா வசிய மாந்திரீகம்..
ஸ்ரீ மகா பத்திரகாளித்
தாயின் அருளைப்
பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**
பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**
*வீடு, வியாபார விருத்தி *விவசாய விருத்தி
*நோய் நொடி சுகப்படுத்தல்
*விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
*தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
*குழந்தைப் பாக்கியம் கிட்ட
*விலைபோகாத காணிகள் விற்பனையாக
*எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
*ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
*மண் பரீட்சை செய்தல் *பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்
P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

## விளம்பரப் பகுதி

**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
P.K.சாமி (J.P.) ஐயா


**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
P.K.சாமி (J.P.) ஐயா.

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.


ஜோதிட தத்துவ ஞானி
P.K.சாமி (J.P.) ஐயா

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

ABI Beauty Parlour



உங்கள் அழகினை மேம்படுத்திக்கொள்ள சிறந்த இடம்
Abi Beauty Parlour
Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Watts Removing....
பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன முற்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்.
No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)




புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகளைக் குறிப்பிட்ட வெளிநாட்டு அரசாங்கப் புலனாய்வுப் பிரிவினரும் அமெரிக்க அதிகாரிகளும் கூட்டாக இணைந்து நடத்திய விசாரணை பற்றியும் லண்டனிலிருந்து பெருந்தொகைப் பணம் இலங்கைக்கு அனுப்பப்பட்டமை பற்றியும் அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடவடிக்கைகள் பற்றி விசாரணை நடத்தத் தேவையில்லையென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆகியவை அனுப்பி வைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருந்தார். 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஸ்ரீஸ்கந்தராஜாவும் ரமணன் மயில்வாகனமும் பிரித்தானியக் கம்பனியொன்றிடமிருந்து நீர்மூழ்கி, மற்றும் யுத்தக் கப்பல் தொடர்பான மாதிரி வடிவ மென்பொருட்களை கொள்வனவு செய்ய முயற்சித்தார்கள். இக் கம்பனியின் இணையத்தளத்தின் படி பிரித்தானிய மத்திய அரசுடன் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியெனத் தெரியவருகிறது. அதன் நோக்கம், யுத்தம் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் பற்றிய மாதிரி ஆய்வுகளைச் செய்வதாகும். இதற்கான மென்பொருட்களைப் பெறுவதற்கு இருபத்திரெண்டாயிரம் பவுண்களைச் செலவழிக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். ஒரு நீர் மூழ்கியின் மாதிரி வடிவத்தை கணனியில் அமைப்பது தொடர்பான விபரங்களைப் பெறுவதே

முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஸ்ரீஸ்கந்த ராஜாவுக்கும் மயில்வாகனத்திற்கும் ஏற்பட்டிருந்தது. ஒரு மின்னஞ்சலில் மயில்வாகனம் கீழ்கண்டவாறு ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

'அவர்கள் என்னிடம் பல கேள்விகளைக் கேட்கிறார்கள். என் மீது அவர்கள் சந்தேகப்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே அவர்களுக்கு நல்ல முறையில் பதிலளிக்க வேண்டியுள்ளது. நாம் எதற்காக அதைப் பயன்படுத்தப் போகிறோம் என்பது குறித்து நீரோ அல்லது வேறு யாராவது இது குறித்து நன்கு தெரிந்த ஒருவரோ விளங்கப்படுத்தினால் நல்லது' என்று குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த ஸ்ரீஸ்கந்தராஜா, 'பாடசாலை நிகழ்ச்சித் திட்டமொன்றுக்குத் தேவையான மென்பொருள்' என்று விளங்கப்படுத்துமாறு குறிப்பிட்டிருந்தார்.

# அமெரிக்கா, பிரிட்டனிலிருந்து வன்னிக்கு ஆயுதங்கள்?

**அமெரிக்காவின்** மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினரால் (எப்.பி.ஐ.) நியூயோர்க்கின் கிழக்கு மாவட்ட நீதிபதி முன்னிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்று, புலிகள் இயக்கம் அமெரிக்காவிலும் கனடாவிலும் மேற்கொண்டு வந்த கள்ளத்தனமான ஆயுதக் கொள்வனவு, ஆட்கடத்தல்கள், நிதி மோசடிகள் மற்றும் பல கிறிமினல் நடவடிக்கைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. 1999ஆம் ஆண்டு முதல், கூட்டுப் பயங்கரவாதச் செயலணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட எப்.பி.ஐ. அதிகாரிகளும் ஏனைய சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும் நடத்திய விசாரணைகளில், புலிகள் இயக்கத்துக்கு உதவிகள் வழங்கி வருவதன் மூலம் அமெரிக்காவின் கிறிமினல் சட்டத்தை மீறும் தனிநபர்கள் பற்றியும் நன்கொடை நிறுவனங்கள் பற்றியும் கண்டறிந்தனர். கடந்த மாதம் கனடாவிலும் அமெரிக்காவிலும் ஆறு தமிழர்கள் கைது செய்யப்பட்டமை, புலிகள் இயக்கத்தின் சட்டவிரோத நடவடிக்கைகள் பலவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வந்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமென 1997ஆம் ஆண்டு முதல் புலிகள் இயக்கம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பல நாடுகளிலும் இந்த இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் புலிகள் இயக்கம் அமெரிக்காவில் சட்டரீதியாக நிதி சேகரிக்கவோ ஆயுதங்களையோ வேறு பொருட்களையோ கொள்வனவு செய்யவோ முடியாது.

வீரகத்தி மணிவண்ணன் அல்லது காஸ்ட்ரோ என்றழைக்கப்படுபவரே புலிகளின் சர்வதேசத் தொடர்பாடல் பணியகத்துக்குப் பொறுப்பாகவுள்ளார். அமெரிக்காவிலும் கனடாவிலும் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட ஆறு தமிழர்களும், புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசியாவிலுள்ள புலி இயக்க முக்கியஸ்தர்களுக்குமிடையிலான முக்கிய தொடர்பாளர்களாக விளங்கினர். சுரேஷ் என்றழைக்கப்படும் சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா, திருக்குமாரன், சிவசுப்பிரமணியம், டாக்டர் மூர்த்தி என்றழைக்கப்படும் டாக்டர் முருகேசு விநாயகமூர்த்தி, சந்துரு என்று அல்லது விஜயசந்தர் பத்மநாதன் என்றழைக்கப்படும் நாச்சிமுத்து சோக்கிரட்டீஸ், ரமணன் மயில்வாகனம் ஆகியோரே இந்த அறுவருமாவர். புலிகளின் சிரேஷ்ட ஆதரவாளரான டாக்டர் மூர்த்தி, இலங்கையிலுள்ள புலிகளின் தலைமைத்துவத்தோடு அடிக்கடி தொடர்பு கொள்பவர் மட்டுமல்லர், புலிகள் இயக்க வேலைகளைக் கையாள்வதற்காக உலகின் பல நாடுகளுக்குச் சென்று வருபவருமாவர். சுரேஷ், சந்துரு, ரமணன், திருகுமாரன் சின்னத்தம்பி, திருக்குமாரன் சிவசுப்பிரமணியம் ஆகிய அனைவரும் வட அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

புலிகள் இயக்கத்தை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் போலப் பாசாங்கு செய்த, புலனாய்வு அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க டாக்டர் மூர்த்தியும் சந்துருவும் முனைந்ததோடு, புலிகள் சம்பந்தமான இரகசியத் தகவல்களையும் பெற முனைந்துள்ளனர். கடந்த வருடம் டிசம்பர் இரண்டாம் திகதி வாக்கில் சந்துரு, இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் போல் நடித்த எப்.பி.ஐ.அதிகாரிகள் இருவரைச் சந்தித்தார். எப்.பி.ஐ. அதிகாரியொருவருக்கு ஆயிரம் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகக் கொடுத்த சந்துரு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்பாக மற்றொரு நாட்டுடன் இணைந்து அமெரிக்க அதிகாரிகள் நடத்திய புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்றினைப் பார்வையிட்டார். தமிழர்


புலிகளின் ஆர்.பி.ஜி படையணி

டிசம்பர் 3ஆம் திகதி சந்துரு சிரேஷ்ட புலி உறுப்பினர் ஒருவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, முதல் நாள் நடந்த சந்திப்புப் பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்பான ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் எடுத்து விளக்கினார். அத்துடன் தன்னைச் சந்தித்த இராஜாங்கத் திணைக்கள அதிகாரியிடம் மேலதிக விபரங்களைப் பெறுவதற்காக வருடாந்தம் ஐம்பதாயிரம் டொலர்களை வழங்குவது பற்றியும் பேசினார். டிசம்பர் 10ஆம் திகதி வாக்கில் டாக்டர் மூர்த்தியோடு தொடர்பு கொண்ட சந்துரு, புலனாய்வு அறிக்கையில் தான் பார்த்த அறிக்கை தொடர்பாக அவருக்குத் தெரிவித்தார். இந்தச் சம்பாஷனையைப் புலனாய்வு அதிகாரிகள் ஒலிப்பதிவு செய்து கொண்டனர். இவர்களுடன் நடத்திய சம்பாஷணையூடாக எப்.பி.ஐ.க்கு புலிகளின் ஆயுதக் கொள்வனவு பற்றிய விபரங்கள் இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் போல் நடித்த இரகசியப் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

புலிகளுக்காக ஏவுகணைகள், ஆயுதங்கள் பொறியியல் கருவிகள் ஆகியவை கொள்வனவு செய்யும் வேலைகளில் சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா, சின்னதம்பி சிவசுப்பிரமணியம், மயில்வாகனம், டாக்டர் மூர்த்தி ஆகியோர் ஈடுபட்டனர். கனடாவில் வாழ்ந்து வந்த சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா இவர்களுக்கு உதவியாகச் செயற்பட்டார். சுரேஷ் மாணவர்களைப் பயன்படுத்தியே இலங்கையிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு ஆயுதங்களைக் கடத்தி வந்தாரென்ற விடயம் எப்.பி.ஐ. அதிகாரிகளுக்குத் தெரிய வந்தது. ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி வாக்கில் மூன்று மாணவர்களுக்கு சுரேஷ் அனுப்பிவைத்த மின்னஞ்சலொன்று, இலங்கைக்கு அவர்களது உத்தேச விஜயம் பற்றியும் கொழும்பு விமான நிலையத்தில் அதிகாரிகளுக்குப் பொய் கூறி எவ்வாறு தப்பித்துச் செல்வது என்பது பற்றியும் விளங்கப்படுத்தியிருந்தது.

இக்கருவிகளை எவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடத்திச் செல்வது என்பது பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார். புத்தகங்கள், கணனிகள் மற்றும் பொருட்கள் அவர்களின் நோக்கமாகும். இந்த நீர்மூழ்கி பற்றிய விபரங்களுக்கு 'சொலிட் மொடலர்' என்று பெயரிடப்பட்டிருந்தது. இராணுவ உபகரணங்கள் தொடர்பான தகவல்களைப் பெற ஏன் முயல்கிறார்கள் என்ற அதிகாரிகளின் கேள்விக்கு

*'அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவின் வலையில் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும்' என்ற தலைப்பில் பிரெட்றிகா ஜான்ஸ் என்ற பத்திரிகையாளர் 'சண்டே லீடர்' பத்திரிகையில் கடந்த 24ஆம் திகதி வெளியிட்டிருந்த கட்டுரையில், அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் புலிகள் இயக்கத்தவர்கள் மேற்கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகள் பல பற்றிக் குறிப்பிட்டிருந்தார். புலிகள், ஆயுதக் கடத்தலோடு ஆட்கடத்தல்களில் ஈடுபடுவது பற்றியும் மாணவர்களைப் பயன்படுத்தி வன்னிக்குக் கருவிகளைக் கடத்துவது, தொழில்நுட்ப விபரங்களைக் கொண்டு செல்வது போன்ற தகவல்கள் பலவற்றையும் அம்பலப்படுத்தியிருந்தார். அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கே சுருக்கித் தரப்படுகிறது.*

கனடாவிலுள்ள, பிரிட்டிஷ் கொலம்பியா கம்பனியொன்றிடமிருந்தும் இரவு நேரத்தில் பயன்படுத்தக்கூடிய சுடுகலன்களைப் பெறும் முயற்சியிலும் ஸ்ரீஸ்கந்தராஜாவும் மயில்வாகனமும் ஈடுபட்டனர். தமது பல்கலைக்கழகத்தில் நான்காவது வருட மாதிரி வடிவத் திட்டத்திற்கு இந்தக் கருவிகள் தேவையென்று மயில்வாகனம் அக்கம்பனியின் பிரதிநிதியிடம் தெரிவித்திருந்தார். 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி அனுப்பிய மின்னஞ்சலொன்றில் 'டவர்ஸ்' என்றழைக்கப்படும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வது பற்றியும் ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்ட விபரங்கள் புலனாய்வு அதிகாரிகளிடம் சிக்கியுள்ளன. டவர்ஸ் கருவிகளை வாங்க உயரம், இடைவெளி, சோதனைச் சாவடியொன்றில் அதனை நிர்மாணிக்க முடியுமா? அது அமைக்கப்பட வேண்டிய இடத்தின் உயரம் எவ்வளவு போன்ற விபரங்களையும் அவர் கேட்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் ராய்பியோன் விமானக் கம்பனியுடன் தொடர்பு கொள்வது பற்றிய தகவல்களையும் ஸ்ரீஸ்கந்தராஜா, புலிகள் இயக்கத்துக்கு வழங்கியிருந்தார். இக் கம்பனி இராணுவக் கட்டுமானப் பணியில் ஈடுபடும் ஒன்றாகும். 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி ஸ்ரீஸ்கந்தராஜா புலிகளுக்கு அனுப்பி வைத்த செய்தியில் தனது தொடர்பு பற்றி கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். 'போக்குவரத்து ராடார் கருவிகளை இக்கம்பனி உற்பத்தி செய்கிறது. அவர் அதிகம் பேசுகிறார். ஆனால் அவர் செய்வது வெகு குறைவு.... அவரிடமிருந்து ஏதாவது பயன்பெற முடியுமா என்று பாருங்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.


திருக்குமாரன் சின்னத்தம்பி தனது வங்கிக் கணக்கைப் பயன்படுத்தி புலிகளுக்கு நிதி சேகரிப்பிலும் நிதி வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கிறார். அத்துடன் தொழிநுட்பக் கருவிகளைப் பெறுவதற்கு உதவியும் செய்திருக்கிறார். இதனைப் போன்ற பல்வேறு வகையில் இவர் புலிகளுக்கு உதவி புரிந்திருக்கிறார்.

—நன்றி :- சண்டே லீடர்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

'**தம்பி!** நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியுது. நம்ம பாட்டையெல்லாம் சினிமாவ்ல யாரு எடுத்துப்பாங்கன்னு நீங்க சந்தேகப்படுறீங்க, அந்த சந்தேகமே உங்களுக்கு வேணாம். நீங்க அருமையா எழுதுறீங்க..." உங்களைவிட மகாமோசமாப் பாட்டு எழுதுறவனெல்லாம் இப்ப சினிமாவுக்குள்ள வந்துட்டான்," - என்று வெற்றிலையை மடித்து



வாயில் திணித்தவாறே,....

"அத்தை மடி மெத்தையடி"

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்."

"புன்னகை என்ன விலை?" -

"இப்படியெல்லாம் இப்ப மட்டரகமான பாட்டுக்கள் வர்ற ஆரம்பிச்சுடுச்சு, எவனோ ஒருத்தன் 'வாலி' ன்னு, இப்ப புதுசா வந்திருக்கிறான். விஸ்வநாதன் - ராமமூர்த்திகிட்ட அவன்தான் நிறைய்ய எழுதுறான். பாட்டெல்லாம் ஒரே கட்சிப் பாட்டா இருக்கு... அந்த வாலிய விட - நீங்க எம்புட்டோ தேவலே... விவரமா எழுதுறீங்க." - என்று சி.எஸ்.ஜெயராமன் சொல்லி முடிப்பதற்கும் எங்கள் கார் திண்டிவனத்தில் ஒரு டீக்கடை எதிரே நிற்பதற்கும் சரியாக இருந்தது.

டிரைவர் டீ குடிக்கப் போனவுடன் நானும் ஜெயராமனும் சிறிது மௌனமாக சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

திடீரென்று ஒரு பத்துப் பதினைந்து பள்ளி மாணவர்கள் "டேய்! கார்ல உட்கார்ந்துகிட்டிருக்கிறது கவிஞர் வாலிடா... வாங்கடா ஆட்டோகிராப் வாங்கலாம்..." என்று கூச்சலிட்டவாறே ஓடி வந்து காருக்குள் நோட் புக்கை நீட்டி என்னிடம் கையெழுத்துக் கேட்க-

நான், வாழ்த்துக்கள் வாலி என்று அனைவருக்கும் கையொப்பமிட்டுக் கொடுத்தேன்.

அவர்கள் போன பின், திடீரென்று திரு.சி.எஸ்.ஜெயராமன் அவர்கள் என் இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு- "தம்பீ! நீங்கதான் வாலீன்னு தெரியாம பேசிட்டேன். ஆமாம். நீங்களாவது உங்க பேரைச் சொல்லியிருக்கக்கூடாதா?" என்று ஒருவித பாசத்தோடு கேட்டார்.

"என் பேர் என்னன்னு, நீங்க கேக்கவேயில்லையேண்ணே! அதனாலதான் நானும் சொல்லல்லே... ஆமாம் ராமமூர்த்தி அண்ணன் உங்ககிட்ட என்னெப்பத்தி ஒண்ணுமே சொல்லலியா?" என்று நான் அவரை வினவினேன்.

"என் சினேகிதரு, திருச்சிக்காரரு- வருவாறு.. கச்சேரிக்கு ஒத்துக்கங்க... - என்று தான் சொன்னாரு" - இதைச்சொல்லி விட்டு, உடனே பின் சீட்டில் என் அருகே வந்து அமர்ந்து கொண்டார் திரு.ஜெயராமன்.

அப்போது நான் அவருக்குச் சொன்னேன்: "அண்ணே! யாராச்சும் என் பேரைக் கேட்டாத்தான் வாலின்னு சொல்லிக்குவேனே தவிர- மத்தபடி, நானா முந்திக்கிட்டு சொல்ல மாட்டேன்... நான் யாருன்னு- என் பாட்டு சொல்லனும்... அதுதான் என் கொள்கை!"

இசைச் சித்தர் சிறிது மௌனம் காத்துவிட்டு "காவேரித்தண்ணிக்கே கொஞ்சம் குசும்பு ஜாஸ்தி..." என்று செல்லமாக என் கன்னத்தைக் கிள்ளினார்.

சிலர், தானாக முன்வந்து தன்னை யாரென்று காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

1964- இல் நடந்த இன்னொரு நிகழ்ச்சி இன்னமும் நெஞ்சில் பசுமையாக நிறம் காட்டிக் கொண்டிருக்கிறது.

தென்காசி திரு.சங்கரன், திரு.ஆறுமுகம் இருவரோடு இணைந்து திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் 'சத்யா மூவீஸ்' என்னும் நிறுவனத்தைத் தொடங்கி- எம்.ஜி.ஆர்.நடிக்க 'தெய்வத்தாய்' படத்தை துவக்கியிருந்த சமயம்.

(தொடரும்.......)




# மீண்டும் திருமணம்



**பி**ரபல அவுஸ்திரேலிய நடிகையான நிக்கோல் சிட்மன் அண்மையில் திருமணம் செய்து கொண்டார். 38 வயதுடைய இவர் நியூசிலாந்து நாட்டுப் பாடகரான கீன் அர்பனனையே திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இவர்கள் இருவரும் முதற்தடவையாக லொஸ் ஏஞ்சல்ஸில் 2005ஆம் வருடம் ஜனவரி மாதம் சந்தித்துக் கொண்டார்களாம்.

நிக்கோல் இதற்கு முன்பதாக பிரபல நடிகர் அடாம் குரூஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். 10 வருடங்கள் கொண்ட இவர்களது திருமண வாழ்வு 2001ஆம் வருடம் முடிவிற்கு வந்தது.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை போலும்.

# அர்ப்பணிப்பு




**23** வயதுடைய பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது இரண்டாவது குழந்தையையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இம்மாதம் 12ஆம் திகதி அதிகாலை 2.00 மணியளவில் இக்குழந்தை பிறந்துள்ளது.

முதலாவது குழந்தையின் முதலாவது பிறந்த தினத்திலிருந்து இரு நாள் கழித்து இரண்டாவது குழந்தை பிறந்துள்ளது.

பிரிட்னியின் புகைப்படங்களுக்கு எப்போதுமே பெரும் மதிப்புண்டு. இதனால்தான் இவர் இரண்டாம் முறை கர்ப்பம் தரித்திருந்த போது, நிர்வாண புகைப்படங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்தார். இந்தப் புகைப்படம் இப்போதும் கூட ஜப்பான் புகையிரத நிலையம் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாம்.

# பந்தாடியவரின் மனைவி



**பி**ரேஸில் நாட்டின் மொடல் அழகியான டெனியெலா சிக்கரெல்லி இவர்.

பிரபல மொடல் அழகியாக விளங்கும் இவர், லிமா நகரில் இடம்பெற்ற ஒரு கண்காட்சியில் இப்படித் தோன்றுகிறார்.

இவருக்கு இன்னுமொரு பெருமையும் உண்டு. அதாவது, பிரேஸில் நாட்டின் பிரபல உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோவின் முன்னைய மனைவி இவர் தான்!

**பி**ரபல பாடகியான ஜெனிபர் லோபஸ் கவர்ச்சி விஷயத்தில் திறந்த கொள்கையைப் பின்பற்றி வருபவர்.


இப்போது இவருக்கு ஒரு தலையிடியான சம்பவம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தலையிடியைக் கொடுத்து வருபவர் வேறு எவருமல்ல, இவரது முன்னாள் கணவர்.

அதாவது, ஜெனிபர் லோபஸும் தானும் வாழ்ந்த இல்லற வாழ்க்கையைப் படம் பிடித்து வைத்துள்ள இவரது முன்னாள் கணவர், அதை வைத்துக் கொண்டு இவரை மிரட்டி வருகிறாராம். எப்படியெல்லாம் மிரட்டி வருகிறார்கள்!

# இப்படியும் மிரட்டல்!



**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




**இ**வர்களின் பழைய தொடர்புகளைப் பயன்படுத்தி பாதுகாப்பு, இராணுவ ரகசியங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள அந்த நிறுவனங்கள் முயற்சிக்கும் போது விஷயம் சிக்கலாகி விடுகிறது.

உத்தியோகம் பார்க்கும் நோக்கத்தோடுதான் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் முதலில் பொறுப்பை ஏற்கிறார்கள். நிறுவனங்கள் அவர்களுக்கு பல விதமான வசதிகளைப் செய்து கொடுத்து சலுகைகளையும் அளிக்கின்றன. பெரும் தொகையும் ஆசை காட்டப்படுகின்ற போது அவர்கள் தங்களை அறியாமலே சில சபலங்களுக்குப் பலியாகி விடுகிறார்கள். இந்த மனித பலஹீனத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் திறமையாக பயன்படுத்திக்கொண்டு விடுகின்றன.

ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் மூன்றாண்டுகளுக்கு எந்த பொறுப்பும் வகிக்கக்கூடாது என்று சட்டமிருந்தாலும் அந்த சட்டம் தங்களை பாதிக்காதவாறு எப்படி செயல்படுவது என்று ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகளுக்குத் தெரியும். அதிகார பூர்வமற்ற ஆலோசகர்களாக முதலில் இவர்கள் செயல்படத் தொடங்கினார்கள். மூன்றாண்டுகளுக்குப் பிறகு அதிகாரபூர்வமற்ற தொடர்பு, அதிகாரபூர்வமான பதவியாக மாற்றம் பெற்று விடுகிறது.

இந்தியப் பாதுகாப்புத்துறை தனக்கு தேவையான ஆயுத தளவாடங்களையும் உதிரி பாகங்களையும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறது. வெளிநாட்டு நிறுவனங்களும் சட்டபூர்வமான அங்கீகாரத்தோடு தான் இங்கே செயல்படுகின்றன.

பாதுகாப்புத்துறை ஏனைய துறைகளைப் போல தங்களுக்குத் தேவையானவற்றை பெறுவதற்கு டெண்டர்கள் கேட்டு விளம்பரம் செய்வதில்லை. ஆகவே பாதுகாப்புத்துறைக்குத் தேவையானவற்றை சப்ளை செய்யும் தகுதி படைத்த நிறுவனங்கள் பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் சென்று அவ்வப்போது தகவல் கேட்டுப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இது சாதாரணமாக கிடைத்து விடுமாதலால் பிரச்சினைகள் தோன்ற வழியில்லை. வேண்டியவர்கள் என்றும் - வேண்டாதவர்கள் என்றும் - தங்களை முறையாகக் கவனித்துக் கொள்ளுகிறவர் என்றும் - கவனித்துக் கொள்ளாதவர்கள் என்றும் அதிகாரிகள் பேதம் காட்டும் பொது ஊழலும் தலைகாட்டத் தொடங்குகிறது. பெரும் தொகைகள் கை மாறுகின்றன.

ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகளுக்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகளோடு ஏற்கனவே நெருக்கமான தொடர்பு இருக்கும். இதனால் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் மூலம் பாதுகாப்புத்துறையிடம் காரியங்களை சாதித்துக் கொள்வது சுலபம். பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பணம் பெற்று காரியங்கள் செய்கின்றவராக இருந்து விட்டால் உளவாளிகள் ஊடுருவி ரகசிங்களை அறிந்து கொள்வதற்கான சூழ்நிலையும் தானாகவே தோன்றிவிடுகிறது.

ஆக நம்முடைய பாதுகாப்புத்துறை தனக்குத் தேவையான தளவாடங்களை வாங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகளில் சில அடிப்படையான மாற்றங்கள் தேவைப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. இதைத்தான் ஓய்வு பெற்ற சில இராணுவ அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள்.

உளவாளிகள் கண்டுபிடிக்கப்படும் போது பத்திரிகைகளில் பரபரப்பூட்டும் செய்திகளாக அவை வெளிவருகின்றன.

குற்றப் பத்திரிகை தாக்கல்
(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


# மாலைதீவில் திடீர் புரட்சி இந்திய இராணுவம் அடக்கியது

**மாலைதீவு** என்ற குட்டி நாட்டில் திடீர் புரட்சி ஏற்பட்டது. அதை இந்திய இராணுவம் அடக்கியது.

## சிறிய நாடு

இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு அருகே உள்ள குட்டி நாடு மாலைத்தீவு. 1,196 சிறிய தீவுகளைக் கொண்ட இந்த நாட்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மையான அளவில் வசிக்கிறார்கள் மொத்த மக்கள் தொகை சில இலட்சம்.

1887ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து நாட்டு ஆட்சியின் கீழ் இருந்து வந்த இந்த நாடு 1965ஆம் ஆண்டுதான் விடுதலை அடைந்தது.




இந்த மாலைதீவு தற்போது சார்க் (தெற்காசிய நாடுகள் ஒத்துழைப்பு) அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்றாகும்.

## ஜனாதிபதி கையூம்

மாலைத்தீவு ஜனாதிபதியாக மாமுன் அப்துல் கையூம் இருந்து வந்தார். 1988ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற தேர்தலில் அவர் 3ஆவது முறையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நவம்பர் 11ஆம் திகதி அவர் பதவி ஏற்பதாக இருந்தார்.

இந்த நிலையில் 3.11.1988 அன்று அந்த நாட்டில் திடீர் புரட்சி நடந்தது. அதிகாலை 4.30 மணிக்கு, ஆயுதம் தாங்கிய நூற்றுக்கணக்கான இளைஞர்கள் 2 கப்பலில் மாலைத்தீவு நாட்டு தலைநகரான மாலேயில் வந்து இறங்கினர். அவர்கள் ஜனாதிபதி மாளிகையையும், இராணுவத் தலைமை நிலையத்தையும் மற்றும் முக்கிய கேந்திரங்களையும் தாக்கினார்கள்.

ஜனாதிபதி கையூம், அவரது அண்ணனும், இராணுவ மந்திரியுமான இப்ராகிம் இலியாஸ், கையூமின் மைத்துனரும், ஜனாதிபதி விவகார மந்திரியுமான அப்பாஸ் இப்ராகிம் ஆகியோரை புரட்சிக்காரர்கள் சிறை பிடித்து விட்டதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

ஆனால் ஜனாதிபதி கையூம், புரட்சியாளர்கள் நடத்திய தாக்குதலின்போது தப்பி பாதுகாப்பான இடத்தில் மறைந்து இருப்பதாக பின்னர் கூறப்பட்டது.

## புரட்சியாளர்கள் யார்?

புரட்சியை நடத்தியவர்கள் மாலைதீவைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், கறுப்பு நிறம் கொண்ட அவர்கள் தமிழ், சிங்களம் உட்பட பல மொழிகள் பேசியதாகவும் கூறப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து கொழும்பு வழியாக மாலைத்தீவுக்கு புறப்பட்ட சரக்குக் கப்பலில்தான் இந்த ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் மாலே நகருக்கு வந்ததாகக் கருதப்பட்டது.

ரேடியோ, டெலிவிஷன் நிலையங்களை புரட்சிக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். விமான நிலையமும் மூடப்பட்டது.

## வீதிகளில் துப்பாக்கிச் சண்டை

மாலே நகர வீதிகளில் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்தது. அதில் 20 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தார்கள்.

## புரட்சியாளர்கள்

2 ஆயிரம் பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தனர். மாலைதீவு அரசாங்கம் சரண் அடை யாவிட்டால், 2 ஆயிரம் பேரையும் கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள்.

## இந்தியா உதவிக்கரம்


தலைமறைவாக இருந்த ஜனாதிபதி கையூம் ரகசியமாக டெலிபோன் மூலம் இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் உதவி கேட்டார். அந்தச் சமயத்தில் பிரதமர் ராஜிவ் காந்தி பீகாரில் சுற்றுப்பயணம் செய்து கொண்டு இருந்தார்.

உடனே தனது சுற்றுப்பயணத்தை இரத்து செய்துவிட்டு, ராஜிவ் காந்தி டெல்லி திரும்பி வந்து ஆலோசனை நடத்தினார்.

## இந்திய இராணுவம் சென்றது

மாலைத்தீவில் புரட்சியை அடக்கவும், ஜனாதி பதியை காப்பாற்றவும் சில போர்க் கப்பல்களையும், போர் விமானத்தையும் அனுப்ப உத்தரவிடப்பட்டது.

விமானத்தில் இருந்து பாரசூட் மூலம் குதிக்க, பயிற்சி பெற்ற 1,600 வீரர்கள் புனா நகரில் இருந்து திருவனந்தபுரத்துக்கு அனுப்பப்பட்டார்கள். பிறகு, அங்கிருந்து போர் விமானங்களில் இரவோடு



இரவாக மாலைத்தீவு சென்றார்கள். தென் பிராந்திய கப்பல் படையைச் சேர்ந்த 3 போர்க் கப்பல்களும் விரைந்தன.

## புரட்சிக்காரர்கள் தப்பி ஓட்டம்

இந்தியப் பாரசூட் படையினர் இரவு 10.30 மணிக்கு மாலைதீவில் சென்று இறங்கியதும், புரட்சிப் படையினர் அவர்களுடன் மோதாமல் படகுகளில் ஏறித் தப்பிச் சென்றார்கள்.

போகும்போது புரட்சியாளர்கள், மாலைதீவு போக்குவரத்து மந்திரி அகமது மஜூலி யாவையும், மேலும் 25 பேரையும் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுவிட்டனர்.

புரட்சியாளர்கள் மாலைத்தீவுக்கு வந்த கப்பல் சேதம் அடைந்துவிட்டதால், அவர்கள் படகுகளில் தப்பினார்கள். அவர்களை இந்தியக் கடற்படை விரட்டியது.

## மந்திரி மீட்பு

இலங்கை கடற்பகுதி அருகே இந்தியக் கடற்படையினர் புரட்சிக்காரர்களின் படகை சுற்றி வளைத்தார்கள். மாலைத்தீவு மந்திரி மஜூலியாவும் மற்றவர்களும் மீட்கப்பட்டார்கள்.

புரட்சிக்காரர்கள் சிறை பிடிக்கப்பட்டு மாலைதீவு அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## அமைதி திரும்பியது

ஜனாதிபதி கையூம் பதுங்கி இருந்த இடத்துக்கு இந்திய இராணுவம் சென்று அவரைக் காப்பாற்றியது. 4 மணி நேரத்தில் இந்திய இராணுவம் மாலைதீவை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

புரட்சிக்காரர்கள் தோல்வி அடைந்து ஓடியதைத் தொடர்ந்து, மாலே நகரில் அமைதி நிலவியது. கடைகள் திறக்கப்பட்டன. ஒரு நாள் முழுவதும் வீடுகளில் பதுங்கி இருந்த மக்கள் தைரியமாக சாலைகளில் நடமாடத் தொடங்கினர்.

இராணுவ தலைமை நிலைய சுவர்களில் துப்பாக்கி குண்டு பாய்ந்த அடையாளம் தவிர புரட்சி நடந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. இராணுவ தலைமை நிலையம் மட்டும் படுசேதம் அடைந்தது. ஜனாதிபதி மாளிகைக்கு சேதம் எதுவும் இல்லை.

புரட்சியை அடக்கிய நடவடிக்கையின்போது இந்திய இராணுவ தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. இந்திய வீரர் ஒருவர் கூட காயம் அடையவில்லை.

## ஜனாதிபதி நன்றி

மாலைதீவு ஜனாதிபதி கையூம் டெலிபோன் மூலம் ராஜிவ் காந்தியுடன் தொடர்பு கொண்டு நன்றி தெரிவித்தார். வானொலிமூலம் அந்நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய போதும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு, கையூப் நன்றி தெரிவித்தார்.

புரட்சி அடங்கியதும் இந்திய வீரர்கள் விமானம் மூலம் திரும்பினார்கள்.

## தூண்டியது யார்?

வெளிநாட்டில் தங்கி இருக்கும் 3 தொழில் அதிபர்களே கூலிப்படையை அமைத்து புரட்சி நடத்தினார்கள் என்று மாலைதீவு அரசு கூறியது.

மாலைதீவில் ஏற்கனவே 1980, 1983ஆம் ஆண்டுகளில் 2 முறை புரட்சி மூண்டு, அது முறியடிக்கப்பட்டது. 1988இல் நடந்த 3ஆவது புரட்சியும் ஒரே நாளில் முறியடிக்கப்பட்டு விட்டது.

---




**த**ன்னை ஆசை நாயகியாக்கி அதன் பின் தன் மனைவியாக்கியிருக்கும் விமானப்படைத் தளபதி இன்னும் தன்னுடன் கதைக்க வேண்டி நிறைய இருந்தது. அவற்றையெல்லாம் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். அடுத்த நாள் காலை அவர் அமெரிக்கா செல்லவேண்டிருந்தது. எனினும் அவர் அடுத்த நாளே அவளை தன்னுடன் வரவேண்டாம் என்று சொல்லியிருந்தார். ஆயினும் அவள் அதற்கு உடன்பட்ட மாதிரி தெரியவில்லை. எனவே அவள் அடம்பிடித்துக் கொண்டிருந்தாள். 'சரி நாளை நீயும் என்னுடன் வா' என்றார். இரவு முழுக்க இருவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே இன்னும் கதைக்க வேண்டியிருந்தது. இரவு முழுவதும் அவர்கள் தூங்கவில்லை. அதிகாலை நேரம் தன் பிரத்தியேக அறைக்குச் சென்ற விமானப்படைத் தளபதி அங்கு தனது பொருட்களை ஒழுங்காக அடுக்கி வைத்தார். தனது கடிதத்தை எடுத்துக் கொண்டார். அதனை மறுபடியும் சரி பார்த்தார்.



அப்போதுதான் கவனித்தார். கடிதத்தை தான் மடித்தது போல் இராமல் இருப்பதைக் கண்டார். என்ன ஆகியிருக்கும் என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார். யார் தன் அறைக்கு வந்தது என்று அவர் மிகவும் குழம்பிப் போயிருந்தார். தனது மெய்க்காப்பாளர்களை மீறி யார் இங்கு வரப்போவது என்று யோசித்த படியே தனது மெய்க்காப்பாளர் ஒருவரை அவர் அழைத்தார். உள்ளே வந்தவனிடம் தன் அறைக்குள் யார் வந்தது என்று வினவினார். அவன் உடனே மன்னிக்க வேண்டும் நான் நேற்றிரவு ஹோட்டல் அறையில் உங்கள் பாதுகாப்பிற்காக நின்றேன் என்றான். அவனை உடனே அனுப்பிவிட்டு தன்னுடன் மிகவும் நெருங்கிய மெய்ப்பாதுகாவலனான ரிக்கினை அழைத்தார். அவனிடம் அவர் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார். அது போல் ரிக்கும் எப்போதும் அவருக்கு விசுவாசமுடையவனாகவே இருந்து வந்தான். ரிக்கிடம் கேட்ட போது, உங்கள் அறைக்கு ஜனாதிபதி ஜோன்சன் வந்தார். சில நிமிடங்கள் உங்கள் அறையில் உங்களுக்காக காத்துக் கொண்டிருந்தார். பின் கோபத்தோடு சென்று விட்டார். என்று உண்மையைக் கூறினார். ஜனாதிபதி தன்னிடம் ஏன் வந்தார் என்று யோசித்தார் விமானப்படைத் தளபதி. அத்துடன் அவர் தான் இந்தக் கடிதத்தை வாசித்திருக்க வேண்டும் என்று முடிவுக்கும் வந்தார். ஏற்கனவே இருந்த தளபதிகளுக்கு என்ன ஆகியது என்று விமானப்படைத் தளபதி நன்கு அறிந்து வைத் திருந்தார். ஆனாலும் எப்படியாவது இக்கடிதத்தை அமெரிக்க ஜனாதிபதியின் கையில் சேர்த்து விட வேண்டும் என்று எண் ணினார். ரிக்கிடம் தன்னுடைய நிலமையை விளக்கினார் விமானப்படைத் தளபதி. கடுமையாக யோசித்த ரிக், நாளை நீங்கள் செல்லவிருக்கும் உலங்கு வானூர்தியை மாற்றிவிடுவோம். எனக்கு என்னவோ உலங்கு வானூர்தியில் ஏதாவது சதி நடந்திருக்கும் என்று தோன்றுகிறது என்றார். அவன் சொல்வது தளபதிக்கும் சரியாகவே பட்டது. உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய் என்றார். அத்துடன் இக்கடிதத்தின் பிரதியை நான் உனக்குத் தருகிறேன். அப்படி எனக்கு ஏதாவது நடந்தாலும் நீ இதை எப்படியாவது அமெரிக்க ஜனாதிபதியிடம் சேர்த்து விடு என்றார்.

அவனை அனுப்பிவிட்டு யோசனையில் இருந்த அவர் தனது உயிருக்கு எப்படியாவது ஆபத்து நேர்ந்து விடும் என்று எண்ணினார். இரவோடு இரவாக தான் சேர்த்த சொத்துக்களை தன் மகன் பேரிலும் தனது ஆசை நாயகி பெயரிலும் எழுதி எல்லாவற்றையும் தபாலில் சேர்த்தார். தன் கடைசிக் காலத்தை எப்படியெல்லாம் கழிக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டே தூங்கிப் போனார். அதிகாலையில் எழுந்த அவர் போவதற்கு தாயாராகிக் கொண்டே ரிக்கினை அழைத்து பயண ஏற்பாடுகளைக் கேட்டார். ரிக்கின் ஏற்பாடுகளை பார்த்த விமானப்படைத் தளபதி ஒரு கணம் தன்னை யாரும் இனி ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணிக் கொண்டார். ரிக்கின் ஏற்பாடுபடியே தான் செய்வதாகக் கூறிக்கொண்டார். அந்த ஏற்பாடுகளில் எந்த வித மாற்றத்தையும் அவர் செய்யவில்லை. அதே வேளை தான் சென்ற பின் என்ன இங்கு நடக்கிறது என்பதை உடனே தனக்கு அறிவிக்கும்படி கூறினார். தான் சென்று மீளாவிட்டால் எல்லாவற்றையும் நீயே நின்று பார்க்க வேண்டும் என்றும், எனக்கு அடுத்த நிலையில் இருப்பவன் நீ தான் என்றும் விமானப்படைத் தளபதி கூறினார். அது மட்டுமல்ல நீ என் விசுவாசி என்பதை வெளியில் காட்டிக்கொள்ளாதே. எனக்கு வரும் ஆபத்து உனக்கும் சேர்ந்து வரும் என்றும் விமானப்படைத் தளபதி கூறி விட்டு, ரிக்கினை ஆரத் தழுவிவிட்டு உலங்கு வானூர்தியில் ஏறினார். பாதுகாப்பு



நிமித்தம் விமானப்படைத் தளபதியின் நாயகி அவருடன் செல்லவில்லை. எந்த வித பாதிப்பும் இல்லாமல் விமானப்படைத் தளபதி கிளம்பிச் சென்றார். அவர் சென்று 5 நிமிடங்களின் பின் அவர் முதலில் செல்லவிருந்த உலங்கு வானூர்தியும் கிளம்பிச் சென்றது. அரை மணித்தியாலங்களில் அவர் செல்லவிருந்த உலங்கு வானூர்தி வெடித்துச் சிதறியது. இதை எதிர்பார்த்த ஜனாதிபதி ஜோன்சன் விமானப்படைத் தளபதி இறந்து விட்டார் என்று நினைத்துக் கொண்டார். உடனே அமெரிக்காவிற்கு தகவல் அனுப்பினார். வியட்கொங் இராணுவத்தினரால் விமானப்படைத் தளபதி கொல்லப்பட்டுவிட்டார் என்று அச் செய்தியிருந்தது.

அமெரிக்காவில் ஜனாதிபதி அச்செய்தியை கேள்விப்பட்டு சில நொடிகளில் அவரின் பிரத்தியேகச் செயலாளர், வியட்நாம் விமானப்படைத் தளபதி உங்களைப் பார்க்க வந்திருப்பதாக தகவல் அனுப்பினார். மிகவும் குழம்பியவராக அவரை உடனடியாக வரவழைத்த ஜனாதிபதி, நீங்கள் இறந்து விட்டதாக செய்தி எனக்கு வந்ததே என்று ஆரம்பிக்க, விமானப்படைத் தளபதி எல்லாவற்றையும் கூறி முடித்து தன் கடிதத்தையும் அவரிடம் கொடுத்தார். அங்கிருக்கும் நிலைமை இப்படித் தான் என்று விளங்கிக் கொண்ட அவர். இராணுவத் தொலைபேசியில் ஜனாதிபதி ஜோன்சனை தொடர்பு கொண்டார்.

அங்கு நிலைமையைக் கேட்டார். அதற்கு அவர் மிகைப்படுத்தி விமானப்படைத் தளபதி கொல்லப்பட்டு விட்டதால் இங்கு ஒரே கலவரமாக இருக்கிறது.. இராணுவ வீரர்கள் கூட தங்கள் கட்டுபாட்டை இழந்து விடுவார்கள் போல் தெரிகிறது என்று தன்பாட்டிற்கு கூறிக்கொண்டே சென்றார். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி தொலைபேசியை விமானப்படைத் தளபதியிடம் கொடுத்து பேசும்படி சொன்னார்.


**(தொடரும்)**







# தந்தை வழியில் தனயன்!



**தவசி** சரியான காரியக்காரன். தனக்குக் காரியம் ஆக வேண்டுமென்றால் யாருடைய காலில் வேண்டுமானாலும் விழுவான். பணத்தைக் கொடுத்து காரியம் சாதிப்பான். சுருக்கமாகச் சொல்வதானால் குறுக்கு வழியில் புகுந்து காரியத்தைச் சாதிப்பதில் கில்லாடி. படித்து முடித்ததும், பெரிய முதலாளி ஒருவரின் காலில் விழுந்து வேலைக்குச் சேர்ந்து அவரது மகளையும் கைபிடித்தான். அத்துடன் பெற்றோர், அக்கா, தங்கைக்கு ஒரு முழுக்குப் போட்டான். தவசியின் தகப்பனார் அழுது கண்ணீர் வடித்தார். தவசியோ தன் சுகவாழ்வு ஒன்றே முக்கியம் என நினைத்தான்.

தவசிக்கு ஐந்து மகள்கள், ஒரு மகன். முதல் மகளுக்கு திருமணமாகிவிட்டது. மற்ற நான்கு பெண்களுக்கு இனிமேல்தான் திருமணமாக வேண்டும். மகன் பரத்தை தன்னைப் போலவே காரியக்காரனாக வளர்த்தான். அதனால் சுயநலவாதியாக வளர்ந்தான் மகன். ஐந்து பெண்கள் என்றால் சும்மாவா? அரசனும் ஆண்டி என்பார்கள்.

இவனது பணம் குறைய ஆரம்பித்தது. தன் மகனைத்தான் மலைபோல் நம்பியிருந்தான். மகனை மிகவும் செலவு செய்து படிக்க வைத்தான். பணத்தைக் கொட்டி பாஸ் பண்ண வைத்தான். பிறகு லஞ்சம் கொடுத்து வேலையும் வாங்கிக் கொடுத்தான். இனி நம் மகன் குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்று

பாப்பா முரசு சிறுகதை

நினைத்தபோதுதான் அது நடந்தது.

அப்பாவின் யோசனையை அப்படியே பின்பற்றி, பெரிய அதிகாரியின் மனைவியைக் காக்கா பிடித்து, அவள் சிபாரிசில் தன் பதவி உயர்வைப் பெற்றான் பரத். அப்புறம்தான் வினையே ஆரம்பம் ஆயிற்று. பரத் ஒரு பெரிய இடத்தில் திருமணம் செய்து கொண்டு, தனிக் குடித்தனம் போய் விட்டான். அதனால் தவசி இடி விழுந்தவன் போல ஆனான்.

"நம் மகன் செய்த அயோக்கியத்தனத்தைப் பார்த்தாயா? நான் அவனை எவ்வளவு செலவழித்துப் படிக்க வைத்தேன்? எவ்வளவு லஞ்சம் கொடுத்து வேலை வாங்கி வைத்தேன்? அதை எல்லாம் மறந்து விட்டு மனைவியோடு போய் விட்டானே அந்தப் பாவி? ஏன்? இங்கு இருந்தால் தன் தங்கைகளின் கல்யாணத்துக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று தப்பித்துப் போய்விட்டான் சண்டாளன்," என்று ஒப்பாரி வைத்தான் தவசி.

அப்போது அவனது கடைசி மகள் சாரு அங்கே வந்தாள்.

"அப்பா! நீங்கள் சென்ற வழியில் உங்கள் மகனும் சென்றுவிட்டான். நீங்கள் உங்கள் முன்னேற்றத்திற்காக உங்க பெற்றோர்களைப் பிரிந்து வந்தீர்கள். அவர்களையோ, அத்தைமார்களின் திருமணத்தைப் பற்றியோ ஒருபோதும் கவலைப்படவில்லை. அதே போல உங்கள் மகனும் தன் முன்னேற்றத்திற்காக உங்கள் குடும்பத்தை விட்டுச் சென்று விட்டான். அன்று, "மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாதே" என்று அவனுக்கு நீங்கள் உபதேசம் செய்தீர்கள். அதையே வேதவாக்காக நினைத்துப் பின்பற்றி இருக்கிறான் உங்க மகன்...இப்படி நடக்கும் என்று நான் என்றோ எதிர்பார்த்தேன். அது இன்று நடந்துவிட்டது," என்றாள். வேதனையில் தலைகுனிந்தான் தவசி.

# ஆத்திசூடி

## கண்டு ஒன்று சொல்லேல்

நீ உன் கண்களால் பார்த்ததைத் திரித்து வேறுபாடாகக் கூறாதே.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# கோழி




கோழி இது
கோழிதான்
குஞ்சைக் காக்கும்
கோழிதான்
இரையைக் கொத்தித்
தின்னும் கோழிதான்
கொக்கரக்கோ
சேவலோடு
சேர்ந்துவிட்ட கோழியே
முட்டை நிறைய
போடுவாய்
அக்கறையாய் அடை
காத்திடுவாய்
கோழி முட்டை தன்னையே
பச்சையாகக் குடிக்கலாம்
ஆம்லெட்டும் போடலாம்
ஆசையாய் தின்னலாம்
அவித்த முட்டை
தின்றாலோ
அழியாது சத்தும்தான்!
மண்ணில் உள்ள
புழுவை உண்டு
மண்ணைச்
சுத்தம் செய்யும்
நீயும்தான்
மாந்தருக்கு நலம்
தரும்
கோழி நீ வாழியே!

# அதிசய உலகம்


## ஏய் தூங்கு மூஞ்சி!

**இது** ஒரு விசித்திரமான தூங்கி வழியும் பறவை இனம். மேற்கு மற்றும் மத்திய வட அமெரிக்கக் காடுகளில் காணப்படும் இப் பறவைகள், இரவில் பறக்கும் பூச்சிகளை உண்டு வாழும். மற்றபடி இவைகளின் பழக்கவழக்கங்கள் இதுவரை அறியப்படவில்லை. இப் பறவை 'இப்' என்னும் சத்தத்துடன் பாடிக் கொண்டே பறக்கும். இவைகளை அமெரிக்க பழங்குடியினர் 'தூங்கும் பறவை' என்றே அழைத்தனர்.



முதன் முதலில் இந்தப் பறவையை தூங்கிய நிலையில் கண்டபோது, இறந்து விட்டது என்றே விஞ்ஞானிகள் நினைத்தனர். காரணம், இதன் கண்கள் மூடிய நிலையில் உடம்பு சில்லிட்டிருந்தது. அந்தப் பறவையைத் தொட்டபோது கண்விழித்து பறந்துவிட்டது. இந்தப் பறவையை பரிசோதனை செய்து பார்த்தனர். இது மாதக் கணக்கில் தூங்கும்போது உடலில் உஷ்ணம் குறைந்து விடுகிறது. அப்போது இதன் உடம்பில் 7 கிராம் அளவு தான் கொழுப்புச் சத்து இருக்கும். இந்தக் கொழுப்பு 70 முதல் 100 நாட்கள் வரை இப்பறவை உயிர் வாழ உதவி செய்கிறது. உண்மையிலேயே இது ஒரு விசித்திரமான பறவை இல்லையா?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.10.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 663**
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 661

**பரிசுக்குரியவர்:**
**கே. பிரசாந்தி, 89, ரொசிட்டா வீடமைப்பு திட்டம், கொட்டகலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| எம். முஜாஹித் ஜெஸ்ரினா, மக்குளுற்று வெள்ளைமணல், சீனக்குடா. | மர்சியா நபீர், இல. 11/1A, பகீர் மேக்கர் ஒழுங்கை, மருதானை, பேருவல. |
| ஜெ. ரனுஜா, தரம் - 06, பதுளை/த.ம. வித்தியாலயம், பதுளை. | கே. ஹரினி, இல. 19, பன்சல வீதி, இராகலை. |
| எம். ஜனார்த்தன், இல. 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | சாஜிதா நஸார், தரம் - 3யு, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12 |
| ஈ. பிரவீனா, 34/54, வில்பிரட்டவுன், ஹட்டன். | ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்தை. |
| ஜெ. கிறிஷாயினி, இல. 46, கோவிந்தன், வீதி, மட்டக்களப்பு. | ஆகாஷ், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 |

# சில விடுகதைகள்

1. இனிக்கும் கைத்தடி ஓங்கினால் தடியடி அது என்ன?
2. சட்டை போடாதவன் ஆனாலும் சட்டையைக் கழற்றுவான் அவன் யார்?
3. மருந்தில்லாமலே வெடிக்கும் துப்பாக்கி அது என்ன?
4. கருந் திராட்சைத் தோட்டம் பூப்பூத்தால் தோட்டம் பாழ் அது என்ன?
5. மாமா வீட்டுத் தோட்டத்தில் அசையாமல் படுத்திருக்கிறது மதயானை - அது என்ன?
6. எட்டுப் பட்டணம் பார்த்தவனுக்கு கிட்ட இருக்கும் பட்டணம் பார்க்க முடியலை - அது என்ன?
7. அவள் ஆடினால் நடனம்; இவள் பாடினால் பாட்டு - அவர்கள் யார்?
8. வாலில் வைத்திருப்பான் வகையான ஆயுதம் - அவன் யார்?
9. அம்மா என்றழைத்தவனுக்கு அடுத்த வார்த்தை தெரியாது - அது என்ன?
10. கறுப்பனுக்கு வயதானால் வெள்ளையன் - அவன் யார்?

**விடைகள்**
1. கரும்பு
2. பாம்பு
3. மூக்கு
4. கண்கள்
5. வைக்கோல் போர்
6. முதுகு
7. மயில் - குயில்
8. தேள்
9. பசு
10. தலைமுடி.



# பாரம்பரிய சமாதி

**ஈரானின்** பசாகார்ட் நகரம் உலகின் பாரம்பரிய அம்சங்களடங்கிய வரலாற்றுப் புகழ்மிக்க நகரமாக யுனெஸ்கோவினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அச்சா மானிட வம்சத்தைச் சேர்ந்த சைரஸ் சக்கரவர்த்தியால் நிர்மாணிக்கப்பட்ட இந்தச் சமாதி பாரம்பரிய கலைத்துவத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக யுனெஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஈரானின் பாரம்பரிய படைப்புகளை வெளிப்படுத்தும் பசார்காட் என்ற பகுதியில் சைரஸ் சமாதி மட்டுமல்ல, அந்தச் சக்கரவர்த்தியின் அரண்மனை, பறக்கும் வடிவிலான மனிதச் சிலை, கம்போடியச் சமாதி, ரால் ராக்ட் சிறைக் கூடம் ஆகியவையும் அமைந்துள் ளன.

## ஒளிரும் மரம்




**கிறிஸ்மஸ்** மரங்கள் டிசம்பர் மாத பிற்பகுதியில் வர்ண விளக்குகளோடு வீடுகள், வர்த்தக நிலையங்களை அலங்கரித்திருப்பதைக் காணலாம். ஆதாமும் ஏவாளும் ஏடனை விட்டுச் சென்றபோது அந்த மரத்தையும் கொண்டு சென்றதாக மத்திய கால மக்கள் நம்பினர். கிறிஸ்து நாதரின் சிலுவை இந்த மரத்தினாலேயே செய்யப்பட்டதென்ற நம்பிக்கை பின்னர் தோன்றியது. முதன் முதலாக 1605ஆம் ஆண்டிலேயே கிறிஸ்மஸ் மரங்களை ஜெர்மனிய மக்கள் நத்தார் காலத்தில் பயன்படுத்தினரென்று அறியப்படுகிறது. ஜெர்மனியின் ஸ்ராஸ்பேர்க் பகுதியில் முதன்முதலாக இம் மரங்கள் அறிமுகம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. பெர் மரங்களை வைத்து, அதில் வர்ணக் கடதாசிகளான பூக்களையும் அப்பிள்கள், தங்க நிறச் சுருள்களையும் மாட்டினார்களாம். இளவரசர் அல்பேர்ட்டும் விக்டோரியா ராணியும் 1840ஆம் ஆண்டு பிரிட்டனிலுள்ள பால்மோபரல் பகுதிக்கு முதன் முதலாகக் கிறிஸ்மஸ் மரத்தைக் கொண்டு வந்ததாகவும் அதன் பின்னரே கிறிஸ்மஸ் மரங்கள் பிரபல்யம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

## பறந்து சாதிப்பாரா?





**பலூன்களில்** பறந்து சாதனை படைப்பவரும் திரைப்படக் கமெராமேனுமான ரொப் பிராங்லின் என்பவர், வெப்பக் காற்றில் உயரே எழும் பலூனில் நாற்பதாயிரம் அடி உயரத்துக்குப் பறக்கும் சாதனையொன்றினை நிகழ்த்தத் திட்டமிட்டிருந்தார். இதற்கான எரி கருவி, எண்ணெய் டாங்கிகள், பலூன் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இவ்வருட மத்தியில் அவர் இச் சாதனையைச் செய்யத் திட்டமிட்டிருந்தாரென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் இந்தச் சாதனையைப் புரிந்தாரா இல்லையா என்பதை மட்டும் அறிந்து கொள்ள முடியவில்லை.

## புரட்சிக்கால கடிகாரம்



**அமெரிக்**காவில் புராதன கால அபூர்வ பொருட்கள் கொள்ளை விலையில் ஏலம் போவது வழமை. இதற்கென ஏல விற்பனை நிறுவனங்கள் பல இருக்கின்றன. படத்தில் காணப்படும் மணிக்கூடு அமெரிக்காவின் புரட்சிக் காலத்தைச் சேர்ந்தது. பலாடினோஸ் என்றழைக்கப்படும் பிலடெல்பியாவிலுள்ள புராதனப் பொருட்கள் ஏல விற்பனை நிலையம் எட்டு இலட்சத்து மூவாயிரத்து இருநூறு அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்தது. அம்மாடியோவ் என்று வாயைப் பிளக்காதீர்கள். 2004ஆம் ஆண்டு ஜனவரியில் அதிக விலைக்கு ஏலம் போன புராதன மணிக்கூடு என்ற இந்த உலக சாதனை ஒன்பது மாதங்களுக்கு மட்டுமே நீடித்தது. பிலடெல்பியாவிலுள்ள மற்றொரு ஏல விற்பனை நிலையம் 16,88,000 அமெரிக்க டொலர்களுக்கு மணிக்கூடொன்றினை விற்பனை செய்து முன்னைய சாதனையை முறியடித்தது. அதாவது முன்னையதை விட இரண்டு மடங்கு அதிகமான விலைக்கு ஏலம் போயிருக்கிறது.

## தலைசிறந்த வீரர்



**கடலலைகளை** எதிர்த்துப் படகு சறுக்கும் போட்டியில் ஆறு தடவைகள் உலகச் சம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டவர் கெல்லி ஸ்லேற்றர் என்பவர் பிரேஸிலிலுள்ள சான்றா கட்டாரினாக் கடலில் கடந்த வருடம் நடைபெற்ற ஆண்களுக்கான படகு சறுக்குப் போட்டியில் அவர் ஈடுபட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. உலகெங்கிலுமுள்ள மிகத் திறமை வாய்ந்த 45 படகுச் சறுக்கோட்ட வீரர்களில் முதலிடம் வகிப்பவர் கெல்லி என்பது குறிப்பிடத்தக்கது.

# மேனனுக்கு திருமணம்!



அஜித்
ஆழ்வார்

ரேணுகா

**பே**ஷன் டிஸைனிங் படிக்கப் போகிறேன் என்று வெளிநாடு கிளம்பிய ரேணுகா மேனன், மாப்பிள்ளை பார்த்துவிட்டு திரும்பி வந்திருக்கிறார்.

தாஸ், பெப்ரவரி-14 படங்களில் நடித்த ரேணுகா மேனனுக்கு சினிமா வாய்ப்புகள் நினைத்தது போல் அமையவில்லை. கலாபக் காதலன் படமும் காலை வார, இனி கொஞ்ச நாளைக்கு நடிப்புக்கு குட்பை சொல்லி, வெளிநாட்டில் படிக்கப் போகிறேன் என்றார். சொன்னது போல் 'பெட்ரோல்' உட்பட சில படங்களில் நடிக்க வந்த வாய்ப்பை உதறினார் ரேணுகா மேனன். இவர் கடைசியாக நடித்த படம் 'பதாகை' மலையாளப் படமான இதனைத் தொடர்ந்து வேறு எந்தப் படத்திலும் ரேணுகா மேனன் நடிக்கவில்லை.

சென்ற மாதம் ஏழாந் திகதி ரேணுகா மேனனுக்கு கேரளாவில் வைத்து திருமணம் நிச்சயதார்த்தம் நடந்தது. மணமகன் சூரஜ். அமெரிக்காவில் கம்ப்யூட்டர் என்ஜினியராக இருக்கிறார்.

படிக்கப் போன இடத்தில் சூரஜை பார்த்து பேசியிருக்கிறார் ரேணுகா மேனன். பரஸ்பரம் பிடித்துப் போனதால் வருகிற நவம்பரில் நடக்கும் திருமண பந்தத்தில் இருவரும் ஒன்றிணைகிறார்கள்.

திருமணம் முடிந்ததும் கணவருடன் அமெரிக்கா செல்வதால், ரேணுகா மேனன் தொடர்ந்து படங்களில் நடிக்கமாட்டார். இறுதிவரை இந்த முடிவில் அவர் உறுதியாக இருக்க, நம் வாழ்த்துக்கள்!



சிம்பு - ரீமாசென்
வல்லவன்



தனுஷ்
பரட்டை

சி ரி வி சி ப்


சென்னை 600028

# 'ஜோ'கிட்ட எனக்கு பிடிச்சது

## சிலிர்க்கிறார் சூர்யா

**கோ**லிவுட் முன்னணி நடிகர்களில் சூர்யாவும் ஒருவர். மாறுபட்ட கதைகளை தேர்வு செய்து தொடர்ந்து வெற்றிப் படங்களாக கொடுத்துக் கொண்டிருக்கிறார். தனக்கென ஒரு இடத்தையும் பிடித்துக் கொண்டவர். ஜோதிகாவின் உள்ளத்தையும் கொள்ளைக் கொண்டவர்.

♥ *உங்க காதல் மனைவியை முதல் முதலாக எப்ப சந்திச்சீங்க?*

ஜோவை நான் முதல் முதலா சந்திச்சது 'பூவெல்லாம் கேட்டுப்பார்' பட ஷூட்டிங் ஸ்பாட்டுலே. அப்போ ஜோவுக்கு சுத்தமாக தமிழ் தெரியாது. ஆனால் கொஞ்சம் கூட பயம் இல்லாம எல்லார்க்கிட்டேயும் கலகலப்பாக தெரிஞ்ச பொண்ணு மாதிரி பேசுவாங்க. அதை பார்த்து எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முதல் முறையாக இரண்டு பேரும் சந்திச்சி ஹலோ என்று சொல்லிக் கொண்டோம். எனக்கு டான்ஸ் சரிவர ஆடவராது. ஜோ பிரமாதமாக டான்ஸ் ஆடுவாங்க. நம்மாலே இப்படி ஆட முடியலையேனு வருத்தப்படுவேன். 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் இணைந்து நடித்தபோது ஜோவுக்கும் எனக்கும் அவ்வளவாகப் பழக்கமில்லை. ஜோ கலகலப்பாக பேசுவாங்க. நான் இரண்டு வார்த்தைக்கு மேல் பேசமாட்டேன்.

♥ *உங்க இருவரைப் பற்றி அடிக்கடி இணைத்து கிசுகிசு வந்துட்டே இருந்ததே...?*

நாங்க இருவரும் கிசுகிசுக்கு முக்கியத்துவம் கொடுக்கல. எழுதுறவங்க எழுதட்டும் என கண்டுக்காம இருந்துட்டோம்.

♥ *தலைவா! உங்களின் காதல் அனுபவம் பற்றிச் சொல்லுங்களேன்...?*

ஒரு சில வரிகளில் விவரிக்க முடியாது. அந்த சுகமான அனுபவத்தை.

♥ *நடிகைகளில் உங்களுக்குப் பிடித்தவர்...?*

வேற யார். ஜோ தான் பல படங்களில் அவருடன் இணைந்து நடித்திருப்பதால் அவருடைய தொழில் பக்தி, பழகும் பண்பு பிடித்திருக்கிறது.

♥ *படத்துக்குப் படம் கெட்டப்பை மாற்றி நடிக்கிறீர்களே எப்படி?*

அடிபட்டேன், அவமானப்பட்டேன், தலைகுனிஞ்சி நின்னேன், வெக்கப் பட்டேன், சினிமாவுலே நாமும் ஜெயிக்கணும் என்ற நம்பிக்கையுடன் போராடினேன். நம்பிக்கையை எனது முதல் ஆயுதமாக எடுத்திக்கிட்டு இரவு, பகல் பராமல் என்னை நானே செதுக்கிக் கொண்டேன். பெரியவர்கள் அன்பு, ஆதரவோடு சினிமாவை பற்றி தெரிஞ்சிக்கிட்டேன், நடிப்பை வளர்த்திக்கிட்டேன். என்னை நானே மாற்றிக் கொண்டேன். 'காக்க காக்க' படம் எனது தலை எழுத்தை மாற்றியது. கோலிவுட்டில் எனக்கென்று ஒரு இடமும் கொடுத்தது. தன்னம்பிக்கையுடன் போராடினால் வெற்றி நிச்சயம். எடுத்துக்காட்டு இந்த சூர்யா.

♥ *காதலில் ஜெயிச்ச நீங்க, காதலர்களுக்குச் சொல்லும் அறிவுரை என்ன?*

முதலில் வேலை, பொருளாதார பலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். அப்போதுதான் எப்போதுமே காதல் கசக்காது.


♥ *உங்க வருங்கால மனைவியிடம் உங்களுக்குப் பிடிச்சது என்ன?*

ஜோ...கிட்டே எனக்கு பிடிச்சது கள்ளம், கபடமில்லாத பேச்சு. ஜோ எப்ப பார்த்தாலும் துருதுருன்னு சிரிச்சிக்கிட்டே இருப்பாங்க. ஜோ...வின் சிரிப்பும், குறும்புத்தனமும் எனக்கு ரொம்ப பிடிக்கும். ஜோ கிட்டே பேசினால் டைம் போறதே தெரியாது. நான் ரொம்ப சாப்டான கேரக்டர். ஆனா எனக்கு பிடிச்சது அவரது குறும்புதான்.




கொய்னா மித்ரா






# மக்கள் என்னை ரசிக்கணும் - நமீதா

**அ**ழகான பொண்ணுதான். அதுக்கேத்த கண்ணுதான். அதுக்கேத்த உயரம் தான். நமீதா...அந்த அழகான கவர்ச்சிப் புயலைச் சந்தித்தோம்.

**✢ நமீதா எப்படிப்பட்ட பெண்...?**

நீங்க இப்ப பார்க்கிற நமீதா வேற. குஜராத்தில வளர்ந்த நமீதா வேற. நான் ரொம்ப துரு துருவென இருப்பேன். ரொம்ப தைரியசாலி. எனக்கு 2 வயது இருக்கும் போதே மாடியில் இருந்து குதித்து இருக்கிறேன். ஆனால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருக்கிறேன். அதை இப்போதும் சொல்லிச் சொல்லி கிண்டல் அடிப்பார்கள் என் குடும்பத்தினர்கள். (பார்த்தாலே தெரியுது நீங்க தைரியசாலிதான்)

**✢ நமீதாவின் சின்னச் சின்ன ஆசைகள் என்னவாம்...?**

உலகம் முழுவதும் சுற்றிவர வேண்டும்...என்பது ஆசை. பேராசையாகக் கூட இருக்கலாம். உடம்பில் பச்சை குத்திக் கொள்வது எனக்கு ரொம்ப பிடிக்கும். சினிமாவில் இருந்து விலகியதும் ஒருநாள் என் தலையை மொட்டை அடித்து விட்டு, உச்சந்தலையில் விதவிதமான உருவங்களைப் பச்சை குத்திக் கொள்ள வேண்டும். நிச்சயம் பச்சைக் குத்திக் கொள்வேன். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எனது ஆசைகளைச் சொல்ல ஒரு நாள் போதாது...

**✢ நீங்கள் நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் என்னென்ன?**

'மாயா' என்ற ஹாலிவுட் படத்தில் நடிக்கிறேன். அதில் எனது சொந்தக் குரலில் பேசியிருக்கிறேன். உலகம் முழுவதும் இப்படம் வெளியாக இருக்கிறது. இன்னொரு ஆங்கிலப் படத்திலும் நடிக்க இருக்கிறேன். லண்டனைச் சேர்ந்த ஜி.எம்.ஜி.கிரியேட்டிவ் தேனேஜ்மெண்ட் தயாரிக்கும் 'மிஸ் 2007' என்ற படத்தில் நடிக்க உள்ளேன். எஸ்.ஜே.சூர்யாவுடன் 'வியாபாரி' என்ற படத்திலும் கிரண் பேடி போன்று ஒரு அதிரடி பொலிஸ் கமிஷனராக ஒரு படத்திலும் நடிக்க இருக்கிறேன்.

**✢ எந்த மாதிரியான கதாபாத்திரத்தில் நடிக்க விருப்பம்?**

எல்லா விதமான கதாபாத்திரத்திலும் நடிக்க விரும்புகிறேன். நமீதாவால் கவர்ச்சியாகத்தான் நடிக்க முடியும் என்ற இமேஜை உடைக்க விரும்புகிறேன். வித்தியாசமான கதைகளைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். இனி நீங்க புதிய நமீதாவைப் பார்க்கலாம்.

**✢ கவர்ச்சியாக நடிக்கிறீர்களே...?**

கவர்ச்சி காட்டுவதில் தப்பில்லை. ஆபாசமாகக் காட்டுவதுதான் தப்பு. மக்கள் என் அழகை ரசிக்கிறார்கள். அவர்களை சந்தோஷப்படுத்துவது எனது கடமை அல்லவா? நான் கவர்ச்சியாக நடிப்பேன். ஆனால் ஆபாசமாக நடிக்கமாட்டேன்.







# சோனியாவுக்கு சொகுசு மாளிகை – செல்வராகவன் கட்டுகிறார்!

**தனது** வருங்கால மனைவிக்காக சொகுசு பங்களா கட்டுகிறார் இயக்குநர் செல்வராகவன். சம்சார பந்தத்தில் சிக்காமல் கபடி ஆடிக் கொண்டிருந்த செல்வராகவனுக்கு இன்னும் சில மாதங்களில் திருமணம். மணப்பெண்? கஸ்தூரிராஜா பகிரங்கமாக 'எங்கள் வீட்டு மருமகள்' என அறிவித்த சோனியா அகர்வால்!

தமிழ் படம் இயக்கி, அப்படியே பொலிவுட்டில் புகுந்து, ஹாலிவுட்டுக்குப் பிரமோட் ஆவதுதான் என் பியூச்சர் பிளான். அதுவரை நோ கல்யாணம் என முறுக்கித் திரிந்த செல்வராகவனை, கல்யாண ஜாடியில் கசக்கிப் பிழிந்த பெருமை கஸ்தூரிராஜாவுக்கே சேரும். இந்த வருஷத்தில் எப்படியும் செல்வாவுக்கு திருமணம் நடத்திடுவோம் என்று சொன்னதை செயலிலும் காட்டிவிட்டார்.

இனி தப்பிக்க வழியில்லை என்பது தெரிந்ததும், கணவனுக்குரிய தகுதிகளைப் பொறுப்புடன் வளர்த்துக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார் செல்வராவன். முதல் கட்டமாக, பொது விழாக்களுக்கு சோனியா இல்லாமல் செல்வதில்லை இவர். திருமணம் முடிந்து தனிக்குடித்தனம் செல்வதற்காக சொகுசு பங்களா வேறு கட்டி வருகிறார். சென்னை சாலி கிராமத்தில் தயாராகிவரும் இந்தக் குட்டி அரண்மனை இரண்டுகோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாராகிறது.

இப்போது அனைவருக்கும் உள்ள ஆச்சரியம்...

'கல்யாணமே வேண்டாம் என்று சொன்ன செல்வாவா இது?' என்பதுதான்.




# நடிகை குஷ்பு வீட்டில் குடியேற போட்டா போட்டி

**ந**டிகை குஷ்புவுக்குச் சொந்தமான வீடு சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ளது. இது ரசியான வீடாகக் கருதப்படுகிறது. இந்த வீட்டுக்குக் குடிபோன பிறகுதான் குஷ்பு தொழில் ரீதியாக முன்னேறினார். இயக்குநர் சுந்தர் சி.யையும் காதலித்து திருமணம் செய்து கொண்டார். தற்போது சொந்தமாகப் படங்களும் எடுத்து வருகிறார்.

அங்கு குஷ்புவுக்குச் சொந்தமான வீடுகளில் ஒன்றை ஜோதிகாவுக்கு வாடகைக்குக் கொடுத்தார். இந்த வீட்டில் தங்கி இருந்துதான் ஜோதிகா படப்பிடிப்புக்குச் சென்றார். பெற்றோர், உறவினர்கள் சென்னை வரும் போது இங்குதான் தங்கினார்கள்.


இந்த வீட்டில் குடியேறிய பிறகு ஜோதிகாவுக்கு படவாய்ப்புகள் குவிந்து மளமளவென முன்னேறினார். சூர்யாவுடன் காதலும் இங்கு குடியிருந்த போதுதான் துளிர்த்தது. தற்போது இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இதையடுத்து அந்த வீட்டை ஜோதிகா காலிசெய்து விட்டார். தியாகராய நகரில் உள்ள சூர்யா வீட்டிலேயே அவர் குடியேறிவிட்டார்.

ஜோதிகா தங்கி இருந்த வீடு ராசியானது என்று செய்தி பரவியுள்ளது. இதையடுத்து அந்த வீட்டில் வாடகைக்குக் குடியேற போட்டா போட்டி ஏற்பட்டுள்ளது. சினிமாக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் அந்த வீட்டை வாடகைக்குக் கேட்டு முற்றுகையிட்டுள்ளனர்.

# தெலுங்கில் ஸ்ரீகாந்த்

**ஸ்ரீ**காந்த் கதாநாயகனாக நடித்த 'கிழக்கு கடற்கரைசாலை' படம் முடிந்து ரிலீசுக்குத் தயாராக உள்ளது. இதையடுத்து தெலுங்குப் படமொன்றில் நடிக்கிறார் ஸ்ரீகாந்த். இந்தப் படத்தை செல்வராகவன் இயக்குகிறார். வெங்கடேஷ் தம்பியாக ஸ்ரீகாந்த் நடிக்கிறார்.






## மனசு

தெருக்களின்
மின் கம்பங்களில்
மனசு தொங்குகின்றது...
விழுவது போல்
யாரோ துவைத்து
உலரப் போட்டிருக்கின்றார்கள்.

காகங்கள்
வட்டமிட்டே
கொத்திப் போகின்றன...
மனசு பிஞ்சிப் போகின்றது
யாருடையதோ...!
கண்ணீர்தான்
கொட்டுகின்றது...

அதோ!
மனசு இல்லா மனிதன்
செல்கின்றான்
அவன் எதையோ தேடியே
செல்கின்றான்
மீண்டும் கிடைக்குமா
மனசு...?

துண்டு துண்டாய்...
எல்லாப் பக்கமும்
சிதறப்பட்ட மனசு
பேசுகின்றது...

நான் சிதைந்தாலும்
சிந்தனையுடனே
தூய்மையாய் இருக்கின்றேன்...
உருவமாய் முடக்கப்படாமல்
பறந்தே கிடக்கின்றேன்...
எனக்கும்
பகுத்தறிவு வந்துவிட்டது...
நானும்
வயதுக்கு வந்துவிட்டேன்
உருவத்தை விட்டு (உடம்பை
விட்டு)
வெளியே வந்ததிலிருந்து...

*–ஏத்தாலை
ஜே.எம்.பஸ்லி.*

## தலையணை



அநேகமாக இரவுகளில்தான்
என் ஆரம்பங்கள்...

சில நேரங்களில்
ஆடை களைந்து என்னை
அம்மணமாக்கி விடுகின்றார்கள்
நாணம் விடுத்து - என்
நிர்வாணத்திலேயே
படுத்தும் புரள்கிறார்கள்
இருந்தும்
சலனப்படாத
ஜடமாகவே நான்...

மல்லிகைப்பூ மணத்துடன்
மூச்சுத் திணறி
போதையுடன் விடிய விடிய
மயங்கிக் கிடந்திருக்கிறேன்...
எண்ணெய்ப் பசையின் பிசுபிசுப்பில்
முகம்திருப்பி முதுகுகாட்டி
ஊடல் கொண்டிருக்கிறேன்
பேண் பொடுகு புண்களுடன்
போராட்டம் செய்து
அருவருப்பில் முகம்
சுளித்திருக்கிறேன்
இத்தனைக்கும்
கறைபடாத பவித்திரமாய்
சிரித்த நான்.

ஒரு ஏகி
ஏக்கக் கண்ணீரால்
என்னை நனைத்த போதும்
ஒரு மலடி
இரகசியக் குமுறலில்
அதிர வைத்தபோதும்
பிரிவுக் கதறல்களும்
மரண ஓலங்களும்
பகிரங்கமாய் என்னை
தேம்ப வைத்தபோதும்
முதல் முறையாய்
கறைப்பட்டு வடுவாகிறேன்.

*–பிரமிளா செல்வராஜா,
ஹாலி – எல.*

## மிரட்டும் கவிதைக்காரி...!

வரட்சியான
மாதத்திலும்
என்னுள்
வசந்தம்
வீசிப் போனவளுக்காய்...!

உன்
பிறந்த தினத்தில் - என்
பிச்சைக்கார ஆசைகள்
கொஞ்சமாய்
நிறைவேறிய
கோடி சந்தோஷத்தில்
எகிறிக் குதிக்கும் மனசில்
ஏகப்பட்ட
மின்னல்கள்...!

உனக்கும்
எனக்குமான
தூர இடைவெளியில்
கசியும் சாபச்சுவட்டை
விரட்டியடிக்க - ஒரு
வீதி செய்வோம்...!

இப்போதெல்லாம்
உன் மெகா பேட்ஸ்
புன்னகைதான்
என்
மென் சவ்வுகளுக்கு
ரகசிய நிவாரணம்...!

விடியலின்
வெள்ளி ஓடைக்கும்
பாதி நிலவுக்குமான
தூரங்களில் - நம்
உறவு பற்றி
நிறையப் பேசவேண்டும்...!

இன்றைய தினம்
பூமியை
தூரமாக்கிவிட்டு
யாருக்குமே தெரியாது
இன்னொரு
கிரகத்தில்
பிரசவிப்போம்...!

*–நஸீம்ருமி.*

## சிவப்பு வீடு

யுத்தச் சுவாசம்
பற்றி

சோகங்களைச் சுமந்த
பதற்றப் படகுகள்
இரத்தக் கடலில் பயணித்தது
கத்திகள் கிட்னிகளையும்
இதயங்களையும்
குரல்வலைகளையும்
தினசரி முத்தமிட்டன.
கிராமங்கள்
விறகானது;
அக்கரைக்கு
இக்கரை
கறுப்பாயிருந்தது.

ஒரு காலை
தரையில் வைக்காமல்
நடந்தோம்...

குடி நீர் தராத
நிலம்
தங்கமான உறவுகளை
பறித்துண்டது.

நாங்கள் நட்டிய
ஒரு ரூபாய் செடியில்
பன்மை ரூபாக்கள்
விளைந்தது.
அறுவடைக்குமுன்
தாயகமிழந்தோம்.

*–அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் – 01.*

## 'நல்ல மனிதன்'

இந்த
யுத்த காலத்தில் - ஒரு
செத்த வீடு!
சாவிற்கு
நானுந்தான்
போனேன்...
சாவீட்டில்
சிங்களவர்கள்,
தமிழர்கள்,
இஸ்லாமியர்கள்,
கிறிஸ்தவர்கள்
நிறைந்திருந்தனர்...
அப்படியானால்...
அங்கே
செத்தவர்...
யார்? என்று
நான் கேட்டேன்...
அவர்
ஒரு
நல்ல
மனிதர் என்று
பதில்
வந்தது.

*–பொன்.நவநீதன்,
கல்முனை.*

## சொர்க்கம்



சுற்றியுள்ள பசுமை
சுகாதாரமான காற்று
அமைதியான இனிமை
இத்தனையும் அள்ளித் தந்த
கொடை வள்ளலோ
இந்த மலையரசி.

நினைத்த நிமிடங்களில்
நொண்டியாட
விசாலமான முற்றம்
மனம் இருண்ட பொழுதுகளில்
மெழுகுவர்த்தியாய் ஒளி தர
பறவைகளின் பரவசம்.
கவலை மனதை முட்டி மோத
கதறியழுது கரைத்துவிட
ோவென்ற ஓசையுடன்
மலையருவி.
உற்சாகமாய் துள்ளியெழுந்து
ஓடிப்போய் பார்ப்பதற்கு
அழகானதோர் சூர்யோதயம்
சோவென்று மழை பொழிய
சந்தோஷமாய் நனைவதற்கு
சுதந்திரமான மனங்கள்
கோடி ரூபாய் கொடுத்து
நகரத்தில் குடியேறினாலும்
கிட்டாத சொர்க்கம்
எங்கள் தேயிலை தோட்டத்திலே.



*–ந.ரிஷா பன்னீர்,
புசல்லாவை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான கே. வி. கண்ணன் (சிங்கப்பூர்), எஸ். தணிகாசலம், மற்றும் ரமேஸ் (பிரான்ஸ்) எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

### தீபாவளி திருநாள்

அன்று,
சீயக்காயிலும், எண்ணெயிலும்
தொடங்கிய தீபாவளி!
வாழ்த்து அட்டைகளில்
வழிபடும் கடவுள் படங்கள்!
தாயார் கையால் சுடச்சுட செய்த
நெய்மணக்கும் அதிரசம்!
புத்தாடை அணிந்து,
கதூகலத்துடன் கோவில்களையும்
அடையும் தீபாவளி!
வீடுகளிலும், வீதிகளிலும்
விளக்குகளால் ஒளிர்ந்த தீபாவளி என
பண்டிகைகள் பண்பாட்டுச்
சின்னங்களாக ஒளிர்ந்தது!

இன்று,
சின்னத்திரையிலும், வண்ணத்திரையிலும்
அடங்கிய தீபாவளி!
வாழ்த்து அட்டையில்
கவர்ச்சி நாயகிகளும்,
அடிதடி நாயகர்களும்
தயாராய் அங்காடியில் என்றோ செய்த
இனிப்புப் பலகாரங்கள்!
புத்தாடையுடன், விசில் ஒலியுடன்
திரையரங்கின் இருளில்
மறையும் தீபாவளி!
வீதியைத் தாண்டி,
திரை அரங்குகளுக்கு
இடம்பெயர்ந்த தீபாவளி என
பண்டிகைகள் கடமைச்
சடங்குகளாக சிதைந்து!

சிரிக்கும் மத்தாப்புகளில்
சிவகாசி சிறுவர்களின் சிரிப்பும்,
வெடிக்காத ஊசி வெடிகளில்
கடற்கோளால் அமிழ்ந்த
சோக முகங்கள் தெரிய,
இன்னும் அடங்காத துக்கத்தால்,
தீபாவளியின் மங்களமான ஒளிவிளக்கும்
மங்கலாகத்தான் தெரிகிறது!

### குறுந்தகவல்!

நீ டெலிபோன் மணிபோல்
சிரிக்கவில்லை.
என் கைதொலைபேசித்தான்
உன்போல் சிரிக்கிறது! ஆம்
என் கைத்தொலைபேசி அழைப்பில்
பதிவு செய்யப்பட்ட உன் சிரிப்பு!

நம் இதயங்கள் இடம் மாறுகிறதோ
இல்லையோ,
நிச்சயம் நம் குறுந்தகவல்கள்,
நம் கைத்தொலைபேசியில்
அடிக்கடி இடம் மாறுகிறது!

உன் கைதொலைபேசி எண்ணை
நீ எனக்கு தெரிவித்த நேரம், அது என்
காதலை நீ ஏற்றுக்கொள்வதை
சொல்லாமல் சொல்லிய
பொன்னான நேரம்!

உன் அழைப்பில்லாமல்,
என் கைத்தொலைபேசி அடிக்கடி
துடிக்கவிட்டால், அதிகமாக
துடிப்பது என் இதயம் தான்!

காதோடு பேச தயங்கும் உன்
காதல் மொழிகளை
என் கண்ணோடு பேசும் உன்
குறுந்தகவல்களால் என் மனதில்
ஆயிரம் குறுகுறுப்பு!

*–கோவி.கண்ணன்,
சிங்கப்பூர்*

### வறுமை

காதலில் வெற்றி வறுமை
சாதலில் துணிவு வறுமை
நாட்டிலே விருத்தி வறுமை
பாட்டிலே பொருள் வறுமை

மங்கையர்க்கு மாப்பிள்ளை வறுமை
மாதமெல்லாம் மழை வறுமை
அரசியலில் ஒதுக்கீடு வறுமை
ஆட்சியில் செங்கோல் வறுமை

விண்வெளியில் காற்று வறுமை
வித்திட்டால் விளைச்சல் வறுமை
பாலையில் நீர் வறுமை
பசித்தோர்க்கு உணவு வறுமை

புத்தர்க்கு பற்று வறுமை
கத்தர்க்கு இன்பம் வறுமை
தூய்மையான நட்பு வறுமை
தூய்மையான அன்பு வறுமை

உள்ளத்தில் நிம்மதி வறுமை
உதட்டில் உண்மை வறுமை
உலகில் அமைதி வறுமை
ஊரெல்லாம் ஒற்றுமை வறுமை

பாவையர் உடையில் வறுமை
பள்ளியில் கல்வி வறுமை
படித்தோர்க்கு வேலை வறுமை
பாதீட்டில் மீதி வறுமை

வறுமை வறுமை வறுமை
வறுமை இன்றேல் வளர்ச்சி உண்டு
வளர்ச்சி உண்டேல் பகழ்ச்சி உண்டு
புகழ்ச்சி பெருக உருகும் வறுமை.

*–எஸ்.தணிகாசலம்.*

### ஏனிந்தப் புன்னகை?

கண்ணே
என் கண்ணின் மணியே
பொன்னே என் சின்னத்தமிழ்ப் பெண்ணே
உன் புன்னகையின் எண்ணங்களை
என்னால் புரிய முடியவில்லை...

ஏனிந்தப் புன்னகை?

யாரைப் பார்த்து
தாய்நாட்டில் குண்டுகளின்
மத்தியில் அன்னை பிச்சையெடுக்க
ஐரோப்பாவில் மகன்
இந்திய நடிகைக்கு பொன்
நகை அணிவிக்கிறான்.
அதைக் கண்டா இப்புன்னகை?

எண்ணமும் நினைவும் எம் மூச்சும்
உதிரமும் உடலும் என்றும் எம்
தமிழிற்கே
என்று அரசியல் மேடையில்
முழங்கியவர்கள்
இங்கு...


பெற்ற பிள்ளையது தமிழை அறிந்திடுமோ
அது
தவறு என்று தடுப்பவர்களைப்
பார்த்தா இப்புன்னகை?

இன்னொரு எத்தியோப்பியா ஈழத்தில்
உருவாகிக்
கொண்டிருக்க இங்கே பத்தி வெள்ளம்
பல கோடி பணம் செலவு செய்து
கோயில்
பாவங்களைப் போக்கவாம்.
இதைப்பார்த்தா இப்புன்னகை?

உன் இனிய சந்ததி
ஈழத்தில் குடிக்கப்பாலில்லை
இங்கே பெட்டிப்பால்
கற்சிலையின் தலை முதல்
கால் வரை கொட்டி வழிகிறது.
இந்த மூடரைப் பார்த்தா
நீ புன்னகைக்கிறாய்
புரியவில்லை எனக்கு!

*–ரமேஷ்
பிரான்ஸ்.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : எஸ். எம். நலீம்
வயது : 31
முகவரி : வீதி – 20, தபால் பெட்டி இல. 6984, டோஹா, கட்டார்
பொழுதுபோக்கு : பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சிப் பார்த்தல்.




பெயர் : வி. திலிப் காந்த்
வயது : 18
முகவரி : மிலா கொல்லா வீதி இரத்தோட்டை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல்,

# பள பளப்பு தரும் பப்பாளி!

பப்பாளிப் பழம் உடல் நலனுக்கு உகந்த சிறந்த பழம். இதில் ஏராளமான சத்துக்கள் உள்ளன.

இப்பழத்தை சரும பராமரிப்புக்கும் பயன்படுத்தலாம்.

வறண்ட மேல் தோலை அகற்றி, புதிய தோலை



உருவாக்குகிற அற்புத சக்தி பப்பாளிக்கு உண்டு.

### முகம் பளபளப்பாக வேண்டுமா?

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்!

பப்பாளி பழத்தை வெட்டி கூழாக்கிக் கொள்ளுங்கள். இந்தக் கூழில் ஒரு மேசைக் கரண்டி முல்தானி மட்டி - அரை தேக்கரண்டி கலந்து கொள்ளுங்கள்.

இதனை முகத்தில் மெதுவாகப்பூசி, நன்றாக மசாஜ் செய்யுங்கள். பிறகு மிதமான சுடுநீரில் கழுவுங்கள். முகம் பளிச் என்று பிரகாசிக்கும்.

சில பெண்களின் முகம் கரடு முரடாகத் தெரியும். மென்மை கொஞ்சம் கூட இருக்காது. இதனால் சருமம் அழகற்றதாக மாறிவிடும்.

இந்த முரடான முகத்தை மென்மையாக்கும் சக்தி பப்பாளித் தோலுக்கு உண்டு.

### எப்படி என்கிறீர்களா?

பப்பாளித் தோலை ஒரு பாத்திரத்தில் போட்டு வேக வையுங்கள். அது நன்றாக வெந்ததும் அதை அரைத்துக் கொள்ளுங்கள்.

இந்தக் கூழை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவுங்கள். இந்தச் சிகிச்சையை தொடர்ந்து செய்து வந்தால், வெகு சீக்கிரமே முகம் மென்மையானதாக மாறிவிடும்.

### கருவளையமா?

ஒரு சில பெண்களின் கண்ணுக்குக் கீழ் கருவளையம் ஏற்படுவதுண்டு. இப்படிப்பட்ட கருவளையம், மற்றும் கன்னத்தில் கருமை படர்தல், கன்னத்தில் கருந்திட்டு என்று கருமை தோன்றிய பகுதிகளை மாற்றி இயற்கை அழகை மெருகூட்ட வழிகள் உண்டு.

### இதற்கு என்ன செய்ய வேண்டும்?

சோற்றுக் கற்றாழை இலை ஒன்றின் ஜெல்லுடன் பப்பாளிக் கூழ் - ஒரு தேக்கரண்டி. கலந்து கொள்ளுங்கள். இதைக் கழுத்தில் இருந்து மேல் நோக்கி முகம் முழுவதும் நன்றாகத் தேய்த்து, இது நன்றாகக் காய்ந்ததும் தண்ணீரில் கழுவுங்கள். வாரம் 2 தடவை இப்படிச் செய்து பாருங்கள். கருப்பு மாயமாகி இருப்பதைக் காண்பீர்கள்.

### சிவப்பழகு வேண்டுமா?

பெரும்பாலான பெண்கள் சிவப்பழகைத்தான் விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் செய்ய வேண்டியது இதுதான்...

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம் -1, உலர்ந்த திராட்சைப் பழம் - 10, இவற்றை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்க வேண்டும்.

அதைப் பிறகு அரைத்துக் கொள்ளுங்கள்!


இந்தக் கலவையுடன் - அரை தேக்கரண்டி பப்பாளிப் பழக்கூழைக் கலந்து கொள்ளுங்கள்.

பிறகு இதை முகத்திற்கு பேஸ் பேக் போலப் போட்டுக் கொள்ளுங்கள்.

20 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவி விடுங்கள். வெயிலில் முகம் கறுத்துப்போயிருந்தால், பப்பாளியானது பளபளப்பாக மாற்றி விடும்.

### வெண்பிஞ்சு பாதங்கள்!

பப்பாளிக் கூழ் - 2 தேக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி, விளக்கெண்ணெய் - கால் தேக்கரண்டி, மூன்றையும்



கலந்து கொள்ளுங்கள். இந்தக் கலவையைப் பாதங்களில் தடவுங்கள். சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும்.

உங்கள் பாதங்கள் சுருக்கம் இல்லாமல் மென்மையானதாக மாறிவிடும்.

# லேடிஸ் ஸ்பெஷல்



# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## அவல் அடை உப்புமா

**தேவையான பொருட்கள்:**

அவல் - 1 கப்
அடைக்கலவை - 1 கப்
கடுகு - 1 தேக்கரண்டி
இஞ்சி - ஒரு துண்டு
பூண்டு - 10 பற்கள்
பெரிய வெங்காயம் - 2
க.எண்ணெய் - 4 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 2
உப்பு - சுவைக்கேற்ப

**செய்முறை :-**


இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாயை மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ளவும். அவலை நீர் விட்டுக் கழுவி, சிறிது நீரைத் தெளித்து ஊற வைக்கவும். வெங்காயத்தைப் பொடியாக அரிந்து கொள்ளவும். வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் கடுகைத் தாளித்து அதில் இஞ்சி, பூண்டு விழுதைச் சேர்த்து நன்கு வதக்கவும். வதங்கியபின் அதனுடன் அரிந்த வெங்காயத்தையும் சேர்த்து வாசனை வரும் வரை வதக்கவும்.

பிறகு இதில் அடைக்கலவை, ஊறி அவல், சுவைக்கேற்ப உப்பு சேர்த்து ஐந்து நிமிடம் வதக்கி இறக்கவும். இதோ...சாப்பிடத் தயாராகிவிட்டது. சுவையான அவல் அடை உப்புமா!

# குழந்தைக்கு தாய்ப்பால் அவசியம்...!

தாய்ப்பால் வாரம் தொடர்பாகக் கருத்தரங்குகள் என்று பல வகையில் நடந்தாலும், எத்தனை பேர் இன்னமும் டாக்டர்கள் சொல்கிறபடி தாய்ப்பால் மகத்துவம் புரிந்து நடக்கின்றனர் என்பது கேள்விக்குறிதான்.

குழந்தை பிறந்த உடனே தரப்படுவது சீம்பால். இது வேறு ஒன்றுமில்லை, குழந்தைக்கு தாய் கொடுக்கும் முதல் 'தாய்ப்பால்'.



சீம்பாலில் நோய் தடுப்பு ஆற்றல் அதிகம் உண்டு.

* குழந்தை பிறந்தது முதல் 6 மாதம் வரை கண்டிப்பாகத் தர வேண்டும்.
* குழந்தைக்கு எளிதில் ஜீரணமாகக் கூடிய சத்தான உணவு தாய்ப்பால்.
* தாய்ப்பாலில் நுண்ணுயிர்க் கிருமிகள் காணப்படுவதில்லை.
* தாய்ப்பாலில் வெப்பநிலை சீராக இருப்பதால் குழந்தையால் எளிதில் உட்கொள்ள முடியும்.
* தாய்ப்பால் கொடுப்பதன் மூலம், தாய்க்கு பிரசவத்திற்குப் பின் ஏற்படும் உதிரப்போக்கைத் தடுக்கலாம்.
* தாய்ப்பால் கொடுப்பதனால் மார்பகப் புற்றுநோய் வராமல் தடுக்கலாம்.
* தாய்ப்பால் கொடுப்பதனால் ஏற்படும் ஹார்மோனல் மாறுதலால் அடுத்த கர்ப்பத்தை தள்ளிப் போடலாம்.

### 6 மாதத்திற்குப் பிறகு ...

ஆறு மாதத்திற்குப் பிறகு, தாய்ப்பாலுடன் இணையுணவை அறிமுகப்படுத்த வேண்டும். இணையுணவின் அளவை சிறிது சிறிதாக அதிகப்படுத்த வேண்டும். இணையுணவை முதன் முதலில் கொடுக்கும்போது திரவ நிலையிலோ, மிதமான திட உணவாகவோ கொடுக்க வேண்டும். வேக வைத்து மசித்த உணவு வகைகளை தினமும், 3 முதல் 5 முறைகள் கொடுக்கலாம்.

### ஒரு வயதிற்குப் பின்...

தாய்ப்பாலை, தொடர்ந்து 2 வயது வரை கொடுக்க வேண்டும். வீட்டில் எல்லாருக்கும் தயாரிக்கப்படும் உணவையே குழந்தைகளுக்குத் தரலாம். தினமும் 3 - 5 முறை உணவு தரப்பட வேண்டும். தாய் அருகில் அமர்ந்து குழந்தை தானே சாப்பிட உதவ வேண்டும். தீமை தரும் உணவுகள், புட்டிப்பால், பால் பவுடர், கடைகளில் விற்பனையாகும் பலவிதமான மாவு வகைகள், பானங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்காமல் புட்டிப்



பாலோ, மாட்டுப் பாலோ, பவுடர் பாலோ, அல்லது பாக்கெட் பாலோ குழந்தைக்குக் கொடுத்தால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல், வாந்தி, வயிற்றுப்போக்கு, சுவாச நோய்கள், இன்பெக்ஷன், உடல் பருமன் போன்றவை வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே, அவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

41

பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
**03.10.2006**

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -40**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 39
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**செல்வம் சுதர்சினி,**
**பிரதான வீதி, மாங்கேணி.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




"**ஜீஸஸ்**! என்னவோ ஒரு சின்ன வேலை, ஆபத்து எதுவும் கிடையாது என்று என்னிடம் சொன்னாயே? இப்போது நீங்கள் பேசிக் கொள்வதைப் பார்த்தால் பெரிய சமாச்சாரமாக இருக்கும் போலிருக்கிறதே! இவர்களெல்லாம் சிறையிலிருந்து தப்பிப் போகிறவர்கள் போலிருக்கிறதே?"

"ஆமாம், தப்பிப்



போகிறவர்கள்தான். முன்னாடியே சொன்னால் நீ உதவி செய்திருக்கமாட்டாய். எனக்கோ ஒத்தாசைக்கு ஆள் தேவை. அதனால்தான் நான் சொல்லவில்லை. எதற்காகக் கவலைப்படுகிறாய்? மாட்டிக் கொண்டால் பூராப் பொறுப்பும் நான் ஏற்றுக்கொள்கிறேன்."

"அப்படியென்றால் சரி. ஜீஸஸ் நீ கொடுத்த பிராங்குக்காக நான் தலையை இழக்கத் தயாராயில்லை. அங்கே காவலாளி யாருக்காவது காயம் கீயம் ஏற்பட்டிருந்தால் எனக்கு ஆயுள் தண்டனை தீட்டிவிடுவார்கள்."

"இதோ பார் உனக்கும் ஜீஸஸுக்குமாகச் சேர்த்து ஆயிரம் பிராங்கு இனாம் தருகிறேன்." என்றேன் நான்.

"ரைட் அண்ணே! இது நியாயமான பேச்சு. ரொம்ப நன்றி. கிராமத்தில் நாங்கள் பட்டினியில் சாகிறவர்கள். ஜெயிலுக்குள் இருப்பதைக் காட்டிலும் ஜெயிலுக்கு வெளியே நிலைமை மோசம். ஜெயிலுக்குள் இருந்தால் அன்றாடம் வயிற்றை நிரப்பிக் கொள்ளவாவது முடியுமே? அதைத் தவிர, துணிமணி வேற தருவார்கள்."

"ரொம்ப வலிக்கிறதா?" என்று ஜோன்ஸிடம் ஜீஸஸ் கேட்டான்.

"தேவலை," என்றான் ஜோன்ஸ். "ஏன் பட்டாம்பூச்சி, இந்த உடைந்த காலை வைத்துக்கொண்டு நாம் என்ன பண்ணப்போகிறோம்?"

"பார்க்கலாம். ஜீஸஸ், நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?"

"இந்த ஆறு கலக்குமிடத்திற்கு இருபது மைல் இந்தண்டை ஒரு சிற்றாறு இருக்கிறது. அங்கே உங்களை ஒளித்து வைக்கப்போகிறேன். ஒரு வாரம் அங்கே மறைந்திருங்கள். வார்டர்களும் ரோந்துக்காரர்களும் தேடு தேடென்று தேடிவிட்டு ஓயட்டும். இன்று ராத்திரியே நீங்கள் ஆற்றின் வழியே சென்று கடலுக்குப் போய்விட்டதாக அவர்கள் நினைத்துக் கொள்ளட்டும். தப்பிச் செல்லும் கைதிகளைப் பிடிப்பதற்காக ஒரு படை இருக்கிறது. அவர்கள் மோட்டார் இல்லாத படகுகளில் வருவார்கள். ஆபத்தான பேர்வழிகள். அவர்கள் மோப்பம் பிடித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் நீங்கள் பேசினாலும் சரி, இருமினாலும் சரி, வத்திக்குச்சி கிழித்தாலும் சரி, தொலைந்தீர்கள். மோட்டார் படகுகளில் வரும் காவலாளிகள் நீங்கள் இருக்கிற சிற்றாறுக்கு வர முடியாது. வந்தால் தரை தட்டிப் போகும்."

இருள் குறைந்து கொண்டே வந்தது. ஜீஸஸுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்த இடத்துக்காக வெகுநேரம் வரை தேடினோம். அதைக் கண்டுபிடித்தபோது, விடிகாலை நாலு மணியாகிவிட்டது. கண்டவுடனேயே புதர்களினூடே சென்றோம். எங்கள் படகு புதர்ச்செடிகளை அமுக்கிக் கொண்டு சென்றது.படகு தாண்டியதும் செடிகள் நிமிர்ந்து கொண்டன. எங்களைப் பாதுகாக்கக்கூடிய கனமான திரை போல் இருந்தது அந்தப் புதர். படகு மிதக்கக்கூடிய அளவுக்குத் தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்று கண்டு பிடிப்பதற்கே பெரிய சாமர்த்தியம் தேவைப்பட்டது. வழியை மறிக்கும் கிளைகளை

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

ஒதுக்கியபடியே, புதர்களுக்குள்ளாக ஒரு மணி நேரத்துக்கும் மேலாகச் சென்றோம். தடாலென்று கால்வாய் போன்றிருந்த அந்த இடத்துக்கு வந்துவிட்டோம். அங்கே படகை நிறுத்தினோம். கரையில் சுத்தமான பச்சைப் புல் வளர்ந்திருந்தது. அப்போது காலை ஆறு மணி இருக்கும். பெரும் மரங்களின் இலைகளினூடாகச் சூரிய வெளிச்சம் துளைத்துக் கொண்டு வரவில்லை. மனதைக் கவரும் அந்தக் கூரையின் கீழ் எங்களுக்குப் பழக்கமில்லாத நூற்றுக்கணக்கான பிராணிகளின் இரைச்சல்களைக் கேட்டோம்.

"நீங்கள் ஒர வாரம் தங்கியிருக்க வேண்டிய இடம் இதுதான். இன்றைக்கு ஏழாம் நாள் நான் மறுபடி உணவு எடுத்துக்கொண்டு வருவேன்." என்றான் ஜீஸஸ். பிறகு அடர்ந்த புதர்களின் கீழேயிருந்து ஒரு சிறிய படகை வெளியே எடுத்தான். சுமார் ஆறடி நீளமிருக்கும் அது. இரண்டு துடுப்புக்கள் இருந்தன. அதில்தான் அவன் திரும்பிச் செல்ல இருந்தான்.

ஜோன்ஸைக் கவனிக்கத் தொடங்கினோம். கரையில் அவன் படுத்திருந்தான். சட்டையும், அரை நிக்கருமே அணிந்திருந்ததால் அவன் கால்கள் வெறுமையாக இருந்தன. கோடாரியைக் கொண்டு உலர்ந்த மரப்பட்டைகளை வெட்டி, சிம்புகள் தயாரித்தோம். ஜீஸஸின் உதவியாள் ஜோன்ஸின் எலும்பைச் சரியாய்ப் பொருத்துவதற்காக இழுத்தான். ஜோன்ஸுக்கு வியர்வை கொட்டியது. எலும்புகள் பொருந்தியதும், "நிறுத்து! இப்போது வலி கம்மியாக இருக்கிறது. ஆகவே எலும்பு சரியானபடி பொருந்திவிட்டது போலிருக்கிறது." என்றான். நாங்கள் சிம்புகளை வைத்து, படகில் கொண்டு வந்திருந்த சணல் கயிற்றைக் கொண்டு கட்டுப்போட்டோம். அவன் வேதனை குறைந்தது.

ஜீஸஸ் நாலு ஜதை டிரௌசர்களும், நாலு சட்டைகளும், நாலு கம்பளிக் கோட்டும் கொண்டு வந்திருந்தான். மாசுரெட்டும், ஜோன்ஸும் அவற்றை அணிந்து கொண்டார்கள். நான் அரபுக்காரனின் உடையிலேயே இருந்தேன்.

ஆளுக்குக் கொஞ்சம் 'ரம்' அருந்தினோம். புறப்பட்ட பிறகு இரண்டாவது புட்டி இது. குடித்ததும் கதகதவென்று இதமாயிருந்தது.

கொசுக்கள் ஒரு நிமிடம் கூட அமைதி தரவில்லை எங்களுக்கு. எனவே ஒரு பாக்கெட் புகையிலையைத் தியாகம் செய்ய வேண்டியதாயிற்று. சுரைக் கூட்டில் அதை ஊற வைத்து, அந்த இரசத்தை முகத்திலும், காலிலும், கையிலும் பூசிக்கொண்டோம். சிலீரென்று ஊடுருவும் ஈரத்துக்கு அந்த உல்லன் கோட்டு மிக அருமையாக ஈடு கொடுத்தது.

ஜீஸஸின் உதவியாள், "சரி வந்தாயிற்று. நீ வாக்களித்த ஆயிரம் பிராங்குகள் எங்கே?" என்றான். நான் புதருக்குப் பின்னால் சென்று, புத்தம் புதிய ஆயிரம் பிராங்க் நோட்டுடன் திரும்பினேன்.

"வருகிறேன். எட்டு நாளைக்கு இந்த இடத்தை விட்டு அசையாதீர்கள்," என்றான் ஜீஸஸ். "ஏழாம் நாள் நாங்கள் வருவோம். எட்டாம் நாள் நீங்கள் கடலுக்குப் போய் விடலாம். அதற்குள் பாய்மரத்தைத் தயார்ப் பண்ணி வையுங்கள். படகைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அந்தந்தச் சாமான் அந்தந்த இடத்திலேயே இருக்கட்டும். பத்து நாளைக்குள் நாங்கள் வரவில்லை என்றால், கிராமத்தில் எங்களைக் கைது செய்து விட்டார்கள் என்று அர்த்தம். நீங்கள் வரும்போது ஒரு வார்டரை வேறே தாக்கிவிட்டு வந்திருப்பதால், அங்கே ஏகக் கலாட்டாவாகத்தான் இருக்கப் போகிறது."

ஜோன்ஸ் ஆஸ்பத்திரிச் சுவரின் கீழே தன் துப்பாக்கியைப் போடவில்லையென்றும், ஆறு அவ்வளவு பக்கத்தில் இருக்கும் என்று தெரியாததால், சுவருக்கு மறுபுறத்தில் துப்பாக்கியை எறிந்ததாகவும், அது நிச்சயமாய் ஆற்றுக்குள் விழுந்திருக்கும் என்றும் சொன்னான்.

அவ்வளவுக்கவ்வளவு நல்லதுதான் என்றான் ஜீஸஸ். எங்களைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்குத் துப்பாக்கி அகப்படாதாகையால் நாங்கள் ஆயுதபாணிகளாக இருக்ககிறோம் என்று நினைப்பார்கள். அவர்களிடம் ஒரு கைத்துப்பாக்கியும், காட்டுச் செடிகளை வெட்டுவதற்கான ஒரு கத்தியும்தான் இருக்குமாம். எங்களிடம் துப்பாக்கி இருக்கிறது என்று எண்ணி உஷாராகவே இருப்பார்கள்.

ஒருவேளை எங்களை யாராவது கண்டுபிடித்து விடுவார்கள் போலிருந்தால் - நாங்கள் படகை விட்டுச்செல்ல நேரிடும் பட்சத்தில் - சிற்றோடையின் மேற்புறமாகவே நடந்து செல்லவேண்டும்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# துளிர் விடும் மலையகம்




**இதனால்** ஒல்லாந்தர் 1796-02-16 இல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பெனியிடம் அனைத்தையும் கையளித்துவிட்டுச் சென்றனர். அதன் பின் ஆங்கிலேயர் கரையோரப்பகுதிகளை ஆட்சி செய்தனர். அப்பொழுது தெங்கு, மீன், உப்பு, புகையிலை, கள், சாராயம் போன்றவற்றிற்கு வரி அறவிட்டதால், சிங்களவர் கிளர்ச்சியிலீடுபட்டு, கொரில்லா போர்முறையைக் கையாண்டனர். இதனால் கி.பி 1797 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1798 ஆம் ஆண்டின் பங்குனி மாதம் வரை இக் கிளர்ச்சி தொடர்ந்தது.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக 1803 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியரின் ஆளுநராக 'பிரட்ரிக் நோத்' ஏற்படுத்தப்பட்டார். இவரே முதலாவது படையெடுப்பை மலையக இராட்சியத்தின் மீதாகத் தொடுத்தார். அதன் விளைவாக கண்டி நகர்



பிடிக்கப்பட்டதும் மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அங்குறன்ஹெட்ட என்ற இடத்திற்கு ஓடித் தப்பினார். ஆனால் இவ்வெற்றி நீடிக்கவில்லை. ஏனெனில் வடக்கீழ் பருவக்காற்றினால் கடும் மழை ஏற்பட்டதன் நிமித்தமாக ஆங்கிலேய போர்வீரர்கள் சுகவீனமுற்று பலவீனமானார்கள். இது சிங்கள போர்வீரர்களுக்கு சாதகமாகிவிட்டது. இதனால் ஆங்கிலபோர் வீரர்கள் சரணடையத் தொடங்கினர். இதில் பலவீரர்கள் சிங்களவரினால் கொல்லப்பட்டனர். இவ்வாறு முதல் படையெடுப்பில் பிரித்தானியர் தோல்வி கண்டனர். இதன் பின் 1802-1812 வரையும் 'தோமஸ் மெயிற்வண்ட்' ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் மலையக இராச்சியத்துடன் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் விளைவாக சுமூகநிலை ஏற்பட்டது. அரசியல் கைதிகளான போர்வீரர்கள் விடுதலை பெற்றனர். மேஜர் டேவ்வை விடுதலை செய்ய மறுத்ததினால் இச் சுமூகநிலை நீடிக்கவில்லை.

1814 இல் கரையோரப் பகுதியிருந்து மலைநாட்டுக்குச் சென்ற வியாபாரிகளை ஒற்றர்கள் என அங்குள்ள சிங்களவர் நினைத்து துன்புறுத்தினர். மலையக இராச்சியத்திலிருந்து தப்பியோடிய கிளர்ச்சிக்காரர்களை துரத்திச்சென்று பிரித்தானியரின் குடியேற்றங்களில் வைத்து தீயிட்டுக் கொளுத்தினார்கள். இதன் விளைவாக 1815 இல் 'பிரவுன்றிக்' என்பவர் மலையகத்தைப் பிடிக்க போர் பிரகடனம் செய்தார். அதேவேளை ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் நாயக்கர் வம்சத்தை சேர்ந்தவனாயிருந்தபடியால், அவனுக்கு எதிராக மலையக இராச்சியத்தின் பிரதானிகள் செயல்பட்டனர். இப் பிரதானிகள், பிரித்தானியருக்கு உதவ முன்வந்தபடியால் நாற்பத்தைந்து நாட்களில் மலையகத்தைப் பிடித்தனர். மலையக இராச்சியத்தின் அரசனும், அரசியும் சிறையாக்கப்பட்டு கொழும்பிலும் அதன் பின்னர் இந்தியாவிலுள்ள வேலூருக்கும் நாடு கடத்தினர். இவ்வாறு இச் சுதந்திர அரசானது, பிரதானிகள், பௌத்த பிக்குகள், சாதாரண பொது மக்களால் வீழ்ச்சியடைந்தது.

பிரித்தானியரின் ஆட்சி முறையினை, 1815 இலிருந்து 1852 வரையுள்ள காலங்களில் சிங்களவர் வெறுக்கத்தொடங்கினர். ஏனெனில் முடியாட்சி முறையில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் மூலமான பரிபாலனம் வெறுப்பானதாக இருந்தது. ஹெலபொல தனக்கு முடியாட்சி கிடைக்குமென பிரிதானியருக்கு உதவியபோதும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அத்துடன் ஆங்கிலேய அதிகாரிகளே உயர்பதவிகளையும் வகித்தனர். இதன்காரணமாக சிங்கள பிரதானிகள் மேலும் சங்கடமான நிலைமைக்குள், தாங்கள் விரும்பியதைச் செய்யமுடியாமல் தவிப்பதற்கு தள்ளப்பட்டனர். ஏனெனில் ஊழல் வேலைகளினூடாக பணம் சம்பாதிக்க முடியவில்லை. இவைகள் நிமித்தமாக சுதந்திரப் போராட்டம் என்ற கொரில்லா போர்முறைகளைக் கையாண்டார்கள். இதனால் மார்ஷலோ (யுத்தகால சட்டம்) ஏற்படுத்தப்பட்டது. சுதந்திர போராட்டமானது 1816 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் தோல்வி காணவே, அதற்கு தலைமை தாங்கிய கெப்பட்டிப்பொல, மடுகெல்ல என்ற இருவரும் சிரைச்சேதம் செய்யப்பட்டனர். அதற்கு உதவியவர்களும் நாடு கடத்தப்பட்டனர். இப்போராட்டத்தை அடக்குவதற்கு கையாளப்பட்ட. கொடிய வழிமுறைகளினால், மலையகத்தில் உள்ள சாதாரண பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எடுத்துக்காட்டுகளாக நிலபுலங்கள் தீயினால் நாசமாக்கப்பட்டது. பலர் பஞ்சத்தினாலும், பிணியினாலும் அல்லற்பட்டு உயிரிழந்தனர். அதனால் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் மென்மேலும் பிரித்தானியரைக் குறித்து வெறுப்பு ஏற்பட்டது.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை செய்வதற்கு வேண்டிய அனைத்து இயற்கை வசதிகளும் இயல்பாகவே இருப்பதை, பிரித்தானியர் அறிந்தனர். இதன் காரணமாக விவசாய கைத்தொழில் அபிவிருத்தியினை ஆரம்பிக்க எத்தனித்தனர். இதற்கு பரந்தளவில் நிலங்கள் தேவைப்பட்டது. அப்போது மலைநாட்டில் விவசாயத்துக்குட்பட்டிருந்த சிங்கவர்களின் நிலங்களில் சிறிதளவை எடுத்து பயிர் செய்யத் தொடங்கினர். அதேவேளை மலைநாட்டின் பெரும்பகுதிகள் காடுகளாகவே

**ஸ்ரீ முகன்**


காணப்பட்டது. அன்று 'பிரித்தானியர் விவசாயத்துக்குட்பட்டிருந்த பெருமளவிலான நிலங்களைச் சூறையாடினர்', என பௌத்த சிங்களவரின் எண்ணங்கள் இன்றும் நிலைத்துக் காணப்படுகிறது. ஆனால் சமூகவியலாளரும், புத்தி ஜீவிகளும் இதனை மறுக்கின்றனர். மலை நாட்டின் காடுகளை அழிப்பதற்கு அதிகமான வேலையாட்கள் தேவைப்பட்டனர். அங்கிருந்த சிங்களவர்களோ நாள் கூலிக்கு வேலை செய்ய மறுத்தனர். ஏனெனில் மேற்குறிப்பிட்ட பல காரணங்களினால் பிரித்தானியரை வெறுத்தனர்.அத்துடன் ஹாமுவ என்ற கிராமத் தலைவனின் கீழ், சிங்கள தொழிலாளிகள் வேலை செய்து அவனது பராமரிப்பில் குடும்பத்தை நடத்துவது இலகுவாக இருந்தது. இதனால் குறைந்த செலவில் கூடிய இலாபத்தைப் பெறத்தக்கதான கூலியாட்கள் இந்தியாவில் இருந்து இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமையால் தென்னிந்தியர்கள் தருவிக்கப்பட்டனர்.

*(துளிர்க்கும்)*

சிரிப்பு 25

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்'





**திரைப்பட** உலகில் பெண்களின் நடமாட்டம் மற்ற உலகங்களை விட சற்று அதிகமாகவே இருக்கும். இது மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை. சாதாரணமாகவே கலை உலகில்- முக்கியமாகத் திரைப்பட உலகில் சஞ்சரிப்பவர்கள் சமுதாயத்தின் வேலிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். கலை உலகில் இராமர்களும் சீதைகளும் மிகமிகக் குறைவு! இது எந்த நாடாக இருந்தாலும் நிலைமை இதுதான். கலைஞன் மற்றவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்களோ என்று கவலைப்படுபவன் அல்ல. ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவனோ அவளோ செல்லும் பாதை வேறு. சிலர் தனக்கென்று புதுப்பாதையை வகுத்துக்கொள்வார்கள். ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடு அர்த்தம் இல்லாதது, தேவையற்றது, மனிதனின் உணர்ச்சிகளுக்கு ஒத்து வராதது என்று நினைப்பவர்கள் திரைப்பட வாசிகள்.

**காதல் வாழ்வும் கசப்பும்**

ஒரு திரைப்பட கலைஞனுக்கு ஒரே நேரத்தில் பல காதல்கள் இருப்பதும் உண்டு. இதைப் பத்திரிகைக்காரர்கள் காசை



உருவாக்கப் பெரிதுபடுத்தி எழுதுவது, சாதாரணமாகக் காணப்படுவது. ஆனால் கலைஞர்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. ஹாலிவுட்டில் ஒரு பழமொழி. விளம்பரத்தில் நல்லது, கெட்டது என்று எதுவுமே இல்லை! தவறாக, அவதூறாக எழுதினாலும், மக்கள் நம்மைப்பற்றித் தெரிந்து கொள்கிறார்களே என்று சந்தோஷப்படுவார்கள்! நம் நாட்டிலும் இப்படிப்பட்ட நிலைமை உண்டு. சிலர் நாம் மறக்கப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் தாங்களாகவே பல கற்பனைக் கிசுகிசுக்களைக் கிளப்பி விடுவார்கள்!

சாப்ளின் வாழ்க்கையிலும் இப்பேர்ப்பட்ட கிசுகிசுக்கள் வராமல் இல்லை. 'எட்னா பர்வேயன்ஸ்' இவருடைய அமெரிக்க நாட்டின் வாழ்க்கையின் முதல் காதலி. அதைப் பற்றிப் பல பத்திரிக்கைகள் கிசுகிசுக்களுக்கு கண், வாய், மூக்கு, தொப்புள் எல்லாவற்றையும் சேர்த்து எழுதின. அவைகளை எல்லாம் இருவரும் படித்துச் சிரித்து மகிழ்வார்கள்.

எட்னாவைத் திருமணம் செய்து கொண்டால், குடும்ப வாழ்க்கை, குழந்தைகள் வளர்க்கும் பொறுப்புக்கள், போன்றவையெல்லாம் தன்னுடைய திரைப்பட வாழ்க்கையையும் உழைப்பையையும் வீணாக்கிவிடும் என்ற எண்ணம்தான், அவருக்கு அவளைக் காதலியாக மட்டும் வைத்துக் கொள்ளத் தூண்டியது. சாப்ளின் ஆணழகன் அல்ல. ஆனால் அவரிடம் அழகிற்கு அப்பாற்பட்ட ஒரு வகையான கவர்ச்சி பெருமளவில் இருந்தது. இதை ஆங்கிலத்தில் 'கேரிஸ்மா' என்பார்கள். சாதாரணமாகப் பொது வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களிடம் இந்த 'கேரிஸ்மா' நிச்சயமாக இருக்கும். உதாரணமாக மகாத்மா காந்தி, பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், அறிஞர் அண்ணாதுரை, ரஜினிகாந்த்...இவர்களெல்லாம் ஆணழகர் என்று சொல்ல முடியாது. ஆனால் இவர்கள் பிரமிப்பூட்டும் வகையில் மக்களின் கவனத்தைக் கவர்ந்தார்கள் என்றால் அதற்கு அவர்களிடம் இருக்கும் 'கேரிஸ்மா' தான் காரணம்.

அந்தக் 'கேரிஸ்மா' சாப்ளினிடம் நிறையவே இருந்தது. அதன் விளைவு பலவகையான பெண்கள் அவரை வட்டமிடத் தொடங்கினார்கள். லண்டனில் ஏழையாக வாழ வழி தேடிப்போராடிக்கொண்டிருந்த நேரத்தில் அவர் உண்மையாக நேசித்தது ஹெட்டி என்ற பெண்ணை. அவள் இவரை ஏற்றுக்கொள்ள மறுத்து வேறு யாரோ ஒருவனைத் திருமணமும் செய்து கொண்டு விட்டாள் என்ற செய்தியை அவர் அறிந்தபொழுது மனம் உடைந்து போனார். அந்த இளம் வயதில் அவரைத் தாக்கிய காதல் தோல்வி பெண்களிடமிருந்து சற்று விலகியே இருக்கச் செய்தது.



இந்த வகையில் தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், பெண்கள் அவரை எப்படியாவது சிக்க வைத்துத் திருமணம் என்ற சங்கிலியைக் கழுத்தில் பூட்டி வைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். 'ஹோல்டர் ஆர்ம்ஸ்' படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் 'மில்பிரிட் ஹேரிஸ்' என்ற ஒரு இளம் பெண் இவர் வாழ்க்கையில் இடி, மின்னல், மழை, காற்று போன்றவைகளின் துணையோடு நுழைந்தாள்! 'மில்பிரிட்' வயது பதினாறைத் தொட்டுக் கொண்டிருக்கும் மங்கை. நீளமான இளம் வெயில் வண்ணத்தில் அவள் முடி அவளை பதினான்கு வயதுப் பெண்ணாகவே காட்டியது. அவளுடைய தாய் ஹாலிவூட் ஸ்டுடியோ ஒன்றில் 'காஸ்ட்யூம்' (உடுப்பு)தயார் செய்யும் பகுதியில் வேலையாக இருந்தார். அழகுநிறைந்த தன் பெண்ணைப் பத்தாவது வயதிலிருந்தே நடிக்க வைத்து விட்டாள். திரை உலக மேதை 'க்ரிபிட்க்' படங்களில் சிறு வேடங்களில் நடித்தார். அந்த மேதை அளித்த ஒரு சிறப்பு விருந்தில் மில்பிரிட்டும் அவருடைய தாயாரும் கலந்து கொள்ள வந்தார்கள். சாப்ளின் க்ரிபிட்கின் மிகவும் நெருங்கிய நண்பரானதால் அவரும் அழைக்கப்பட்டிருந்தார். மில்பிரிட்டை சாப்ளினுக்கு அறிமுகப்படுத்தினார். தோள் கண்டார் தோளே கண்டார் என்ற வகையில் அவள் மஞ்சள் நிற முடியைக் கண்டதும் சொக்கிப் போனார் சாப்ளின். அதற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் அமைந்திருந்தது அவளுடைய மயக்கும் விழிகள். அருகில் வரத்தூண்டும் உதடுகள், அணைக்க வாரும் ஐயா என்று கூவும் உடலமைப்பு எல்லாமே சாப்ளினை உச்சி முதல் உள்ளங்கால்வரை சொக்க வைத்தன! ***(தொடரும்)***

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 29

## புரியாத புதிர் யோன் ராணி

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

**4ஆம்** ஹென்றி மன்னரின் 7 பிள்ளைகள், அவர் திருமணம் முடித்த யோன் ராணியின் 9 பிள்ளைகள் என மகிழ்ச்சியாகச் சென்றுகொண்டிருந்த அந்த ராஜ குடும்பத்தின் வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவம் ஒன்று 1413ஆம் ஆண்டு இடம் பெற்றது.

எதிர்பாராத விதமாக 4ஆம் ஹென்றி மன்னர் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பலனளிக்காமலேயே இறந்து போனார். யோன் ராணி, பிள்ளைகள் மட்டுமல்ல இங்கிலாந்து தேசமே மன்னரின் மரணத்தை சிறிது கூட எதிர்பார்த்திருக்கவில்லை.

4ஆம் ஹென்றி மன்னரின் மரணத்தினை அடுத்து அவரது மூத்த மனைவியின் மூத்த மகன் 5ஆம் ஹென்றி மன்னராக முடிசூடினார். அப்போது அவர் பராய வயதிற்கு வந்திருந்தார். இதில் முக்கிய விடயம் என்னவெனில், தன்னுடைய 9 பிள்ளைகள், 4ஆம் ஹென்றி மன்னருடைய 7 பிள்ளைகள் என 16 பிள்ளைகளையும் திருமணத்தின்பின் ஒன்றாகவே வளர்த்து வந்த யோன் ராணி, பிள்ளைகளிடம் எந்த விதமான பாகுபாட்டினையும் காட்டியிருக்கவில்லை.


16 பிள்ளைகளையும் எந்த விதமான வித்தியாசமும் காட்டாமலேயே பாசத்தைப் பொழிந்து வளர்த்து வந்தாள். மன்னரின் மரணத்தின்பின் பதவி ஏற்ற 5ஆம் ஹென்றி மன்னர் கூட யோன் ராணியை 'அன்புத் தாய்' என்றும், 'அருமையான அன்னை' என்றும் மிக உயர்ந்த ஸ்தானத்திலேயே போற்றி வந்திருந்தார்.

1413ஆம் ஆண்டு 4ஆம் ஹென்றி மன்னரின் மரணத்தின்பின் பதவியேற்ற 5ஆம் ஹென்றி மன்னர், யோன் ராணியிடம் மிக அதிக அன்பு காட்டியது மட்டுமில்லாமல் அவளுக்கு 'ராஜா மாதா' பட்டமும் கொடுத்து உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருந்தார்.

காலங்கள் கடந்து சென்றபோது 1415ஆம் ஆண்டு பிரான்ஸ் படையெடுப்பினை அடுத்து இங்கிலாந்து - பிரெஞ்சு போர் வெடித்தது. சிறிய வயதில் இருந்தே அரண்மனை வாழ்க்கை வாழ்ந்து வந்த 5ஆம் ஹென்றி மன்னர் சகல போர்ப் பயிற்சிகளையும், யுத்தக் கலைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். எனவே சிறிதும் தாமதிக்காமல் இங்கிலாந்தின் சகல படைத் தளபதிகளையும் திரட்டி போர்ப் பிரகடனம் செய்து அப்படைக்குத் தானே தலைமை தாங்கிச் சென்றார்.

அவ்வாறு படையெடுப்பிற்கு 5ஆம் ஹென்றி மன்னர் சென்றபோது அவரின் தம்பியாகிய இளவரசன் ஜோன் பராய வயதை அடையாமல் இருந்தான். ஆயினும் சிறிதும் தயக்கமில்லாத மன்னர் தனது சிறிய தாயாராகிய யோன் ராணியை அரசரின் பிரதிநிதியாக அமர்த்தி ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றார்.

இச்சமயத்தில் ஆட்சி பீடத்தில் யோன் ராணி அமர்ந்தது அநேகருக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் முக்கியமானவர்கள் 4ஆம் ஹென்றி மன்னரின் முதல் மனைவியின் உறவினர்கள். மன்னரின் முதல் மனைவி இறந்த போது அரண்மனையில் கூடாரமடித்திருந்த உறவினர்களும், உறவு எனச் சொல்லிக்கொண்டோரும் பிள்ளைகளைப் பராமரிப்பதாகப் பாசாங்கு காட்டி அரண்மனையில் சுகபோக வாழ்வு வாழ எண்ணியிருந்தனர். ஆயினும் பிரிட்டானியின் இளவரசியை, அதுவும் கணவனை இழந்த 9 பிள்ளைகளின் தாயாராகிய யோன் ராணியை மன்னர் திருமணம் செய்வார் என கனவிலும் எண்ணிப்பார்த்திருக்கவில்லை. இந்தத் திருமணத்துடன் சகல உறவுகளும், உறவினர்கள் எனச் சொல்லிக் கொண்டோரும் அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை அப்போது ஏற்பட்டிருந்தது. இப்பேற்பட்ட சூழ்நிலையில் யுத்த களத்திற்குச் சென்ற 5ஆம் ஹென்றி மன்னர், யோன் ராணியை தனது பிரதிநிதியாக ஆட்சியில் அமர்த்திவிட்டுச் சென்றது மன்னரின் முதல் மனைவியாகிய மகாராணியின் உறவினர்களின் மனதில் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது



போலிருந்தது.

எப்படியாவது யோன் ராணியை கவிழ்க்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அவர்கள், அவள் ஒரு சூனியக்காரி என்ற கருத்தினை மெள்ள மெள்ள பரப்பத் தொடங்கினார்கள். தனது சூனிய வித்தை மூலமே 4ஆம் ஹென்றி மன்னரை மணம் முடித்ததாகவும், பெறா மகன் முறையான 5ஆம் ஹென்றி மன்னரை வசியப்படுத்தி ஆட்சி நிர்வாகத்தை கைப்பற்றியதாகவும் மிக நம்பும்படியான கட்டுக் கதைகளைப் பரப்பி விட்டனர்.

யுத்தம் முடிந்து நாடு திரும்பிய 5ஆம் ஹென்றி மன்னரின் காதுகளுக்கும் இச்செய்தி எட்டியது. முதலில் அதை நம்ப மறுத்தாலும், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல அரசரும் உறவினர்களின் பேச்சுக்களுக்கு இழுபட்டுப்போனார்.

மூன்று வருடங்கள் கழித்து 1418ஆம் ஆண்டு மீண்டும் இங்கிலாந்து - பிரெஞ்சு யுத்தம் வெடித்தது. இம்முறையும் படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற 5ஆம் ஹென்றி மன்னர், போன முறை போலல்லாது இம்முறை தனது தம்பியாகிய ஜோன் இளவரசனை தனது பிரதிநிதியாக ஆட்சியில் அமர்த்திவிட்டுச் சென்றார்.

ஏற்கனவே தனது உறவினர்களினால் மூளைச் சலவை செய்யப்பட்டிருந்த ஜோன் இளவரசன், யோன் ராணியை பில்லி சூனியம் செய்ததாகக் குற்றஞ்சாட்டி சிறையில் அடைத்தான். இதைச் சற்றும் எதிர்பாராத யோன் ராணி மனமொடிந்து போனாள். அதிர்ச்சியடைந்த அவளுக்கு தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுதலிக்கக்கூட தெம்பிருக்கவில்லை. இதன் காரணமாக அவள் சூனியக்காரிதான் என்ற பரப்புரை மெள்ளமெள்ள உறுதியானது.

அது மட்டுமின்றி, யோன் ராணி பிரிட்டானியில் இருந்து கொண்டு வந்த அவளுடைய சீதனச் சொத்துக்கள் கூட முற்றாகப் பறிமுதல் செய்யப்பட்டன. ஏறக்குறைய 5 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின் 1423ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட யோன் ராணி இங்கிலாந்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரிட்டானியின் ஹெவறில் ஒட்டிபோவர் எனும் அவளது மாளிகையில் தங்க வைக்கப்பட்டாள்.

ஆனால் சிறைவாசத்தின் பின் முற்று முழுதாக மனம் ஒடிந்து போயிருந்த யோன் ராணி கடைசி வரை எவருடனும் பேசவில்லை. தானும் தன் பாடுமாக வெறித்த பார்வையுடனேயே அமர்ந்திருப்பாள்.

யோன் ராணியை சிறையில் இட்டாலும் அவளது 9 பிள்ளைகளையும் 5ஆம் ஹென்றி மன்னரும் இளவரசன் ஜோனும் தங்களது சொந்தச் சகோதரர்களைப் போலவே அன்பு பாராட்டி ராஜ ஸ்தானம் கொடுத்து வைத்திருந்தனர். ஆயினும் 4ஆம் ஹென்றி அரசரின் பிள்ளைகளுடன் மட்டுமின்றி, தனது பிள்ளைகளுடனும் கூட ஒரு வார்த்தையும் யோன் ராணி பேசவில்லை.

இறுதியில் 1437ஆம் ஆண்டு ஜுலை மாதம் 9ஆம் திகதி அவள் காலமானாள். இதில் அதிசயம் என்னவென்றால் அவள் இறந்த போது, லண்டன் டவரில் வளர்க்கப்பட்டு வந்த சிங்கங்களும் ஒரேயடியாக இறந்து போயின. அவள் சூனியக்காரி எனக் காட்டுவதற்காக அவள் மீது குற்றம் சுமத்தியோரே விஷம் வைத்து சிங்கங்களைக் கொன்று விட்டதாகச் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.

எப்படி இருந்த போதிலும் யோன் ராணியின் பூத உடல் கான்ரபெரியில் உள்ள 4ஆம் ஹென்றி மன்னரின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டு வெண் சலவை கல்லினால் நினைவுச் சின்னமும் அமைக்கப்பட்டு இற்றைவரை காணப்படுகின்றது.

***(இரகசியங்கள் தொடரும்...)***

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## புலிகளுக்கெதிரான யுத்தத்தில் இந்தியா சந்தித்த சவால்கள்

**1987** ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை இந்தியப் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் கடுமையான மோதல் இடம் பெற்றது. இந்தியப் படையினரின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத புலிகள், பாதுகாப்புத் தேடிப் பின்தங்கிய பகுதிகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர். இந்தியா, இராணுவ நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்றும் புலிகள் இயக்கம் இருக்கக்கூடிய ஆயுதங்களைக் கையளித்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுச் சமாதான வழிமுறைக்கு வரவேண்டுமென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதேவேளை பிரதமர் பிரேமதாசாவும் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கி விட்டனர். வடக்கு - கிழக்கில் புலிகள் இயக்கத்துக்கு எதிராகப் போராட வேண்டுமென்றால், அதற்கு வெளிநாட்டு இராணுவம் தேவையில்லையென்றும் இலங்கைப் படையினர் அதனைக் கவனித்துக் கொள்வார்களென்றும் பிரதமர் பிரேமதாசா பிரசாரம் செய்யத் தொடங்கினார். ஒக்டோபர் 17ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அறிக்கை ஒன்றினை விடுத்தார். இலங்கையின் வடக்கு - கிழக்கில் எழுந்துள்ள புதிய சூழ்நிலையை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அனுதாபத்துடன் அணுக வேண்டுமென்று அதில் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். யுத்தத்தைப் புலிகள் இயக்கம் கைவிட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் நலன்களே முக்கியமானதென்பதைப் புலிகள் இயக்கம் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கிடையில் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள், இராணுவ நடவடிக்கையை நிறுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு இந்தியாவைக் கோரினர். புலிகள் இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளையும் வன்செயல்களையும் கைவிட்டு அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வரவேண்டுமென்பதற்காகவே இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ராஜீவ் காந்தி தெரிவித்தார்.




பிரிவினைவாத, பயங்கர நடவடிக்கைகளை நிறுத்துவதற்காகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவுமே இந்தியா, இலங்கை விவகாரத்தில் தலையிட்டதென்று புதுடில்லி தெரிவித்தது. புலிகளைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்ட இந்தியப் படை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் தனது பிரதேசத் தலைமையகங்களை விஸ்தரித்துக் கொண்டது. இவற்றுக்கெல்லாம் கட்டளையிடும் இந்தியப் படைகளின் தலைமையகம் சென்னையிலுள்ள சென்.ஜோர்ஜ் கோட்டையில் அமைந்திருந்தது. இலங்கையின் வட, கிழக்கில் தங்கியிருந்த இந்தியப் படைகளின் முற்றுமுழுதான கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஏ.எஸ்.கல்கற் நியமிக்கப்பட்டிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்த படைகளின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டேயும் திருமலையிலிருந்த படைகளுக்கு மேஜர் ஜெனரல் ஜமீலும் மட்டக்களப்பில் மேஜர் ஜெனரல் வீ.பி.சிங்கும் வவுனியாவில் மேஜர் ஜெனரல் குப்தாவும் நியமிக்கப்பட்டனர். இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்த இந்தியப் படையில் காலாட்படையோடு கடற்படை, கரையோரக் காவல்படை, விமானப்படை ஆகியவையும் இணைக்கப்பட்டிருந்தன. அதாவது, 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கை தரையில் மட்டுமல்ல, இலங்கை - இந்திய கடல் எல்லைகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதனையே இது குறிக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், இலங்கையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கெதிரான நடவடிக்கைகளைத் தூண்டிவிட்டதைப் போன்று இந்தியாவில் ராஜீவ் காந்திக்கெதிரான

(அரசியல் தொடர்)

விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் கிளப்பி விட்டன. ராஜீவ் காந்தி, போபர்ஸ் ஆயுதக் கொள்வனவு மோசடியை மறைத்து, இந்தியர்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டாரென்று இந்தியப் பத்திரிகைகள் காரசாரமாக விமர்சித்தன. ஜெயவர்த்தனா அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாதலால், அமெரிக்காவின் அழுத்தத்திற்கு ஆட்பட்டே ராஜீவ் காந்தி இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டாரென்று வேறு சில ஊடகங்கள் விமர்சித்தன. பிரபாகரனுக்குப் பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்தே இந்த ஒப்பந்தத்துக்கு ராஜீவ் காந்தி ஒப்புதல் பெற்றாரென்று வேறு சில ஊடகங்கள் விமர்சித்தன. இதேவேளை, தமிழகத்திலிருந்தும் ராஜீவ் காந்திக்கு எதிர்ப்பலைகள் எழுப்பட்டன. அப்போது தி.மு.க.வில் அங்கம் வகித்த வைகோ என்படும் வை.கோபாலசாமி மற்றும் பழ.நெடுமாறன் உட்பட பலர் பிரபாகரனுக்கு ஆதரவாகக் குரலெழுப்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழக முதல்வராகவிருந்த எம்.ஜி.ஆர். புலிகளுக்கு உதவிகள் பல புரிந்தார். அவர் கணிசமான நிதியுதவியும் ஆயுத உதவியும் வழங்கினாரென்று எழுந்த குற்றச்சாட்டுக்கள் ராஜீவ் காந்திக்குப் பெரும் வேதனையை ஏற்படுத்தியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முற்றுமுழுதான ஆதரவை வழங்கிய எம்.ஜி.ஆர். இந்தியப் படை புலிகளைத் தாக்கத் தொடங்கிய பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமை பல அரசியல் தலைவர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. இலங்கையில் காயப்படும் புலி உறுப்பினர்கள் தமிழகத்துக்கு வந்து சிகிச்சை பெற்றுத் திரும்பக் கூடிய அளவுக்கு புலிகளுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன.

தமிழ் நாட்டிலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்பட்டதாகவும் அப்போது குற்றச்சாட்டுகள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், அமைச்சர் லலித் அதுலத் முதலி தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின், இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கி வந்ததோடு, புலிகள் இயக்கத்தினருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். யாழ்ப்பாணத்திலிருந்த அரசாங்க அதிகாரிகளூடாகவும் ஐரோப்பாவிலிருந்த புலி இயக்க ஆதரவாளர்களூடாகவும் இத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த முயற்சிகளுக்கு அப்போதைய பிரதமரான பிரேமதாசாவின் முற்றுமுழுதான பங்களிப்பும் இருந்தது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்ற விசேட அந்தஸ்தை புலிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைப் பிரதமர் பிரேமதாசா வற்புறுத்துவாரென்று புலிகளுக்குத் தகவலனுப்பப்பட்டது. அத்துடன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குப் பதிலாக மற்றொரு ஒப்பந்தத்தை புலிகளுடன் செய்துகொள்ள இலங்கை தயாரென்றும் அதுலத் முதலி புலிகளுக்குத் தகவலனுப்பினார்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

புலிகளுக்கெதிரான ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், இந்திய அரசும் இந்தியப் படையும் உதவி வருவதாக ஏற்கனவே குற்றஞ்சாட்டி வந்த புலிகள் இயக்கத்திற்கு ஆயுதம் மற்றும் நிதியுதவி



எம். ஜி. ஆர் — பிரபாகரன்

வழங்கத் தயாரென்றும் லலித் அதுலத் முதலி புலிகளுக்கு அறிவித்தார். இந்தியப் படைக்கெதிரான யுத்தத்திற்கு இலங்கை அரச தரப்புகளிலிருந்தே கணிசமான உதவிகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவுக்கு ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டு கையளிக்கப்பட்டதோடு, இலங்கைப் படையினரூடாகவும் வடக்கு - கிழக்கில் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

ஒருபுறத்தே இந்திய இராணுவம் இலங்கையில் புலிகளுக்கு எதிராகப் போராடினாலும் சென்னையில் அப்போது தங்கியிருந்த புலி இயக்க முக்கியஸ்தர் கிட்டுவுடன் இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. வன்செயல் நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லுமாறு 'றோ' கிட்டுவுக்கு வலியுறுத்தியது.

இதற்கிடையில் இலங்கை - இந்திய ஒப்பந்த விதியை அமுல்படுத்துவதற்குப் புலிகள் முன்வராதவரை, வடக்கு - கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாகத்தை அமைக்கும் பணிகளை தான் நிறுத்துவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தார். இது ராஜீவ் காந்திக்குப் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. புலிகள் வழிக்கு வந்தாலென்ன, வராவிட்டாலென்ன இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளை அமுல்படுத்துவதற்கான முயற்சியை எடுக்குமாறு ராஜீவ் காந்தி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சார்க் நாடுகளின் மூன்றாவது உச்சி மாநாடு நேபாளத் தலைநகரான காத்மண்டுவில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. காத்மண்டு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பும் வழியில் புதுடில்லிக்கு வருமாறு ராஜீவ் காந்தி, ஜெயவர்த்தனாவுக்கு அழைப்பு விடுத்தார். இலங்கையில் எழுந்துள்ள புதிய நிலைமைகள் தொடர்பாகவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்காகவே ஜெயவர்த்தனா புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

(தொடர்ந்து வரும்....)

# நள்ளிரவு மல்லிகை




பிரபாகரனின் வீட்டுக்கு வந்த குமாரும் குட்டப்பனும் பிரபாகரன் சந்துநாயருடன் சேர்ந்துகொண்டதாகச் சொல்கிறார்கள். அம்மா, அதுக்கு வழியில்லை என்கிறார். இதே சமயம் பிரபாகரனின் உருவில் இருந்த கோவிந்தன் கல்லூரி காவல்காரனுக்கு தெரியாமல் படிக்கட்டு வழியாக 'லாப்' இருக்கும் இடத்தை நோக்கிச் செல்கிறான். திடீரென அங்கு தோன்றிய இருவரை தூக்கி வீசுகிறான். எதிர்பாராத இந்த நிகழ்ச்சி அவர்களை நடுங்கவைக்கிறது. இதை கண்டு நடுங்கிய படி நின்ற ஒரு பெண், ஓட முயன்ற போது கோவிந்தன் அவளை பாய்ந்து பிடிக்கிறான்.

**தனக்கு** முன்பாக நின்று கொண்டிருப்பவன் மனிதப் பிறவிதானா என்ற சந்தேகம் கூட அவளிடம் எழுந்தது. இருப்பினும் அவனிடமிருந்து விடுபடக் கடுமையாக முயற்சி செய்தும் பலிக்காமல் போனது.

கோவிந்தன், அவளைத் தன்னோடு சேர்த்துப் பிடித்து நிறுத்திக் கொண்டான். அப்போது அவன் முழுமையான ஒரு பிசாசாகவே மாறிவிட்டிருந்தான்.

சற்று நேரத்திற்குள் அவளது உடம்பு அசைவற்று அப்படியே படிக்கட்டின் அருகே விழுந்தது. கோவிந்தன் அவளைக் கீழே தள்ளிவிட்டு மாடிப்படிகளில் ஏறத் தொடங்கினான்.

லாபரெட்டரி அறை எங்கிருக்கிறது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால் நேராக அதன் முன்னால் வந்து நின்றான். கதவு வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருந்தது.

இந்தக் கதவும் சுலபமாகத் திறக்கப்பட்டது.

அதே நேரம், காலேஜின் பெரிய ஹாலிலிருந்த கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடித்தது.

உட்புறமிருந்த ஸ்டோர் ரூம் அறையும் பூட்டப்பட்டிருந்தது. அதே சமயம் ஸ்ரீதேவி வெளியேற முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

கோவிந்தன் கதவைத் தள்ளித்திறந்த அதே நேரம், ஸ்ரீதேவியும் தட்டுப்பட்டாள்.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"வழியில ஒருத்தியைக் கொலை பண்ணிட்ட இல்லையா?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

**எழுதுவது**
**சிவன்**

கோவிந்தன் சட்டென்று தன் உதடுகளைத் துடைத்துக் கொண்டான். அவனது கையில் இரத்தத் துளிகள் ஒட்டியிருந்தன.

"ஒரு பெண்ணோட இரத்தத்தைக் குடிச்சிருக்கேன்!" - அவன் பதிலளித்தான்.

"அப்படியானால் நிலைமை ரொம்பவும் சிக்கலாகி விட்டது. இனிமேல் நீ இங்கே இருக்கவோ, நுழையவோ முடியாது. அவங்க கண்டுபிடிச்சுடுவாங்க." - ஸ்ரீதேவி கூறினாள்.

"அதெப்படி!"

"கண்டுபிடிச்சிடுவாங்க!"

"அதை நான் பார்த்துக்கிறேன். அது கிடக்கட்டும், நான் எதுக்காக வந்திருக்கேன்னு தெரியுமா?"

"தெரியும். என்னோட எலும்புக்கூட்டை இங்கிருந்து எடுத்துப் போய் அழிக்கிறதுக்கு."

"அப்படியொரு பொறுப்பை என்கிட்ட ஒப்படைச்சிருக்காங்க."

"அதனால உனக்கு என்ன பலன்?"

"நான் உயிரோட இருந்த போது எப்படியெல்லாம் நடந்துக்கிட்டனோ, இனிமேலும் அப்படியெல்லாம் நடக்க முடியும்கிறதுதான். அதாவது இன்னும் வலுவோடு இருப்பேன்."

"அதெல்லாம் உன்னோட கனவு, தங்களோட நோக்கத்தை நிறைவேத்திக்க உன்னை



பயன்படுத்திக்கிறாங்க. அவங்களோட தேவை முடிஞ்சுட்டா, உன்னை அழிக்கவும் தயங்க மாட்டாங்க தெரியுமா?"

"இனிமேல் அப்படிச் செய்ய அவர்களால் முடியாது. என்னுடைய சக்தி அவர்கள் நினைத்த எல்லையைத் தாண்டிவிட்டது." - கோவிந்தன், ஸ்ரீதேவியை நோக்கி முன்னேறினான்.

"அசையாதே, அங்கேயே நில். என்னைத் தொடக்கூடாது நீ. நான் உண்மையில யாருன்னு தெரியுமா உனக்கு? இப்ப நான் ஒரு பிரம்ம ரஷஸ், புரிஞ்சுதா? என்னைத் தொட்டா நீ இப்போ சாம்பலாகிப் போய்விடுவாய், நிரூபிக்கணுமா?" ஸ்ரீதேவி சட்டென்று அவனது இடது மணிக்கட்டைப் பிடித்தாள்.

அவள் கைவைத்த பகுதியின் கீழ்புறப் பகுதி அப்படியே உடம்பிலிருந்து கழன்று விழுந்து எரியத் தொடங்கியது. இருவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தக் கைப்பகுதி சாம்பலாகிப் போனது.

ஆபத்தை உணர்ந்த கோவிந்தன் சட்டென்று அங்கிருந்து பறந்தான். அரைமணி நேரத்துக்குள் எப்படித்தான் அவன் சந்து நாயரின் தேங்காய் கோடவுனை அடைந்தான் என்பது அவனுக்கே புரியவில்லை.

அங்கு சந்து நாயரும் ஜயந்தனும் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அவனைப் பார்த்ததும் போன காரியத்தை வெற்றியுடன் முடித்துவிட்டு வந்திருப்பான் என்று தோன்றியது.

"எங்கே... கொண்டு வரலையா?" ஜயந்தன் கேட்டார்.

"இதைப் பார்த்தீங்களா?" - கோவிந்தன் தனது இடது கையைக் காட்டினான்.

"என்ன...என்ன ஆச்சு?" - ஜயந்தன் பதற்றத்துடன் கேட்டார்.

"நீங்க சொன்ன எலும்புக்கூடு என் கையைப் பிடிச்ச அடையாளம். அவளுக்கு ஏதோ பிரத்தியேக சக்தி கை வந்திருக்கு. அவள் பிரம்ம ரஷஸா மாறியிருக்கிறாள்."

"ஓகோ....கதை அப்படிப் போகிறதா? அப்படியானால் இனிமேல் உன் ஜம்பம் அவளிடம் பலிக்காது. நானேதான் நேரடியாக ஈடுபட வேண்டும். என்னால் அது முடியும்." ஜயந்தன் தன்னம்பிக்கையுடன் பேசினார்.

சந்து நாயர் ஏறத்தாழ துவண்டே போனார்.

தன்னுடைய நோக்கம் எப்படியும் இன்று நிறைவேறிவிடும் என்று நினைத்தார். ஸ்ரீதேவி இப்படி நாளுக்கு நாள் சக்தி பெற்று வந்தால், தனது நோக்கம் ஈடேறுவது கடினம் என்று அவருக்குத் தெரிந்து விட்டது.

"பயப்படாதீர்கள் சந்து நாயரே, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்." - ஜயந்தன் உறுதியளித்தார்.

"அதற்கு என்ன உத்தரவாதம்?"

"வழி இருக்கிறது. பகல் நேரத்தில் அவள் வெறும் எலும்புக்கூடுதான். அந்தச் சமயத்தில் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. அப்போது அவளை அழித்து விட வேண்டியதுதான்." - ஜயந்தன் குரல் உறுதியுடனிருந்தது.


"பகல் நேரத்தில் நாம் எப்படி இதைச் செய்ய முடியும்?" சந்து நாயர் கேட்டார்.

(வாசனை வீசும்...)

மனதுக்கு நிம்மதி

# தியானம் பழகுங்கள்!

**அவன்** ஒரு வியாபாரி. எதிர்காலத்தில் பெரிய தொழிலதிபராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், சரியாகத் திட்டமிட்டுச் செயல் படாததால், அவன் பெரிய நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தது.



மிகுந்த கவலையில் ஆழ்ந்த அவன் வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், ஊரைவிட்டு ஒதுக்குப்புறமாக இருந்த ஆற்றங்கரைக்குப் போனான். அங்கே மெல்லிய நிலா வெளிச்சத்தில் ஆற்று மணலில் அமர்ந்து நினைவுகளை ஓடவிட்டான். வியாபாரத்தில் தோற்றுப்போன அவலம் அவனை அழுத்தியது. பங்குதாரர்கள் எப்படியெல்லாம் தனக்குத் துரோகம் செய்தார்கள், நம்பவைத்துக் கழுத்தறுத்தார்கள் என்று எண்ணியெண்ணி வேதனையில் மூழ்கினான்.

தொடர்ந்து எப்படி வியாபாரம் செய்யப்போகிறோம்... குடும்பத்தை எப்படி நடத்தப்போகிறோம் என்பது போன்ற எதிர்காலக் கவலைகள் வேறு ஒருபுறம் எழுந்து அடங்கின. இந்தச் சிந்தனையினூடே அவன் வலது கை அவனை அறியாமல் ஆற்றுமணலைத் துழாவிக் கைக்குத் தட்டுப்பட்ட சிறு சிறு கற்களை எடுத்து ஆற்றில் வீசியவண்ணம் இருந்தது. இப்படியாக அவன் அன்றிரவு முழுதும் அங்கேயே அமர்ந்திருந்தான்.

பொழுது விடிய ஆரம்பித்தது! வெளிச்சம் பரவியது. ஆற்றிலே வீசுவதற்கு அவனைச் சுற்றி இருந்த கற்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. அவன் தன் கையில் இருந்த கடைசிக் கல்லைப் பார்த்தான். பிரமித்துவிட்டான். காரணம் அது சாதாரணக் கூழாங்கல் இல்லை. விலையுயர்ந்த வைரக்கல்.

யாரோ கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்து வந்த வைரக்கற்களை ஆற்றங்கரையில் தவற விட்டுவிட்டு ஓடியிருக்கிறார்கள். அவற்றைத்தான் அவன் இருட்டில் இன்னதென்று அறியாமல் எடுத்து வீசியிருக்கிறான்.

ஒரு வகையில் பார்த்தால் நம்மில் பலர் அந்த வியாபாரி மாதிரித்தான். கடந்தகாலம் மற்றும் எதிர்கால நினைவுகளில் மிதந்து கொண்டு நிகழ்காலம் என்ற வைரக்கற்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

செக்கு மாடு மாதிரி திரும்பத் திரும்ப ஒரே வேலையைத் தொடர்ந்து செய்யும்போதுதான் சிந்தனை நிகழ்காலத்தை மறந்து, கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ இலக்கே இல்லாமல் மிதக்க ஆரம்பிக்கிறது.

ஒரு நாள் குரு ஒருவர் தன் சிஷ்யர்களைப் பார்த்துக் கேட்டார்: "சந்தோஷம் எங்கே இருக்கிறது?"

வெற்றி, வீரம், தானம், செல்வம், பெண், பொன், மண், மது என்று ஆளாளுக்கு ஒரு பதில் சொன்னார்கள்.

குரு அந்தப் பதில்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

"சரி கேள்வியை மாற்றிக் கேட்கிறேன். அழகு எங்கே இருக்கிறது?" இந்தக் கேள்விக்கும் பச்சைப் பசேல் என்கிற செடிகள் அழகு, அவற்றில் பூத்திருக்கும் வண்ண வண்ணப் பூக்கள் அழகு... பூக்களில் அமரும் வண்ணத்துப்பூச்சிகள் அழகு, வானம் அழகு, வானவில் அழகு, மேகம் அழகு... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் அல்லவா? ஆனால், கண்கள் இல்லையென்றால் அந்த அழகையெல்லாம் எப்படி நம்மால் பார்த்து ரசிக்க முடியும்?

அதே மாதிரிதான் சந்தோஷமும். நீங்கள் சொன்ன வீரம், வெற்றி, தானம், என்று பல விஷயங்களில் மனிதனின் சந்தோஷம் அடங்கியிருக்கலாம். ஆனால் அந்த சந்தோஷத்தை அனுபவிக்க நமக்கு வேண்டியது விழிப்பு உணர்வு" என்றார் குரு.

நம் உடலின் ஐம்புலன்களும் விழிப்பு உணர்வோடு கூர்மையாகவும் உஷாராகவும் இருக்கும்போது, ஒரு த்ரில் உண்டாகிறது! அந்தத் த்ரில்தான் வாழ்க்கையை சுவாரஸ்யப்படுத்துகிறது.

கரணம் தப்பினால் மரணம் என்று தெரிந்தும் சில வீரர்கள் கார் ரேஸில் உற்சாகமாகக் கலந்து கொள்கிறார்களே, அதற்குக் காரணம் அந்தத் 'த்ரில்' தான்!

நம் சிந்தனையைக் கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ மிதக்கவிடாமல் நிகழ்காலம் பற்றிய விழிப்புணர்வோடு செயல்பட வைக்கவேண்டும். அதுதான் த்ரில். அதுதான் சுகம்.


சரி... நிகழ்காலத்தில் வாழ்வது எப்படி? ஒவ்வொரு நிமிடமும் விழிப்புணர்வோடு இருப்பது எப்படி?

தியானத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் சின்முத்திரை காட்டுவதைப் பார்த்து பார்த்திருப்பீர்கள். சின்முத்திரைக்கான விளக்கம் என்ன? அடுத்தவர் மீது குற்றம் சுமத்த நாம் நீட்டும் சுட்டு விரல், இலக்கில்லாமல் பறக்கும் நம் சிந்தனையின் குறியீடு. அதை ஆத்மாவின் குறியீடாக விளங்கும் கட்டை விரலை நோக்கி மண்டியிட வைத்தால் பூஜ்யத்தின் வடிவம் கிடைக்கிறது. பூஜ்யம் என்பது வெற்றிடத்தின் அடையாளம்.

இந்த விநாடியின் அருமையை நாம் உணர வேண்டும் என்றால் முதல் கட்டமாகச் சிந்தனைகள் அற்ற வெற்றிடம் நம் மனதில் உருவாகவேண்டும். சின்முத்திரையின் தத்துவம் இதுதான்!

சரி, சிந்தனைகள் அற்ற வெற்றிடம் நம் மனதில் எப்படிச் சாத்தியமாகும்?

மீன் கடையைப் போல நம் மனசுக்குள் சதா பேச்சுச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது! அதை முதலில் நிறுத்த வேண்டும். வெளியே இருந்து வரும் ஓசைகள் நம் காதுகளில் விழுந்துகொண்டே இருக்கிறது. அவற்றைக் கேட்காமல் புறக்கணிக்க வேண்டும். நாம் ஆழமாக உள்வாங்கி வெளியே விடும் மூச்சுக்காற்றில் மட்டுமே நம் கவனம் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். இப்படி சிந்தனை, பேச்சு, எண்ணம், ஒலி எதுவுமே இல்லாத



அந்த வெற்றிடம் அதிகச் சக்தி படைத்தது.

சிதம்பர ரகசியம் என்று சொல்லி வெற்றிடத்துக்கு நாம் பூஜை செய்வதும் இந்தக் கருத்தை வலியுறுத்தத்தான்.

இந்தப் பயிற்சிக்குத்தான் தியானம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். தியானத்தின் சக்தி அளப்பரியது. அதிகம் வேண்டாம், தினமும் ஒரு பத்து நிமிடம் இந்தப் பயிற்சியைச் செய்து பாருங்கள்.

நீங்கள் உங்கள் மனதின் எஜமான் ஆவீர்கள்...!

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 186க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சி. தங்கவடிவேல், 91 பயினியர் வீதி, மட்டக்களப்பு.

| பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள். |
|---|
| 1. எஸ். ஏ. எம். ஹாபிஸ், அல்மினாபுரம், தில்லையடி, புத்தளம். |
| 2. கைசல் அமீனா ஜலீல், 61/1யூ/1. மகாபுத்கமுவ, முல்லேரியாவ. |
| 3. மிதுஷன், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு, கல்முனை. |
| 4. ப. கஜேந்திரா, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. |
| 5. தா. கவாஸ்கர், பெரிய கமம், மன்னார். |
| 6. பி. கிஷோர், பாஷையூர், யாழ்ப்பாணம். |
| 7. எஸ். சுமதி, கிராண்பாஸ், கொழும்பு - 14 |
| 8. வி. மயூரன், கண்டி வீதி, வவுனியா. |
| 9. வி. ஜெயா, மல்வத்த வீதி, தெஹிவளை. |
| 10. எஸ். சாஹித்தியா பேரதனை வீதி, கண்டி. |

## குறுக்கெழுத்துப் போட்டி 188

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | ■ |
| ■ | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

### இடமிருந்து வலம்

1.அண்மையில் ஆயுதக் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட இடம்.
7.காற்று (திரும்பியுள்ளது)
10.பறவை என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)
13.தொடர்பாடல் முறையில் ஒன்று (குழம்பியுள்ளது)
17.மலேரிய நோயின் காவி.
21.பிடிவாதம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
26.நிலை அல்லது ஆதரவு என்று கூறலாம்.
31.இரத்தம் (குழம்பியுள்ளது)
36.முன்னிலை வாக்கியம் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. பிரசாந் நடித்த திரைப்படமொன்று.
2. சத்தி என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
4. ஜாதக பலனுடன் தொடர்புடையது.
6. மங்கலம் அல்லது வாழ்த்து (தலைகீழ்)
11. அடாவடித்தனம் அல்லது இருமாப்பு என்று கூறலாம் (குழம்பியுள்ளது)
15. நூல் வகைகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
22. பசளை என்றும் பொருள்படும் (தலைகீழ்)
26. உடன்பாட்டு சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி 186 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| [1] தெ | [2] ன் | [3] ல் | [4] ழ | ■ | [6] வ |
| [7] ஓ | [8] ப | [9] ம் | [10] ல | ■ | [12] ன் |
| ■ | [14] ஸ | [15] செ | [16] வு | ■ | [18] ம |
| [19] தி | ■ | [21] ல | ■ | [23] அ | ல் |
| [25] தீ | [26] ஆ | ■ | [28] சூ | [29] தி | ■ |
| [31] ஓ | ■ | [33] சா | [34] ரை | ■ | [36] மா |

**போட்டி விதிகள்:**

இத்துடன் உள்ள விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 03.10.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-188
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## மின்சாரக் கதைகள்

வழங்குவது ராஹில்

# மறைதல் இல்லாத சூரியன்!

**என்** நேரங்களில் நீ நிந்தினாய்.

உன் நேரங்களை வார்த்தைகளால் ஒப்பனை செய்தேன் நான்.

பல விழிகளுக்கு நம் பரிமாறல் விற்பனையானது.

உன்னோடு என்னை இணைத்து ஏலம் செய்தார்கள்.

எனக்குள் மலர்கள் அவிழ்ந்தன.

நான் அவர்கள் கேலியை மௌனமாக வணங்கினேன்.

"இனி என்னோடு...நீங்க பேச வேண்டாம்..." என்றாய்.

நான் துகள் துகள்களாக நொறுங்கினேன்.

"ஏ...என்...என்...???" ஒரு சொல்லால் ஒரு சமுத்திர சோகம் செய்தேன்.

"...." நீ மௌனம் விரும்பினாய்.

ஒரு விடியல்...

சில விடியல்கள்...

பல விடியல்கள்... நீ என்னோடு சொல்லுறவு வைக்காமலேயே கழன்று விழுந்தன.

உன் மௌன பாஷையை மொழிபெயர்த்து, மொழிபெயர்த்துத் தோற்றுப் போனேன் நான்.

உதிர்ந்த ஒரு வருடத்தில் உன் மொழி என்னோடு வசித்தது.

நீ வார்த்தைகளால் வர்ணம் தீட்டினாய் என்னில்.

உன் பார்வைகளால் என்னை அடைந்தேன் நான்.

நீ புன்னகைத்தபோது என்னில் ரோஜாச் சோலை உண்டானது.

நீ சொற்களால் என்னோடு யுத்தம் நிகழ்த்தியபோது நான் ஆயிரம் தேன்கூடுகள் சுமந்தேன்.

உன் மலர்க் கண்களை ஒரு நாள் நான் தரிசிக்காது போனால் ஒரு வருட நீளமாகும் அது.

பாடங்களில் உனக்கும் எனக்கும் போட்டி. நீ நூறு மார்க்குகள் வாங்குவதற்காக நான் '99' தோடு நின்று விடுவேன்.

"நீ தோத்துட்டாயே...!" நீ கிண்டலால் என்னைக்கிள்ளுவாய். ஆனால், அது எனக்கு மிகவும் இனிக்கும்.

நீ கேட்ட அதிகமான கேள்விகளை நான் தீர்த்து வைத்திருக்கிறேன்.

நீ என்னுடைய ஒரே ஒரு கேள்விக்கு இதுவரை பதில் இல்லாமல் இருக்கிறாய்.

நீ உன்னை மறைக்க மறைக்க, எனக்குள் நீ மேலும் மேலும் உதித்துக் கொண்டுதான் இருக்கிறாய்.

இது மறைதல் இல்லாத சூரியன்.!

பரீட்சை வந்தது. காதலை ஒத்திவைத்தேன் தற்காலிகமாக!

நான் நூறு 'மார்க்குகள்' வாங்கினேன் எல்லாப் பாடங்களிலும்.

எனக்குள் விதை செய்தவள் நீ!

செடி வளர்த்தவள் நீ!

ஆனால்நூ பூக்கும் காலம் பார்த்து செடியையே பிடுங்கி வீசிவிட்டாயே!

உன் பெயரைக் கோடி முறை உச்சரித்தேன், நீ என்னிடம் வரமாட்டாயா என்ற ஏக்கத்துடன்.

என் கனவுகளைக் காயப்படுத்தினாய்.

என் வயதில் குருதி கசிய வைத்தாய்.

என் மனம் வலை வீசுகிறது, நீ இறுதி வரை பிடிபடாமலேயே விலகுகிறாய்.

நீ என்னை நோக்கிப் பூத்து நகர்ந்து கொண்டிருந்தாய்.

ஒரு கேள்வி வைப்பதற்கு என் மனம் துடித்தது.

"ஒரு நிமிடம்..."

நீ உச்சரித்தாயா? நான் உச்சரித்தேனா?

என் அதே நொடியில் நீயும் குரல் செய்தாய்.

"நீங்...க...இப்போ...என்னோடு... பேசலாம்ல்ல... நான்...துடிச்சுக் கொண்டிருக்கிறேன்...தெரியுமா...?"

நீ விழிகளால் அருவி செய்தாய்.

"நீ ஏன்...என்னோடு பேசுவதை...நிறுத்தினாய்?" என்றேன் நான்.

"காதல்...நம்ம படிப்பை...பாதிக்கக்கூடாதல்லை...வா... அதுதான்..."என்றாய் நீ!

நீ காதலை ஒத்திவைத்தாய் வாழ்க்கை பெறுவதற்காக! நான் வாழ்க்கையை ஒத்திவைக்கப் பார்த்தேன் - காதல் பெறுவதற்காக!


# சித்திரம் பேசுதடி

**ரமணன்** அன்றைய ஞாயிறு வாரப் பத்திரிகையை எடுத்து விளம்பரப்பகுதியை ஆர்வமாகப் பார்த்தான். அவன் ஒரு பட்டதாரி. கொம்பியூட்டர் வேலையும் மேலதிகமாகப் படித்தவன். அதில் ஒரு ஏற்றுமதி நிறுவனத்திற்கு ஒரு நிறைவேற்று உத்தியோகத்தர் தேவையென்றும், மேலதிகத் தகைமையாகக் கொம்பியூட்டர் வேலையில் திறமைசாலியாயிருக்க வேண்டும் என்றும் இருந்தது. அந்த விளம்பரத்தைக் குறித்தபின் தனது தகைமைகள் கொண்ட சுயவிபரங்களையும் (பயோடேட்டா) இணைத்து விண்ணப்பித்தான். ஒருவாரம் கழித்து நேர்முகப்பரீட்சைக்கு வரும்படி அந்த நிறுவனத்தில் இருந்து பதில் வந்தது. நேர்முகப்பரீட்சையில் தேறிய அவனை, அடுத்தமாதம் முதல் வந்து வேலையேற்கும்படி அந்த நிறுவனம் பணித்தது. தவிர பண்டாரவளை தான் அவன் சொந்த ஊர். வேலையேற்றால் விண்ணப்பதாரர் கொழும்புக்கு அண்மையில் வசிக்க வேண்டும் என்றும் எந்நேரமும் தேவைப்பட்டால் காரியாலயத்தில் சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. இதனால் அவன் பெற்றோரையும் தனது ஒரே தங்கையையும் விட்டுக் கொழும்பில் வசிக்க நேர்ந்தது. இதனால் மீண்டும் பத்திரிகைகளில் விளம்பரப்பகுதியைப் பார்த்தான். வாடகைக்கு அறைகள் கொடுக்கும் பகுதியைப் பார்த்தான். அதில் இரு அறைகள் சகலவசதியுடன் கொழும்புக்குச் சமீபமாக இருந்தது கண்டு மகிழ்ந்தான். அந்த விளம்பரத்தின் தொலைபேசி எண்ணைக் குறித்துக் கொண்டான். மாலை நேரத்தில் தொடர்பு கொள்ளும்படி அதில் இருந்தது.

அதன்படி மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டான். வீட்டுரிமையாளர் சிவஞானம் மாலை ஆறு மணிக்கு வரும்படி கூறியதும் அதன்படி அங்கு போனான். தங்குமிடம் அவனுக்குப் பிடித்துவிட்டது. அவனுடைய அறைக்குப் போகத் தனிவழி. வாசல் கதவு, எப்பவும் போய்வரும் போது பூட்டிக் கொண்டும் போகக் கூடியதாய் வசதியாக அமைந்தது. முற்பணம் கட்டிவிட்டு மறுநாள் தனது அத்தியாவசிய பொருட்களுடன் அதில் குடியேறினான். அதன் பின் ஒழுங்காக வேலைக்குப் போய்க் கொண்டிருந்தான்.

அன்று ஒருநாள் காரியாலயத்துக்கு ஆயத்தமாகி வெளியே புறப்படும்போது, அழகிய யுவதி ஒருத்தி அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தாள். இதன் பிறகு அவன் புறப்படும் நேரம், சிலசமயம் மாலையில் வேலை முடிந்து வரும் நேரமும் அடிக்கடி அவன் கண்ணில் படத் தொடங்கினாள். அவள் வீட்டுரிமையாளர் சிவஞானத்தின் மகள் எனப் பின்னர் தெரிந்துகொண்டான். பெயர் ரேவதி. அவள் ஒரு பிரபல வங்கியில் லிகிதராகக் கடமையாற்றுகிறாள் என்பதையும் நாளடைவில் தெரிந்து கொண்டான். வாடகைப் பணம் கொடுக்கப் போகும் போது சில சமயம் தான் இல்லாவிட்டால் அதை மகள் ரேவதியிடம் கொடுக்கும்படி சிவஞானம் கூறியதால், ஒருமுறை அவரில்லாததால் வாடகைப்பணத்தை ரேவதியிடம் கொடுத்தான். ஒரு நாள் ரமணனுக்குக் கடும் காய்ச்சல் வந்து வேலைக்குப் போகவில்லை. அதனால் அருகிலுள்ள கொம்யூனிகேசன் நிலையத்துக்குப் போய் லீவு கேட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் வந்து தன் அறையில் படுத்துக்கொண்டான். ரமணன் வேலைக்குப் போகாமல் இரண்டு நாளாக அறையில் காய்ச்சலாகப்படுத்திருப்பதை ரேவதி அவதானித்தாள்.

அதனால் அவன் மேலிரக்கப்பட்டு அவனுக்கு



வெந்நீர், தேநீர், பாண் முதலிய உணவுகளைக் கொடுத்துதவினாள். ஒருவாரம் கழித்துச் சுகமானதும் அவன் வேலைக்குப் போகத் தொடங்கினான். வெளியூர் போன சிவஞானம் தனது வேலை முடிந்ததும் வீடு வந்து சேர்ந்தார். தந்தை சிவஞானத்திடம் ரேவதி ரமணனுக்குச் சுகவீனம் வந்ததையும் ஆஸ்பத்திரிக்கு அவன் போனதையும் அதன் பின் அவனுக்கு வேண்டிய உதவிகளைத் தான் செய்து கொடுத்ததையும் கூறினாள். அதைக் கேட்ட சிவஞானம் ரேவதியைப் பாராட்டினார். அதன்பின் ரமணன் அவர்களுடன் சுமுகமாகப் பழகத் தொடங்கினான்.

ஒரு நாள் ரமணன், ரேவதிக்குத் தன்னைத் தனது காரியாலயத்தில் உள்ள அறைக்கு ஞாயிற்றுக்கிழமை வரும்படியும், அன்று தனிமையில் பேச வசதியாயிருக்குமென்றும், நீ கேட்ட மோதிரத்தையும் தன் அன்பளிப்பாகக் கடைக்குப் போய் வாங்கித் தருவதாயும் கடிதமெழுதி மேசையில் வைத்துவிட்டு ஏதோ அவசரமாக வெளியே போய்விட்டான். சிறிது நேரம் கழித்து சிவஞானம் தன் வேலையாளுடன் அவனுடைய அறைப்பக்கம் ஏதோ திருத்த வேலைகளுக்காக வந்தார். ரமணனின் அறைக்கதவு திறந்திருந்தது. மேசையிலுள்ள அந்தச் சிறிய மின்விசிறி சுழன்று கொண்டிருந்ததால், ரமணன் எழுதிவைத்துவிட்டுப்போன அந்தக்கடிதம் காற்றில் பறந்துவந்து சிவஞானத்தின் அருகில் விழுந்தது. அதைக் கண்ட சிவஞானம் குனிந்து எடுத்து அதைப் படித்தார். ரேவதியின் பெயர் இருந்ததால் ஆர்வமாய்ப் படித்தார்.அவரால் நம்ப முடியவில்லை. என் கண்ணான ரேவதிக்கு அன்பு முத்தங்கள். மற்றவை நேரில் என்ற வரிகளுடன் அந்தக் கடிதம் முடிவடைந்திருந்தது. ஓகோ நல்லவனாக நடித்துக் கொண்டு இந்த வேலை செய்கிறானா துரோகிப் பயல். கூட இருந்து கழுத்தை வெட்டுகிறானே வரட்டும் இன்று வீட்டுக்கு என்று குமுறிக் கொண்டிருந்தார். அவனுடன் சண்டையிட்டால் மகளின் பெயர் கெட்டுவிடும் என்று எண்ணி, அவனை ஏதாவது சொல்லி வீட்டை விட்டு உடனே வெளியேற்றுகிறேன் என்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். அன்று இரவு ரமணன் வேலையால் வீடு வந்து சேர்ந்தான்.

இரவு எட்டு மணிபோல் சிவஞானம் ரமணனைக் கூப்பிட்டு தம்பீ என்ர உறவினரின் மகள் வாறமாசம் இங்கு தங்கிப் படிக்கப் போகிறாவாம். ரொம்பவும் வேண்டியவர்கள். நீங்கள் எவ்வளவு சீக்கிரம் வேறு இடம் பார்க்க முடியுமோ அவ்வளவுகெதியாகப் பாருங்கள். அவர்களுக்கு இடமில்லை என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன் என்று கவலையுடன் நடித்துக் கூறினார். உங்கள் முற்பணம் எல்லாம் நீங்கள் காலி பண்ணும் நேரம் தருவேன் என்றதும், பரவாயில்லை அதற்கு அவசரமில்லை என்றான் ரமணன். அவனுக்கு முதலில் அதிர்ச்சியாயிருந்தது. ஆனாலும் தன்னால் அவர்களுக்குத் தொல்லை இருக்கப்படாது என்று எண்ணிக்கொண்டான். மறுநாள் இரவு அவன் வேலைவிட்டு வந்ததும் சிவஞானத்திடம் தான் வேறு இடம்பார்த்துவிட்டதாயும் வரும் வியாழக்கிழமை போய்விடுவதாயும் கூறினான். சிவஞானத்துக்கு உள்ளூரச் சந்தோஷம். அப்பாடா சனியன் விட்டது. இன்று செவ்வாய்க்கிழமை. இன்னும் ஒருநாள்தான் இருக்கு என்று கணக்கிட்டுக் கொண்டார். போவதற்கு முதனாள் அவனுடைய மீதிப்பணத்தையும் கொடுத்தார். மறுநாள் வியாழன் ரமணன் போய்விட்டான் வேறு இடத்துக்கு.

இரு நாள் கழித்து அன்று ஞாயிற்றுக்கிழமை காலை சிவஞானத்தின் வீட்டில் தொலைபேசி ஒலித்தது. பத்திரிகை படித்துக்கொண்டிருந்த சிவஞானம், பக்கத்திலிருந்த தொலைபேசியை எடுத்து யார் பேசுகிறது என்று கேட்டார். ஒரு பெண்குரல் ரமணன் இருக்கிறாரா என்றதும், சிவஞானம் சற்று எரிச்சலுடன் யார் நீங்கள் என்று கேட்டார். நான் ரமணனின் தங்கை பேசுகிறேன். உங்கள் வீட்டு நம்பரைத்தான் பேசச்சொல்லி அண்ணா எனக்குத் தந்தார். அவரைக் கொஞ்சம் பேசச் சொல்லுங்கள் அங்கிள் என்று கெஞ்சலாப் பேசினாள். இப்ப ரமணன் இங்கு இல்லை இடம் மாறி எங்கேயோ போய்விட்டார் என்றுவிட்டு ரிசீவரை வைக்கப்போகும் போது, அங்கிள் ரமணன் அண்ணா என்னைத் தனது கந்தோருக்கு ஞாயிற்றுக்கிழமை பகல் வரச்சொன்னார். கந்தோர் நேரம் அவர் வெளிவேலைக்குப் போவாராம். ஞாயிறு விடுமுறை என்றதால் அங்கு வந்து, என்னை கடைகளுக்குக் கூட்டிப்போய் பிறகு உங்கள் வீட்டிற்கும் கூட்டிப் போவதாகச் சொன்னார். அம்மாவுக்குச் சுகமில்லை. அதனால் இன்று ஞாயிறு நான் அண்ணனைக் காணவர ஏலாது. வருடப்பிறப்பு வருவதால் மூன்று நாள் லீவெடுத்து இங்கு அவரை வரும்படி சொல்லிவிடுங்கள் அங்கிள் தயவு செய்து. அப்போ ஒன்பது நாள் இங்கு வருடப்பிறப்பு விடுமுறைகளுடன் கூட நிற்கலாம். இப்போ சிவஞானத்துக்குக் கொஞ்சம் டென்ஷன் இறங்கியது. உங்கள் பேரைச் சொல்லுங்கள் இங்கு வந்தால் அவரிடம் சொல்கிறேன் என்றதும், அந்த இளம் பெண் நான் அவர் தங்கை ரேவதி பேசினதாகக் கட்டாயம் தேடிப்பார்த்தாவது உடன் சொல்லுங்கள். அவருடைய கடிதமும் கொஞ்சநாளாக வரவில்லை என்றும் கூறுங்கள் என்று இனிமையான குரலில் பேசவும், சிவஞானம் திகைத்துப் போனார். அப்போ நான் பார்த்த அந்தக் கடிதம் அவன் தங்கை ரேவதிக்கு எழுதியதா என்று குழம்பிக்கொண்டிருந்தார். அவன் காலி பண்ணிப் போனபின் வேலையாள் அந்த அறையைத் துப்பரவு செய்யும்போது, காகிதக் குப்பையிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து அதை சிவஞானத்திடம் கொடுத்தான். அது ரேவதியின் படம். ஆனால் அது அவன் தங்கை ரேவதி. சிவஞானம் தான் செய்த தவறுக்காக ரமணனிடம் மன்னிப்புக் கேட்க அவனைத் தேடத் தொடங்கினார். இருவருக்கும் ஒரே பெயர் ஆனாலும் தங்கை ரேவதியின் படம் அவரது சந்தேகத்தைப் போக்கப் பேசுவது போலிருந்தது.

*(யாவும் கற்பனை)*

## இவ்வாரச் சிறு கதைகள்

# வரவை எதிர்பார்த்த மங்கை

**காலையில்** எழுந்த சுமதி வீட்டு வேலையை மெது மெதுவாக யோசித்தபடி செய்து கொண்டிருந்தாள். தனது கடந்தகால வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாள். சுமதி தன்னுடைய படிப்பை முடிந்து விட்டு வீட்டிலே இருந்து விட்டாள். அவளுடைய பெற்றோர் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்தார்கள். ஆனால் அவளுக்கு எந்த மாப்பிள்ளையும் சரி வரவில்லை. அப்படியிருந்தும் அவளுடைய பெற்றோர் அதை கைவிடவில்லை. மீண்டும் மாப்பிள்ளை பார்த்தார்கள்.

ஆனால் அவளுக்கு அதில் ஆர்வம் குறைந்து விட்டது. கவலையும் அவள் மனதில் தோன்றியது. எத்தனையோ மாப்பிள்ளை பார்த்தும் எதுவும் சரி வரவில்லை என்று நினைத்தாள் சுமதி. அந்த விஷயத்தை விட்டு விட்டு தன் வேலையைப் பார்த்தாள். அவளுடைய பெற்றோர் மீண்டும் பார்த்த மாப்பிள்ளைகளில் ஒருவனின் ஜாதகம் சுமதியின் ஜாதகத்திற்குப் பொருத்தமாயிருந்தது. அது சுமதிக்கு தீமையில் வந்து முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. அது அவளுக்கும் தெரியாமல் போய்விட்டது.

அது மாப்பிள்ளைக்கு அதிஷ்டவசமாயிருந்தது. மாப்பிள்ளையை பற்றி எதுவும் விசாரிக்காமலே சுமதியின் பெற்றோர் திடுதிடுப்பென கல்யாணத்தை நடத்தினார்கள். கல்யாணம் நடந்த அன்று தான் சுமதி மாப்பிள்ளையை பார்த்தாள். ஓரளவுக்கு மாப்பிள்ளை சுமாராக இருந்தார், அவனை சுமதிக்கும் பிடித்து போய் விட்டது. தன்னுடைய பெற்றோர் பார்த்த மாப்பிள்ளை தானே, நல்லவராய் இருப்பார் என்று நினைத்துக் கொண்டு தன் இல்லற வாழ்வைத் தொடர்ந்தாள்.

தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களாய் இருவரும் தங்களுடைய வாழ்வை இன்பமாக கழித்தனர். திடீரென ஒரு நாள் அபிஷேக் தன் மனைவியிடம் நான் திருமணம் முடிந்து இரண்டு மூன்று மாதங்களாகி விட்டது. எவ்வளவு நாளைக்குத்தான் மாமியார் வீட்டில் இருந்து சாப்பிடுவது. நான் வெளியூருக்கு வேலைக்குப் போவதாக இருக்கிறேன். இதில் உனக்கு சம்மதமா என்று தன் மனைவியைப் பார்த்து கேட்டான் அபிஷேக். சுமதி அபிஷேக்கைப் பார்த்து "ஏங்க வெளியூரில் தான் வேலை பார்க்க வேணுமென்று இல்லை. இங்கும் ஏதாவது வேலை பார்க்கலாம்தானே" என்று சொன்னாள். அபிஷேக் இல்லை சுமதி, என்னுடைய நண்பன் வெளியூரில் வேலை செய்கிறான் எனக்கொரு வேலை பார்த்து வைத்திருக்கிறானாம். அதனால் என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்லி கடிதம் போட்டிருக்கிறான் என்று சுமதியிடம் சொன்னான்.

அவளுக்கு ஏதும் சொல்லத் தோணவில்லை அப்படியே அமைதியாய் சற்று நேரம் நின்று விட்டு, சரிங்க நான் அப்பாவிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டுச் சென்றாள். அபிஷேக் தன் திட்டம் நிறைவேறியதை நினைத்து சந்தோஷமடைந்தான்.

சற்று நேரத்தில் அபிஷேக்கின் மாமனார் வந்தார். தன் அப்பாவைக் கண்ட சுமதி அப்பா உங்களிடம் ஒன்று கேட்பன் சரி என்று சொல்லுவீங்களா என்று சொன்னாள். அதற்கு சுமதியின் அப்பா சுந்தரம் விஷயத்தைச் சொல்லு ஓம்மா, இல்லையா என்று சொல்லுறன் என்றார். அப்பா அவர் வெளியூருக்கு வேலைக்குப் போக போகிறேன் என்று சொல்லுகிறார், என்னப்பா நீங்கள் சொல்லுறீங்க என்றாள் சுமதி அதற்கு சுந்தரம் உனக்கு விருப்பம் என்றால் அனுப்பு இதில நான் என்னத்தை சொல்லுவது என்றார்.

இல்லப்பா உங்களிடமும் ஒரு வார்த்தை கேட்கத்தானே வேணும் என்று தன் தகப்பனாரிடம் சொன்னாள் சுமதி. அபிஷேக்கிடம் அப்பா சரி என்று சொல்லி விட்டார், நீங்க எப்ப போகப் போகிறீர்கள் என்று கேட்டாள். அபிஷேக் இரவு 8.00 மணிக்குப் போகிறேன் என்று சொன்னான். இன்றைக்கே போகப்போறீங்களா என்று கேட்க, ஆம் சுமதி உடனே போனால் தானே வேலையில் சேரலாம் என்று சொன்னான் அபிஷேக். அப்படி என்றால் சரி உங்களுடைய உடுப்பு, தேவையான பொருட்களை எடுத்து வைக்கிறேன். நீங்கள் போவதற்குரிய அலுவலை பார்த்து விட்டு வாருங்கள் என்று அபிஷேக்கிடம் சொன்னாள் சுமதி. இல்லை சுமதி நான் போகும் போது அலுவலைப் பார்த்துக் கொள்கிறேன் என்றான். சரிங்க என்று சொல்லிவிட்டு வீட்டு வேலையைக் கவனித்தாள். அபிஷேக் புறப்பட நேரம் ஆகிக் கொண்டிருந்தது. சுமதி என்னுடைய பொருட்கள் எல்லாம் எடுத்து வைத்து விட்டாயா என்று கேட்டவாறு புறப்படத் தயாரானான். சுமதி எடுத்து வைத்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டு அவன் அருகில் வந்தாள். அவனை வழி அனுப்புவதற்கு வாசல் வரைக்கும் வந்து அனுப்பி விட்டு, அவன் செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் வீதியில் வந்த வாகனம் ஒன்றில் ஏறி சென்று வண்டி தரிப்பிடத்தை அடைந்தான்.



-முருகையா சிவராசினி, அக்கரைப்பற்று.

அவனும் போக வண்டியும் புறப்படத் தயாராய் நின்றது. அவனும் வண்டியின் ஏறி தன் இருக்கையில் அமர்ந்து பெருமூச்சு விட்டான். அபிஷேக் சென்று ஒரு வாரம் ஓடி மறைந்தது. அதன் பின் ஓர் நாள் சுமதிக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அவராய் தான் இருக்கும் என்று நினைத்து ரிசீவரை கையில் எடுத்து ஹலோ என்றாள். சுமதி நான் அபிஷேக் என்றான். ஆ...சொல்லுங்க சுமதி நான் வேலையில் சேர்ந்து விட்டேன் இடம் பரவாயில்லை எனக்கு பிடிச்சிருக்கு என்று சொன்னான். சுமதி சரிங்க உடம்பை கவனமாய் பாருங்க. பனியில் அதிகமாய் நிக்க வேண்டாம் என்று தன் கணவனிடம் சொன்னாள். சரி என்று விட்டு போனை வைத்துவிட்டான். தொடர்ந்து மூன்று வாரங்களாய் தொலைபேசியில் தொடர்பு வைத்திருந்தான். அதன் பின் சிறிது காலமாய் அழைப்பு கிடைப்பதில்லை. கொஞ்சக்காலம் சென்ற பின் ஒவ்வொரு மாதங்களுக்கு ஒருமுறை தொடர்பு தொலைபேசி மூலம் வைத்திருந்தான். அப்படியே வாரங்கள் மாதங்களாகி மாதம் வருடமாகியது. அப்படியே அவனின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. வேறு எந்த தகவலுமறியாது சுமதி இருந்தாள். அபிஷேக் வெளியூர் செல்லும்போது சுமதி கர்ப்பமாயிருந்தாள். அது அபிஷேக்குக்கும் தெரியும். சுமதி அவளுடைய கவலையை விட்டு விட்டு தன் பிள்ளையை எப்படியாவது சுகமாய் பெற்றெடுத்து வளர்க்க வேணும் என்று எண்ணியிருந்தாள். அப்படியே அவளுடைய பிரசவத்தின் போது அழகான பெண்பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அப்படி இருந்தும் அபிஷேக்கின் கவலை அவளுக்கு மனதில் இருந்தது. சுமதியின் பிரசவம் முடிய அவளுடைய பெற்றோர் வேறு இடத்தில் இருக்கச் சென்று விட்டனர். அவர்கள் இருந்தாலும் அவளுடைய கஷ்டத்தில் பங்கு கொண்டிருப்பார்கள், அவள் யாரிடமும் தன் மனவேதனையைச் சொல்வதறியாது தன்னுள்ளே மறைத்து வைத்துக் கொண்டாள். எப்படியாவது தன் பிள்ளையை வளர்க்கும் முயற்சியில் இறங்கினாள். இப்படியாக நான்கு வருடம் ஓடி மறைந்தது. எப்படியும் தன்னையும் பிள்ளையையும் தேடி வருவார் என்ற நம்பிக்கையை மனதில் வைத்து பிள்ளையையும் வளர்த்து சமூகத்தில் பெரிய ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் கணவனின் வரவை எதிர்பார்த்தவளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் சுமதி.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

இன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல, தொன்று தொட்டே தனக்குத்தானே கேடு விளைவித்துக்கொண்டவர்களின் வரலாறுகளை உற்று நோக்குவோமாயின், அனேகருடைய புகழ், செல்வம், படைபலங்கூட மற்றவர் மேல் ஏற்பட்ட பொறாமை எனும் தீயினால் எரித்துக் கொண்ட கதைதான் அனேகம்.

இந்தத் தீய குணமானது, கற்றவர்களிடம் கூட இல்லாமலில்லை. கற்றவர் என்று குறிப்பிடும் பொழுது, அறம் சார்ந்த நூல்களைக் கற்றவரிடத்தில் இத்தகைய இழி குணங்கள் மிக அரிதாகவே காணப்பட்டாலும், 'அழுக்காறு' எனும் தீமை கடுகளவே இருந்தாலும், அவர்கள் கற்ற அத்தனையும் பயனற்றுப் போய்விடும் என்பதனை உணராதவர்கள்தான் இடர்களுக்குட்பட்டிருக்கிறார்கள்.

பொறாமை என்னும் தீய குணம் படைத்தவர்கள், எத்தகைய ஆக்கத்தைப் பெற்ற போதும் அவை அத்தனையும் மற்றவரைக் கெடுக்கவே பயன்படுத்தப்படுவதால், இறுதியில் அவை யாவும் எவ்விதப் பயனும் இல்லாமல் அழிந்து போனதையே உலகத்தார் நினைவு கூரக்கூடியதாக இருக்கும். இதைத் தன் அனுபவ ரீதியாக அறிந்துதானோ என்னவோ, இப்படிக் கூறிவைத்தார்.

**'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்."** *குறள் : 169*

பொறாமை கொண்ட நெஞ்சத்தவரின் உயர்ச்சியும் செவ்வையான மனத்தவனின் கேடும் நல்லோரால் நினைக்கப்படும். (அழிவின் காரணங்கள் தேடப்படும்)



# சரசக் கலையின் சாகசம்

தருவது **கற்பகன்**

மஞ்சத்தை விட்டெழுந்த மரகதவல்லி "போங்கள் நீங்கள் மிகவும் பொல்லாதவர்" என்று சிணுங்கினாள். விக்கிரமன் வாய்விட்டுச் சிரித்தான். அது அவளைப் பரிகசிப்பது போலிருந்தது. விக்கிரமன் குழைந்தான். "மரகதவல்லி! என் மீது கோபமா?" என்று விக்கிரமன் கேட்டதும், "ஏது? கருணை பொங்கி வழிகிறதே! தனியாயிருக்கும் ஒரு பெண்ணோடு இப்படியா நடந்து கொள்வது? என்ன இருந்தாலும் இத்தனை துணிச்சல் கூடாது. நீங்கள் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக



வந்தவர் என்பதை மறந்து வீட்டீர்களா?" என்றாள் ஒரு பொய்க் கோபத்தை வரவழைத்துக் கொண்டு.

"அதுதான் மறக்க முடியாத அளவுக்கு விருந்து படைத்து விட்டாயே. நன்றி." என்றான் குறும்பாக. "தந்தைக்கு தெரிந்தால் உங்கள் நிலை என்ன ஆகும் தெரியுமா?" என்றாள் மரகதவல்லி.

"தெரிந்தால் என்ன? உன்னைச் சொந்தமாகவே தந்து விடுவார்." என்றான் விக்கிரமன் கண்ணைச் சிமிட்டியவாறு.

"ஆசையைப் பாருங்கள் அசடு வழிகிறது. முகத்தைத் துடைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் பரிகாசமாக.

"உன் இதழ்களிலும் அதிரசம் வழிகிறதே! என் உதட்டால் அதைத் துடைத்து விடட்டுமா?" என்று அவள் பக்கம் நெருங்கியவனை "அப்பாடா வேண்டாம். இதுவரை பட்டதே போதும். இனியுந் தொட்டால் அதில் உதிரந்தான் வழியும்" என்றவள் துள்ளிக் குதித்து ஓடினாள். தொடர்ந்தான் விக்கிரமன். அவள் எங்கு தான் ஓடிவிடமுடியும்? "அத்தான் விடுங்களேன்" என்று கெஞ்சினாள் மரகதவல்லி. விக்கிரமன் அவளைத் தன் இரு கைகளிலும் ஏந்திக் கொண்டான். துவண்டாள் மரகதவல்லி. கையில் தாங்கி வந்த மரகதவல்லியைக் கட்டிலில் போட்டுவிட்டான் விக்கிரமன். "எங்கே ஓடப்பார்க்கிறாய்? இப்போது ஓடு பார்க்கலாம்." என்று மூக்கைப் பிடித்துக் கிள்ளியவன், அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டான். "அத்தான்! போதுமே உங்கள் குறும்பு. உங்களுக்கு விளையாட்டு, எனக்கு எங்கெல்லாம் வலிக்கிறது" என்று முனங்கினாள். "மரகதவல்லி!" என்று அன்பு ததும்ப அழைத்தான் விக்கிரமன். 'என்னவாம்?" என்றாள் மரகதவல்லி. "வலி அதிகமா? எங்கே காட்டு? சூடாக இருக்கிறது என் உதடுகள், வலியிருக்கும் இடங்களை ஒத்தடம் பிடித்து விடுகிறேன்." என்றான் விக்கிரமன். "பூனைக்கு விளையாட்டு" என்றவள் முடிப்பதற்குள் "உருமாறும் வித்தைகூடத் தெரியுமா?" என்றான் கேலியாக. "போதும் உங்கள் விளையாட்டு, பொழுது புலரப்போகிறது." என்றபடி கட்டிலை விட்டெழுந்து "போய் வருகிறேன் விடைகொடுங்கள்" என்றவளின் இரு கைகளையும் ஏந்தி முத்தமிட்டான் விக்கிரமன்.

நான்காம் ஜாமத்தைக் கடந்த இரவு விடிவெள்ளி உதயத்தை எதிர்பார்த்திருந்த வேளை. அங்கையர்க்கண்ணி படுத்திருந்த அறையினுள் ஜில்லெனப் பனிக்காற்று வியாபிக்கத் தொடங்கிய வேளை, அங்கையற்கண்ணியின் பட்டாலான போர்வை சற்று நழுவியபோது, அவள் தளிர்உடலில் குளிர் காற்று தாவியது. லேசாக அவள் உடலில் குளிரெடுத்தது. அந்த இதமான போர்வையும் அவளுக்கு ஒத்தாசை செய்ய மறுத்த வேளையில் அவள் மெள்ளக் கண்களைத் திறந்தாள்.

கண்களைத் திறந்ததுதான் தாமதம் அவள் கவனமெல்லாம் அவள் அருகிலுள்ள கட்டில் பக்கம் திரும்பியதும் திடுக்கிட்டெழுந்தாள். நெடுந்தூரம் குதிரை வண்டியில் பயணம் செய்த களைப்பு ஒருபுறம், இரவு நெடுநேரம் விழித்திருந்த நித்திரை மயக்கம் இவைகளெல்லாம் அவளை ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்த்தி இருந்தது. தூக்கங்கலைந்து எழுந்த போது அவளருகில் படுத்திருந்த மரகதவல்லி எங்கே சென்றிருப்பாள் என சில நிமிடங்கள் பொறுத்திருந்து பார்த்தாள். எங்குதான் போய்விட்டாள் என்ற எண்ணம் மேலெழுந்தபோது அறையை விட்டு சிறிது தூரம் சென்று பார்த்தாள். நிலாமுற்றத்தில் இருந்து மரகதவல்லி வருவதைக் காண முடிந்தது.

மரகதவல்லி தன்னை நெருங்கும்வரை அசையாமல் நின்றவள், அவள் நெருங்கியதும் "மரகதவல்லி உன்னை எங்கெல்லாம் தேடுவது?" என்று அங்கையற்கண்ணி கேட்டபோது, அதுவரை விரைவாக நடந்துகொண்டிருந்த மரகதவல்லி, திடீரென சிலைபோல் நின்றுவிட்டாள். "ஏன் நின்றுவிட்டாய் மரகதவல்லி" என்று கேட்டுக்கொண்டே அவள் அருகில் வந்த அங்கையற்கண்ணி, "என்ன இது கூந்தல் இப்படிக் கலைந்து கிடக்கிறது? நிலா முற்றத்தில் காற்று அதிகமோ?... இளம் பனிக் காலத்திலும் நிலா முற்றத்தில் காற்று வேகமாக அடிக்கிறது போலிருக்கிறதே?.." என்றவளின் பேச்சுத்தொனியில் கிண்டல் கலந்திருப்பதை உணர்ந்த மரகதவல்லி, தன் இருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டாள். வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது.

**"காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்**
**மாணிழை கண்ணொவ்வோம் என்று."**

*அதிகாரம் 112*
*குறள் 1114*

## சிந்தியா பதில்கள்

✉ **பொத்துவிலில் நடந்த படுகொலைகளுக்கு அதிரடிப் படையினர்தான் காரணம் என்று கூறப்பட்டது. எது உண்மை?**

*-எம்.எம்.றிஷ்வான், ஏறாவூர்.*

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கக் கூடியவர் அந்தச் சந்தர்ப்பத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்தான். நாம் ஏதாவது ஊகங்களைப் பேசி ஊரைக் குழப்புவதை விடவும் அவரது வாக்குமூலம்தான் சரியாக இருக்கும். யார் செய்தால் என்ன, கொலைகள் கண்டனத் துக்குரியவைதானே...

✉ **பி.பி.சி. செய்தியாளர்கள் பலவிதமான கேள்விகளை மிகவும் தெளிவாகக் கேட்டபோதும் இளந்திரையன் ஒரே பதிலை குழப்பிக் குழப்பிச் சொல்கிறாரே அவதானித்தீர்களா?**

*-மு.சிவகரன், கனடா மொன்றியல்.*

அவதானித்தேன்...இளந்திரையன் மழுப்புகிறார் அல்லது திணறுகிறார் அல்லது மறைக்கிறார் என்பதை செய்தியாளரின் கேள்வியே புலப்படுத்தி விடுகிறதே. தற்போதைக்கு பீ.பி.சி.யின் புலிகளுடனான செவ்விகள்தான் சிறப்பு நகைச்சுவை நிகழ்ச்சிகள் என்று சிரித்து விட்டு மறந்து விடுகிறேன்.

✉ **ஆயுதங்களைக் கொண்டு வருவதற்குக் கப்பல்களை வாங்கி, போக்குவரத்துச் செய்யும் புலிகளுக்கு, வன்னியில் பட்டினி கிடக்கும் மக்களுக்கு ஒருவேளை உணவு கொடுக்க முடியாதா?**

*-திருமதி பகீரதன், நீர்கொழும்பு.*

இந்தக் கேள்வி எனக்குத்தானா என்பதைச் சரி பார்த்து உரியவர்களுக்கு அனுப்பி வையுங்களேன்.

✉ **தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இந்தியப் பிரதமரைச் சந்திக்கப் போய், முடியாமல் திரும்பியது அவர்களுக்குப் பெருத்த தோல்வி என்றாலும் அதை ஒரு வெற்றியாகக் காட்டுகின்றனர். அவர்களுக்காகக் கவலைப்பட வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் வருத்தப் பட எனக்கு விருப்பமில்லை. இரண்டும் கெட்டவர்களுக்காக நான் என்ன செய்ய முடியும். எனது கேள்வி உமக்குப் புரிகிறதா?**

*-சி.தயாபரன், கண்டி.*

அவர்களது இந்திய விஜயம் வெற்றியா - தோல்வியா? நீர் அதுக்காகக் கவலைப்படுகிறீரா - இல்லையா என்பதை ஒரு முடிவோடு சொல்லாமல், நீர் குழம்பிப் போயிருக்கிறீர் என்று நான் சொல்லக்கூடாது. நான் சொல்லயில்லை எண்டதுக்காக நீர் குழம்பிப் போகயில்லை எண்டது இல்லையெண்டு ஆகிடாது. என்ன பதில் புரிகிறதா?

✉ **யாழ்ப்பாணத்து சமகால நிலைமை எப்படி இருக்கிறது. ஆறுதலாக இருக்கும்படியாகச் சொல்ல முடியுமா?**

*-மா.வைரவநாதன், பேலியகொடை.*

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இருக்கத்தான் செய்கிறது. முன்னர் வன்முறைகளோடு சேர்ந்து திரியாதவர்களைத் தவிர, ஏனையோருக்கு பாதுகாப்புக் குறித்த அச்சம் அவசியமற்றது. இதற்கு மேலதிகமாக அங்கு நிலவும் மந்த நிலைக்கு அரச இயந்திரத்தின் விரைந்த செயற்பாடு போதாது என்ற பெரும் குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் இருக்கிறது. அனுப்பப்படும் பொருட்களைக் கூட விரைந்து பகிர்ந்தளிக்கும் தன்மையைக் காண முடியவில்லை.

✉ **தேசிய அரசாங்கத்தினால் சிறுபான்மையினருக்கு நன்மையா? தீமையா?**

*-கலைநேசன் ஜவாத் - புத்தளம்.*

அனைத்து இலங்கை மக்களுக்கும் கௌரவமான வாழ்வுக்கான உரிய சட்டங்களைக் கொண்டு வரவும், இருப்பதில் மாற்றம் செய்யவும் தேசிய அரசுக்கு முடியுமாக இருந்தால் நன்மை தானே. முதலில் சிறுபான்மையினர் தங்கள் சக்தியை ஒருங்கிணைத்து பேரம் பேசும் வல்லமையோடு வைத்துக் கொள்வது அவசியம். இதற்கு உதாரணமாக புலிகளையும், தமிழ் கூட்டமைப்பினரையும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

✉ **சிந்தியா, புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்கக் கிடைத்தால் முதலாவதாக என்ன கேட்பீர்கள்?**

*-கா.துஷ்யந்தன், வவுனியா.*

அவர் மீசை வைத்திருக்கும் போதா? அல்லது மீசையை வழித்திருக்கும் போதா? என்று கூறவில்லையே. ஏன் என்றால் அவரைப் போல் வேறு சிலரும் இருப்பதாகக் கேள்வி. அதுதான் கேட்டேன். தாயகத்தில் யாரையும் சந்திப்பதை விடவும் இந்திய சினிமா இயக்குநர்களைச் சந்திப்பதால் அவரிடம் நான் "அதிகாலை சூரியனுக்குப் பதிலாக எதைப் பார்க்கிறீர்கள்" என்றுதான் கேட்பேன். பங்கருக்குள் சூரியனை சிறைப் படுத்த முடியாதல்லவா?

✉ **அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி கொண்டிருக்கும் கிரிக்கெட் ஏகபோகத்தை யாராலும் தகர்க்க முடியாதுபோல் தெரிகிறதே?**

*-கோ.நிதர்ஷன், கினிகத்தேனை.*




ஏனைய அணிகளில் இருக்கும் நட்சத்திர ஆட்டக்காரர்களை மட்டும் நம்பிக் களமிறங்கினால் எப்படி முடியும். அணியில் பதினொரு பேரும் தமது திறமையைக் காட்ட வேண்டும். இல்லையென்றால் திறமையானவர்களின் வெற்றியைக் கண்டு கோபப்படுவதில் அர்த்தமில்லை. ஏனைய அநேகமான அணிகள் வெற்றி வாய்ப்பைக் கூட கோட்டை விடுகின்றனவே... நீங்கள் இந்திய அணி இரசிகரா?

✉ **'எம்டன் மகன்' ஆங்கிலக் கலப்பு என்பதால் 'எம் மகன்' என்று தமிழாக்கியிருக்கிறார்களே, அப்படியென்றால் அதில் ஆங்கிலம் என்பது 'டன்' மட்டும் தானா?**

*-ஞா.வசந்தன், கண்டி.*

உங்கள் மொழி ஆர்வத்தை நினைக்கும் போது புல்லரிப்பாக இருக்கிறது. 'எம்' தமிழாகி பொருளான அளவுக்கு 'டன்' பொருள் தரவில்லையே வசந்தன். சொற்களை உடைத்து இரண்டு பகுதிக்கும் பொருள் தேடுவது எவ்வளவு சரியானது என்று யோசியுங்களேன். பெயர் சர்ச்சை இருக்கட்டும் படம் பார்த்தீர்களா? கோபிகா அளவுக்கு அதிகமாக கிச்சு கிச்சுப் பண்ணுகிறாராமே...

✉ **சோகத்திலும் சிரித்துப் பேச முடியுமா?**

*-க.தர்ஷிகா, வந்தாறுமூலை.*

முயற்சி பண்ணும்படி திருவள்ளுவரே சொல்லுகிறாரே... "இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அ:.தொப்பது இல்" உருவம் தெரியாத கோபத்தை இன்னொருவருக்கு அடையாளம் காட்ட முடியாதல்லவா. ஆகவே அதை விட்டு விட்டு அழகு காட்டும் சிரிப்பை மற்றவரோடு பகிர்ந்து கொண்டால் இரட்டிப்பு அழகுதானே... முயற்சிப்போமே...

✉ **இனிவரும் காலத்தில் ராஜா - ராணி கதைகளில் படமெடுத்தால் வெற்றி பெறுமா?**

*-கு.பரமேஷ், தெஹிவளை.*

ராஜா - ராணி என்றாலே நகைச்சுவை தானே! வெற்றியடையுமென்றுதான் நினைக்கிறேன். இதோ ராஜா - ராணி ஜோக்குகள் இரண்டு.

சிரிப்பு 01 :- "மன்னர் மார்புக் கவசத்தை எதற்காக முதுகுப் பக்கமாக அணிந்துள்ளார்?"

"தெரியாதது மாதிரி கேட்கலாமா அமைச்சரே...போர்க்களத்திலிருந்து ஓடி வரும்போது முதுகில் தானே காயம் ஏற்படுகிறது."

சிரிப்பு 02 :- "மன்னா நாம் போரில் தோற்றுவிட்டோம். நம்மை எதிரி நாட்டு மன்னன் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்போறான் என்கிறேன். சிரிக்கிறீர்களே."

"நம்மை என்றால் அதில் மகாராணியும் இருக்கிறார் தானே... அதுதான் அமைச்சரே."

(படித்தது)

✉ **கணினி மயப்படும் உலகில் கிடைக்கப் பெறாத அரிய புத்தகங்களை வாசிக்க ஏதாவது புதுமை நடக்காதா?**

*-எஸ்.ரமேஸ்குமார், மாதம்பை.*

தற்போதைக்கு இந்தியாவில் அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்தியப் பணம் 70 இலட்சம் ரூபா செலவில் 'டிஜிட்டல் நூலகம்' ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இது மாணவர்களுக்குப் பெரிதும் உதவுகிறதாம். உலகம் முழுவதும் 'ஈ - புக்ஸ்' எனப்படும் மின் புத்தகங்கள் பிரபலமாகிக் கொண்டு வருகின்றன. நீங்களும் மின் புத்தகத் தளத்தைப் பார்வையிட www.tamilebook.com இணையத் தளத்துக்குப் போகலாம். உங்கள் ஆர்வத்துக்காக இன்னொரு குட்டித் தகவல் புளொப்பி, சிடி, டி.வி.டி, இவையைக் கடந்து புதுத் தொழில் நுட்பம் Blue ray Disk வந்து விட்டது. இதில் சாதாரண ஒரு சிடியில் பதிவு செய்வதைப் போல சுமார் 70 மடங்கு பதிவு செய்து கொள்ள முடியும். வீடியோ, அனிமேஷன், அச்சுத்துறை பணிகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.



*மறைந்த நாட்டியப் பேரொளி பத்மஸ்ரீ பத்மினி அவர்களுக்கு முரசு வாசகர்களின் அஞ்சலிகள்.*


# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## 'பொறுப்பு உணர்ந்து விளையாடுங்கள்'

*- சஞ்சய் மஞ்ச்ரேகர்.*

**ம**லேசிய முத்தரப்புத் தொடர் இந்தியாவில் நடைபெற்றிருந்தால் கதையே வேறு. மந்தமான இந்திய, பாகிஸ்தான் ஆடுகளங்களில் பிரகாசிக்கும் நமது அணி மற்ற இடங்களில் கோட்டை விட்டுவிடுகிறது. சச்சின், டிராவிட், சேவாக்கைத் தவிர்த்து அதிக போட்டிகளில் சிறப்பாக விளையாடும் துடுப்பாட்ட வீரர்கள் இந்தியாவில் இல்லை.



இத்தொடரில் பெற்ற தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து விளையாட வேண்டும். தினேஷ் மொங்கியா போன்ற அனுபவ வீரர்கள் அணியில் இடம் பிடிப்பது அவசியம். அவர் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் அதிகம் விளையாடி இருக்கிறார். எந்த சூழ்நிலையிலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடுவார்கள். தான் தற்போது இந்திய அணிக்குத் தேவை. அப்பொழுது தான் இந்திய அணி உலகின் தலைசிறந்த அணியாக உருவெடுக்க முடியும்.

**வெற்றி தந்த கூட்டணி -பிரட் லீ-**

கோப்பையைக் கைப்பற்றியது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடர் நாயகன் விருது வென்றது மகிழ்ச்சியை இரட்டிப்புச் செய்தது. பிராக்கன் மற்றும் ஹாக் சிறப்பாகப் பந்து வீசினார்கள். பேட்டிங்கில் முதலில் தடுமாறிய அவுஸ்திரேலியாவுக்கு 'மிடில்-ஆர்டர்' துடுப்பாட்ட வீரர்கள் மதிப்புமிக்க ஸ்கோரைப் பெற்றுத் தந்தனர். மார்டின், சைமண்ட்ஸ், ஹசி, ஹட்டின் ஆகியோரது துடுப்பாட்டம் அபாரமாக இருந்தது. ஹசி, ஹட்டின் கடைசி இரண்டு போட்டிகளிலும் கலக்கினார்கள்.


இத்தொடரில் எனது பந்துவீச்சு முழு திருப்தி அளித்தது. இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சச்சின், சேவாக்கை வீழ்த்தியது மன நிறைவைத் தந்தது. மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினின் ஆட்டம் அபாரமாக இருந்தது. மற்ற துடப்பாட்ட வீரர்கள் அவருக்கு ஒத்துழைத்திருந்தால், இந்தியா எங்களுக்கு கடும் நெருக்கடி கொடுத்திருக்கும். இறுதிப் போட்டியில் கொய்லை விரைவில் வெளியேற்றியது வெற்றிக்கு உதவியது. மலேசிய முத்தரப்புத் தொடரில் ஆரம்பத்தில் மிரட்டிய மழை தொடராமல் நல்ல கிரிக்கெட் விருந்தளித்தது.

## ஆஸி. சாம்பியன்தான்

*- சுனில் கவாஸ்கர்.*


**மேற்** இந்திய அணியை விரைவில் சுருட்டி ஆஸ்திரேலிய அணி தான் ஒரு சாம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. இந்திய அணியைப் போல் சிறப்பாகப் பந்துவீசிய மேற்கு இந்தியா பேட்டிங்கில் கோட்டைவிட்டு மோசம் போனது. நீண்ட துடுப்பாட்ட வரிசை கொண்ட மேற் இந்தியாவும் துடுப்பாட்டத்தில் ஒருவரை நம்பித்தான் உள்ளது. இறுதிப்போட்டிக்கு முந்தைய போட்டியில் லாரா அருமையாக விளையாடினார்.

இறுதிப்போட்டியில் அவர் ஆட்டமிழக்க, தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் தொடர்ந்து வெளியேற எல்லாம் விரைவில் முடிந்துவிட்டது. சற்று நேரம் தாக்குப் பிடித்த சர்வானும் தேவையில்லாமல் ரன் அவுட் ஆனார்.



ஆஸ்திரேலிய பவுலர்கள் 'வைடு' மற்றும் 'நோ-பால்' வீசுவதை தவிர்த்து இருந்தால் மேற் இந்தியா இன்னும் குறைந்த ஸ்கோரில் சுருண்டு இருக்கும். சிறப்பான பார்மில் இருந்த ஹைடனை நீக்கிய குறையை சகலதுறை ஆட்டகாரரான வாட்சன் சிறப்பான பந்துவீச்சால் தீர்த்து வைத்தார்.

# ஓராண்டு நினைவுகளில்




| புவியில் | விண்ணில் |
|---|---|
| 17 | 28 |
| 09 | 09 |
| 1980 | 2005 |

## ஜோன்சன் பெனடிக்ட் தியாகராஜா

தம்பியாய் பிறந்த தாயுமானவனே!
உன் எதிர்காலம் பற்றிய எங்கள் விருப்பங்கள்
பொடிபட, காலனவன் உன்னைக் கண் முன்னே
பறித்துக் கொண்டானே. வற்றாத கண்ணீரோடு...
இவ்வுலகில் நாங்கள்... இன்னொரு பிறவியிலும்
இவனே என் தம்பி என்றொரு வரம்வேண்டும்
ஆண்டவரே!

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை, தம்பி, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல் :- ஜெரோம் ( இங்கிலாந்து - 00447983805837)
திருமதி. பெனடிக்ட் (கனடா - 0014167391280)

## புகையிரதம்...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர்களின் முகம் விகாரமடைந்து பெரிய மனிதரின் தோரணையில் இருக்கும். அவர்களில் தமிழ் தெரிந்தவர்களும் இருப்பார்கள். ஆனால் தமிழ் கதைக்க மாட்டார்கள். அவர்களின் உலகம் புகையிரதம் தான். அவர்களின் உலகம் சுத்தத்திற்கு அப்பாற்பட்டது. புகையிரதம் எப்போதும் கச்சான் கொட்டை சுற்றிய பேப்பர்களாலும் இனிப்புப் பண்டங்களின் உறைகளாலும் மிக அசுத்தமாக இருக்கும்.

புகையிரதத்தைப் பற்றி சிந்திக்கும் போது தண்டவாளங்களை எப்படி மறந்து விடமுடியும். குறுக்குக் கட்டைகளால் இணைக்கப்பட்டாலும் இரண்டு தண்டவாளங்களும் ஒன்றை ஒன்று இணையவே முடியாது. இணையவும் கூடாது என்ற விதி அதற்கு. ஆனால் குறிப்பிட்ட இடைவெளியில் சமாந்தரமாக ஒன்றுக்குத் துணையாக மற்றையதும் பயணிக்க வேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சி செய்த அத்தனை நாடுகளிலும் புகையிரதப் பயணம் கட்டாயமாக இருக்கும். புகையிரதத்துக்கு செலுத்துநர் இருந்தாலும் தன் இஷ்டப்படி திருப்பவும், முன் நகர்த்தவும் அவருக்கு முடியாது. இயந்திரப் பகுதி இயக்கப்பாட்டால் முன்புறமாவோ பின்புறமாகவோ தான் புகையிரதம் பயணிக்கும்.

சுனாமியால் சுருட்டி வீசப்பட்ட புகையிரதத்தைப் பியகமவில் போய் பார்த்த எனக்கு தண்ணீருக்கு அத்தனை வலுவா என்று இன்னும் கூட நம்பமுடியவில்லை. நான்கு பெட்டிகளை தண்டவாளத்திலிருந்து தள்ளிவிட்டு, தன் விருப்பத்துக்கு காடு கரை எல்லாம் உருட்டி விளையாடி விட்டிருக்கிறது. அதில் பயணித்த மக்கள் என்ன ஆகியிருப்பார்கள் என்று தெரியாது. அவர்கள் சுனாமியால் இறந்தவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். வழமையான புகையிரதம் தான் கோரமான விபத்துக்களை ஏற்படுத்தும். ஆனால், சுனாமி, புகையிரதத்தை விடவும் தனக்கிருக்கும் அசிங்கமான கோரமுகத்தைக் காட்டியது அன்றுதான்.

சுனாமியோடு ஒப்பிடுகின்றபோது புகையிரதம் ஒரு சாரைப் பாம்பு போல் தான் இருந்திருக்கும். நமது நாட்டில் பொல்கஹாவெலவில் நடந்த புகையிரத விபத்துதான் பெரிய புகையிரத விபத்து. அதற்குப் பிறகு தான் தெரியும் நாட்டில் சுமார் எழுபத்தி ஐந்துக்கும் அதிகமான பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் இருக்கின்றன என்பது.

என் பராய காலத்தில் சீனன்குடாவுக்குப் போகும் போதுதான் புகையிரதத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

அப்போதெல்லாம் புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருப்பவர்கள் யார் என்றே தெரியாது. ஆனால் அவர்களை நோக்கி கையசைப்பதும், புன்னகைப்பதும் எனக்கும் என் நண்பர்களுக்கும் ஒரு பொழுதுபோக்கு. சில வேளை எங்களின் சந்தோசத்திற்காக பயணித்துக் கொண்டிருப்பவர்களும் எங்களுக்குப் பதில் தருவது போல் கைகளை அசைத்துக் கொண்டு போவார்கள்.

புகையிரதம் வரப்போவது தெரிந்தால் சோடா மூடி அல்லது ஒரு சதம், இரண்டு சதம், ஐந்து சதம், பத்து சதம் என்று அலுமினிய, பித்தளை நாணயங்களைத் தண்டவாளத்தில் வைத்து விட்டு விலகி நின்று பார்ப்போம். புகையிரதம் கடந்து போனதன் பிறகு அந்தக் காசுகள் தட்டையாக, ஒரு வட்டமாக உருவம் மாறிப்போயிருக்கும். அவற்றைச் சேகரித்து வைத்துக் கொள்வோம்.

தண்டவாளத்தின் மீது யார் விழாமல் நடப்பது என்பது எங்களுக்கு எப்போதும் இருக்கும் போட்டி. அதற்குப் பிறகு குறுக்குக் கட்டைகளில் காலடி வைத்து நடப்பது. இப்படி நடக்கும் போது நம்மை அறியாமலே வேகமாகப் பயணித்துக் கொண்டிருப்போம். திரும்பிப் பார்த்தால் தூரம் தெரியும். இப்படி நடக்கும் போது ஒரு நாள் நான் கால் தடுக்கி விழுந்து மேல் உதடு வெடித்துப் போனது. இரத்தத்தோடு அப்பாவிடம் போய் சொல்லவும் அவரது சொல்லைக் கேட்காமல் ஊர்ப் பெடியன்களோடு சேர்ந்து கொண்டு போய் காயத்தோடு வந்திருப்பதால் கோபப்பட்டு அடிக்க வந்தார். அவரின் கோபம் நியாயமானது தான். என்ன செய்வது, அப்போது எனக்குப் புரியவில்லையே.

காதலர்களுக்கு தோல்வியைத் தாங்க முடியாத போது தற்கொலைதான் தீர்வென்று யோசித்து விடுகிறார்கள். அந்த முடிவு முட்டாள்தனமானது என்பதை இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்க்கலாம். செத்துப் போகிறவர்களிடம் பந்தயம் கட்டக் கூடாது என்பார்கள். ஏனென்றால் தற்கொலை முடிவுக்குப் போனவர்களை எப்படித் தெரிந்து கொள்வது. வெள்ளவத்தை கடற்கரையோரமாக இருக்கும் புகையிரதப் பாதையில் மாதத்தில் ஒருவரோ, இருவரோ புகையிரதத்தின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொள்வது வழமையாகி விட்டது. புனிதமான காதலையும் கொச்சைப்படுத்தி புகையிரதத்தையும் கொலைக் குற்றத்துக்கு இட்டுச் செல்லும் அத்தகைய முட்டாள்களுக்கு இது இறுதி எச்சரிக்கை. ●

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 2

7, 16, 25, போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் கேது, சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். 7 எண்ணிக்கையில் இவர்கள் சந்தோஷமான வாழ்க்கையைப் பெறுவர்.

பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும், எப்பொழுதும் தூய்மையான ஆடையுடனும் சிந்தனையும், சில நேரங்களில் சிரிப்பும் கலந்த முகத்துடன் காட்சியளிப்பர். பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் நல்ல வாழ்க்கைத்துணை அடைந்து குடும்ப வாழ்க்கை சிறப்படையும். கல்வி, பொருளாதார வசதி நன்றாக அமைந்துவிடும். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் பல்வேறு பிரச்சினையில் சிக்கித் தவிப்பர். இதனால் இவர்களது பெயரை நல்ல எண்ணில் அமைத்துக்கொண்டு சிறப்புடன் வாழலாம்.

இளகிய மனநிலை கொண்ட இவர்கள் பிறருடைய கஷ்டத்திற்கு இரங்கி உதவி செய்ய முன்வருவர். எப்பொழுதும் எதையாவது சிந்தனை செய்து கொண்டே இருப்பர். தமது வாழ்க்கையைக் குறிக்கோளுடன் ஆரம்பித்து வெற்றி பெறும் வாய்ப்புடையவர். தெய்வ பக்தியும் நல்ல குறிக்கோளும் கொண்ட இவர்கள் கண்டிப்பாக உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமில்லாது இருந்தால், தனக்கு முன்னேறுகின்ற வாய்ப்பு இருந்தும் முன்னேற முடியாது தவிப்பர். தனக்கு இவ்வளவு தகுதி இருந்தும், வாய்ப்பு இருந்தும், சோதனை செய்கிறதே என்று கண்கலங்குவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலருக்குப் பெயரைப் பொருத்தமான எண்ணில் மாற்றிக் கொடுத்தவுடன் படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருவதை நான் கண்டிருக்கிறேன்.

நன்றாகப் பழகும் இவர்கள் திடீரென்று மனக்குழப்பத்தால் அமைதியாகி விடுவர். சிறு பிரச்சினைகள் வந்தாலும் இவர்கள் முகம் மாறிவிடும். மிதமிஞ்சிய கற்பனாசக்தி படைத்த இவர்கள் தனிமையாக இருக்கும் போது பல திட்டங்கள் போட்டுக்கொண்டிருப்பார்கள். மற்றவர்களோடு ஒட்டிப்போகும் தன்மை குறைவாக இருப்பதால் அளவோடு பேச்சை நிறுத்திக் கொள்வர்.

மகிழ்ச்சியாக இருக்கும்போது காரசாரமாகப் பேசுவர். சங்கீதம், தெய்வீகம், வைத்தியம், சோதிடம், கலை சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் இவர்கள் மனம் நாடிச் செல்லும். தனது கருத்துக்களைப் பேசுவதைவிட எழுதுவதில் திறமை கொண்டவர்கள். தனக்குப் பிடிக்காத கருத்துக்களை யார் சொன்னாலும் துணிந்து எதிர்த்து வாதாடுவர். வழக்குத் தீர்ப்பதிலும், வழக்குத் தொடுப்பதிலும் கெட்டிக்காரர்கள். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் சாதாரண உத்தியோகத்தில் இருந்தாலும், சாதாரணத் தொழில் செய்தாலும், பெயர் நன்றாக அமைந்துவிட்டால் படிப்படியாக உயர்ந்த நிலையை அடைவர். இன்னும் சிலர் சிறந்த ஆசிரியர்களாகவும், நாட்டை நிர்வகிக்கும் அதிகாரிகளாகவும், அரசியல்வாதிகளாகவும், தொழில் அதிகாரிகளாகவும், டாக்டராகவும், இஞ்சினியராகவும் வாழ்கின்றனர்.

இயற்கைக் காட்சிகளையும், மலைப்பிரதேசங்களையும், கண்டுகளிப்பதில் இவர்கள் மனம் அமைதி பெறும். எவ்வளவு சிறந்த முன்னேற்றத்தில் இருந்தாலும் மன அமைதி இல்லையே என்ற ஏக்கம் இருக்கும். பிடிவாத மனம் கொண்ட இவர்கள், ஒரு செயலில் இறங்கிவிட்டால், தொடர்ந்து போராடிக்கொண்டே வெற்றி பெற முயல்வர். தூரதேசங்களைச் சென்று பார்ப்பதிலும், பிற நாட்டுக் கலாசாரங்களைக் கண்டு களிப்பதிலும் விருப்பமுடையவராயிருப்பர். தான் வாழ்கின்ற வீட்டையும், வாகனங்களையும், அழகாக வைத்துக் கொள்ளுவர். ஆடம்பரமான பொருள்களை வாங்குவதில் விருப்பமுடையவர். மத சம்பந்தமான ஆராய்ச்சியிலும் தன் மதத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவர்.

சிற்றின்ப வாழ்க்கையில் அதிக நாட்டமுடையவராக இருப்பர். திடீரென்று பேரின்பமான வாழ்க்கையைப் பற்றிச் சிந்தனை செய்வர். இவர்களது மனநிலை ஏறவும், இறங்கவுமாகவும் கடலலை போன்று இருக்கும். இவர்களது பெயர் பொருத்தமான நல்ல எண்ணில் அமைந்துவிட்டால் சீரும் சிறப்புமாக வாழ்வர். ஆனால் பெயரைப் பொருத்தமாக அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

***தொழில் :***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பகட்டு சம்பந்தமான தொழில் அனைத்தும் சிறந்தவையே. எழுத்தாலும், பேச்சாலும், பச்சைப் பொருள் சம்பந்தமான தொழிலாலும், கலை சம்பந்தமான பொருளாலும், துணி சம்பந்தமான பொருளாலும், காண்ட்ராக்ட் சம்பந்தமான தொழிலாலும் உயர்வடைவர்.

***நோய் :***

இவர்களுக்கு மனவியாதி, வாயுக்கோளாறு, மூட்டுக்கடுப்பு, இரத்தக்கொதிப்பு போன்றவைகள் வந்து நீங்கலாம். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருக்குமேயானால், நோய்கள் அதிகம் வருவதில்லை. சிலருக்கு உடலுறவு சம்பந்தமான வியாதிகளும் வருவதுண்டு.

***பெயர் அமைக்கும் முறை :***

இவர்கள் 15, 24, 33, 42, 51, 69 போன்ற சுக்கிர ஆதிக்கங்களிலும் 38, 47 போன்ற சந்திர ஆதிக்க எண்களிலும் தங்களுடைய பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை :***

யோகமான எண் - 6, 2.
யோகமான தேதிகள் - 6, 15, 24 : 2, 11, 20, 29.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம்,
சந்திரகாந்தக்கல், டைகர்ஸ் ஐ.
யோகமான நிறம் - பச்சை, வெளிர்நீலம், மஞ்சள்.
ஆகாத தேதி - 9, 18, 27.
ஆகாத நிறம் - சிவப்பு மட்டும்.

அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 3 பற்றிப் பார்ப்போம்.

# மகா கான்ஸ்டன்டைன் (கி.பி 280-337)

**ரோமானியப்** பேரரசை ஆண்ட முதலாவது கிறிஸ்துவப் பேரரசர் மகா கான்ஸ்டன்டைன் ஆவார். இவர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவி, அந்தச் சமயத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பல்வேறு கொள்கைகளைச் செயற்படுத்தியதன் மூலமாக, அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த ஒரு சமயப் பிரிவை ஐரோப்பாவிலேயே முதன்மை வாய்ந்த ஒரு சமயமாக மாற்றுவதில் பெரும் பங்கு கொண்டார்.

இன்று யூகோஸ்லாவியாவிலுள்ள, நிஸ் என்று இன்று வழங்கப்பெறும் நைசஸ் என்னும் ஊரில் கி.பி. 280இல் கான்ஸ்டன்டைன் பிறந்தார். இவருடைய தந்தை இராணுவத்தில் ஓர் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். மகா கான்ஸ்டன்டைன் தமது இளமைக்



காலத்தை டயோக்ளிஷியன் பேரரசரின் அரசவையில் இருந்து நிக்கோ மீடியாவில் கழித்தார்.

டயோக்ளிஷியன் பேரரசர் கி.பி. 305இல் பதவி துறந்தார். அவருக்குப் பின்னர், மகா கான்ஸ்டன்டைனின் தந்தையான மகா கான்ஸ்டன்ஷியஸ், ரோமானியப் பேரரசின் மேற்குப் பகுதி முழுவதற்கும் பேரரசரானார்.

அடுத்த ஆண்டிலேயே மகா கான்ஸ்டன்ஷியஸ் இறந்து விடவே, அவரது படையினர், மகா கான்ஸ்டன்டைனைப் பேரரசராக அறிவித்தனர். ஆனால், இவர் அரியணை ஏறியதை மற்றைய தளபதிகள் எதிர்த்தனர். இதைத் தொடர்ந்து பல உள்நாட்டுப் போர்கள் மூண்டன. இந்தப் போர்களில், இறுதியாக ரோம் நகரின் அருகிலிருந்த மில்வியன் பாலத்தில் நடந்த போரில் கடைசியாக எஞ்சியிருந்த மாக்சென்ஷியஸ் என்ற பகைவரை மகா கான்ஸ்டன்டைன் தோற்கடித்ததும் உள்நாட்டுப் போர்கள் முடிவுற்றன.

மகா கான்ஸ்டன்டைன் ரோமானியப் பேரரசின் மேற்குப் பகுதிக்கு எதிர்ப்பில்லாத அரசரானார். எனினும், லிசினியஸ் என்ற மற்றொரு தளபதி கிழக்குப் பாதியை ஆண்டு வந்தார். கி.பி.323ஆம் ஆண்டில் மகா கான்ஸ்டன்டைன், லிசினியஸ் மீது படையெடுத்து அவரையும் தோற்கடித்தார். அது முதற்கொண்டு, கி.பி.337இல் தாம் காலமாகும் வரையில் ரோமானியப் பேரரசு முழுவதற்கும் மகா கான்ஸ்டன்டைன் பேரரசராக விளங்கினார்.

கான்ஸ்டன்டைன் எப்போது கிறிஸ்துவ சமயத்தைத் தழுவினார் என்பது உறுதியாகத் தெரியவில்லை. இது குறித்து வழக்கமாக ஒரு கதை கூறப்படுகிறது. மில்வியன் பாலத்துப் போருக்கு முந்திய இரவில் வானில் செந்தீ வண்ணமான சிலுவையொன்றைக் கான்ஸ்டன்டைன் பார்த்ததாகவும், 'இந்தச் சின்னத்துடன் நீ வெற்றி பெறுவாய்' என்னும் சொற்களும் வானத்தில் தோன்றியதாகவும் கூறுவர். கான்ஸ்டன்டைன் எப்போது எவ்வாறு கிறிஸ்துவத்திற்கு மாறினார் என்பது இங்கு முக்கியமன்று. அவர் கிறிஸ்துவத்தை முன்னேற்றுவதில் முழு ஈடுபாடு கொண்டார் என்பதே முக்கியம். கிறிஸ்துவத்தைப் பரப்புவதற்கு அவர் மேற்கொண்ட தொடக்க நடவடிக்கைகளில் ஒன்று, அவர் பிறப்பித்த 'மிலான் அரசாணை' ஆகும். இதன்படி, கிறிஸ்துவ சமயம் சட்டப்படியான, ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு சமயமாக ஆகியது. கிறிஸ்தவ சமயம் ஒடுக்கப்பட்டு வந்த முந்திய காலத்தின் போது, பறிமுதல் செய்யப்பட்ட திருச்சபைச் சொத்துக்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விடுவதற்கும் இந்த அரசாணை வகை செய்தது. மேலும், ஞாயிற்றுக்கிழமையை வழிபாட்டு நாளாகவும் இந்த ஆணை அறிவித்தது.

சமயச் சகிப்புணர்வின் அடிப்படையில் மிலான் அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. மாறாக, கான்ஸ்டன்டைன் ஆட்சிக் காலத்திலிருந்து யூதர்களுக்கு எதிராக அரசின் அடக்குமுறை தொடங்கியது. அந்த அடக்கு முறை கிறிஸ்தவ ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்து நீடித்தது.

கான்ஸ்டன்டைன் கிறிஸ்துவத்தை ஒருபோதும் அதிகார முறையான அரசுச் சமயமாக நிறுவவில்லை. ஆயினும், தாம் இயற்றிய பல்வேறு சட்டங்கள், மற்றக் கொள்கைகள் வாயிலாக அவர் கிறிஸ்துவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில், கிறிஸ்தவத்திற்கு மதம் மாறுவது, அரசியல் பதவி உயர்வு பெறுவதற்கு அதிக வாய்ப்பளித்தது. திருச்சபையினருக்குப் பயனுள்ள பல்வேறு சிறப்புரிமைகளையும் ஏமங்களையும் வழங்கும் பல ஆணைகளையும் இவர் பிறப்பித்தார். உலகிலேயே மிகவும் புகழ்பெற்ற தேவாலயங்கள் பலவற்றையும் இவர் கட்டினார். பெத்லகேமில் கட்டப்பெற்ற கிறிஸ்துமஸ் தேவாலயம், ஜெருசலேத்தில் எழுப்பப் பெற்ற புனிதக் கல்லறைத் தேவாலயம் ஆகியவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

## உலகை வியக்க வைத்தவர்கள்

ரோமானியப் பேரரசின் முதலாவது கிறிஸ்துவப் பேரரசர் என்ற முறையில் கான்ஸ்டன்டைன் ஆற்றிய அரும்பணியே இந்தப் பட்டியலில் அவர் இடம் பெறுவதற்குப் போதிய தகுதியாக அமைகிறது. எனினும், நீண்ட கால விளைவுகளைக் கொண்ட வேறுபல நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார். அவற்றுள் முதன்மையானது, பழைய பைசாண்டிய நகரைப் பெரிதும் விரிவுபடுத்திப் புதிதாக உருவாக்கி, அதற்குக் கான்ஸ்டான்டினோபிள் என்று பெயர் சூட்டி, அதனையே தமது தலைநகராக ஆக்கிக் கொண்டதாகும். இன்று இஸ்தான்புல் என்றழைக்கப்படும் கான்ஸ்டான்டினோபிள் நகரம், உலகப் பெருநகர்களில் ஒன்றாகப் பெரும்புகழ் பெற்றது. அந்நகரம் 1453 வரையிலும் கிழக்கு ரோமானியப் பேரரசின் தலைநகராகத் திகழ்ந்தது. அதன் பின்னர் பல நூற்றாண்டுக் காலம் ஆட்டோமான் பேரரசின் தலைநகராக விளங்கியது.

கிறிஸ்துவத் திருச்சபையில் அக வரலாற்றிலும் கான்ஸ்டன்டைன் முக்கியப் பங்காற்றினார்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

அரசாங்கம் ஒரே முடிவாச் சொன்னதைப் பார்த்தால், இனிமேல் ஏமாந்து போக முடியாது எண்டதில அவை உறுதியா இருக்கின மெண்டதைத்தான் புரிஞ்சு கொள்ள முடியுது. இனிப் பேச்சுவார்த்தை எண்டால் பிரபாகரன் தான் உறுதி மொழியைத் தர வேணும் எண்டிட்டினம். உதுக்குப் பிறகு தம்பி சு.பா.வும், பிரபாவும் என்ன கதைப்பினம்?

"என்ன செய்யப்போறியள்...நீங்கள் தான் உறுதி தர வேணுமாம்" என்று நீண்ட நேரமாக நிலவிய அமைதியைக் குலைக்கிறார் தமிழ்ச் செல்வன்.

"ஓம்...அதப்பற்றித்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன். ம்...ம்...இதையே சொன்னால் என்ன..." என்று பிரபா சு.பா. வைப்பார்க்கிறார்.

"எதைச் சொன்னால் எண்டு சொல்லயில்லையே..."

"தலைவர் நேரடியாக உறுதி தருவது பற்றி யோசிக்க வேணும், அதற்கொரு கால அவகாசம் வேணும் எண்டு சொன்னால்..."

"சொல்லலாம்...ஏற்கனவே நான் சொல்வதெல்லாம் பொய்" எண்டுதான் நீங்களே சொல்ல வேணும் எண்டிருக்கினம்.

ம்...பாலா அண்ணரை வன்னிக்கு வரவழைக்க வேணும் எண்டால் என்ன?

"பேச்சுவார்த்தைகள் நடக்கப் போகுதெண்டால் அப்படிக் கேக்கலாம். உது இனி தாக்குதல் எதுவும் நடக்காது எண்ட உறுதி மொழி தானே. உதைச் சொல்வதற்கு எதுக்கு ஆலோசகர் எண்டு யோசிப்பினமெல்லோ"

"முன்னைய அரசாங்கங்களைப் போல் இவை இல்லை...உப்பிடிக் கேக்கிறவை எதிர்காலத்திலயும் ரொம்பப் பிடிவாதமாக இருப்பினம் போல இருக்கே."

"உதை முதலிலேயே யோசிச்சிருக்க வேணும். நீங்கள் அவசரப்பட்டு மகிந்தர் ஒரு யதார்த்தவாதி, அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேணும் எண்டெல்லாம் உளறிப் போட்டியலே!"

"அது போன மாவீரர் தின உரையில. இப்ப நிலைமை மாறி வந்திட்டுதெல்லோ. அதையே இப்பவும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்."

சரி என்னில கோபப்படாதேங்கோ. உதுக்கு என்ன பதில் எண்டு யோசியுங்கோ...

"ஆ... உறுதிமொழி தாரதெண்டால் ஒப்பந்தத்தை இலங்கை அரசு மதித்து எங்களிடமிருந்து பறித்த பகுதிகளை மீண்டும் எங்களிடம் ஒப்படைக்க வேணும் எண்டால் என்ன?"

"சூப்பர் ஐடியா. உது ஒரு நாளும் நடக்காது. கொஞ்ச நாளைக்குக் காலத்தை உருட்டலாம்."

"அப்புடிச் சொன்னால்...எங்கட சனம் எங்களுக்குச் சமாதானத்தில விருப்பமில்லை எண்டதாலதான் நாங்கள் நடக்காத நிபந்தனைகளை விதிச்சுக் கொண்டிருக்கிறம் எண்டு நினைச்சிருவினமோ...!"

"அப்புடியும் நினைக்க வாய்ப்பு இருக்குத் தான். நாங்கள் சனம் நினைக்கிறதைப் பற்றி ஏதும் யோசிச்சே முடிவெடுக்கிற நாங்கள் இல்லையே."

"நீர் சொல்லிறது சரிதான், சனம் என்ன நினைச்சால் எங்களுக்கென்ன...சனம் அப்புடி நினைக்காட்டிலும் உந்த மாற்றுக் கருத்துக்காரர் சனத்துக்கு விளங்கிற மாதிரி தாறுமாறாக கதைப்பாங்களே!"

"அது தவிர்க்க ஏலாதண்ண...வுதுக்காக நீங்களே நேரடியாக் கதைக்கப் போறீங்களே?"

"நீர் கேக்கிறதைப் பார்த்தால் நான் நேரடியா கதைக்க வெளிக்கிட்டால் உமக்கு இமேஜ் அடிபட்டிடும் எண்டு நினைக்கிறீர் போல..."

"அதுக்கில்லை. உப்பிடி எல்லாரும் கதைச்சால் அரசியல் துறைக்கெண்டொரு பொறுப்பாளர் தேவையில்லைதானே...அதை விடவும் ரெண்டு தடவை நேரடியா நீங்கள் கதைச்சீங்கள் எண்டால் பிறகு உங்கட கதையையும் நம்ப ஏலாது எண்டு சொல்லிப் போடுவாங்கள்."

"ஏன் அப்பிடிச் சொல்லுறீர்?"

"எப்புடியும் பொய்யைத்தான் சொல்ல வேண்டி வரும்...அதில நான் எண்டால் ஒரு கட்டத்துக்கு மேல தலைமைப்பீடத்தைக் கேட்டுத்தான் சொல்ல முடியும் எண்டும், தலைவர் நல்ல முடிவை எடுப்பார் எண்டும் சொல்லி சமாளிச்சுப் போடுவன்...உங்களுக்கு ஒரு இக்கட்டான நிலைமை வந்தால் நீங்கள் யாரைச் சொல்லி தப்புவியல்."

"உமக்குச் சரி...எனக்குமா இக்கட்டு நிலைமையை உண்டு பண்ணுவினம்"

"அண்ண உங்களுக்குத் தெரியாது உந்த ஊடகக்காரங்கள் கொஞ்சம் கூட பயமில்லாமல் கண்டபடி கேள்வி கேட்பாங்கள்...சில சமயத்தில் என்ன சொல்லுறதெண்டே திக்கு முக்காடிப் போடுவன். அப்பிடியான நேரத்திலதான் பதிலுக்குப் பதிலா சிரிச்சு சமாளிக்கிற நான் தெரியுமே."

"சரி என்னிடம் அப்புடிக்கேப்பினமே?"

"ஓம்...ரெண்டு தடவை நீங்கள் முகம் காட்டிப் போட்டீங்களோ பிறகு அவங்களுக்கு நீங்கள் சாதாரணம் தான். அந்த பொஸிசனில தான் கேப்பினம்."

"உதுக்கே உப்பிடியெண்டால் நாளைக்கு நான் மக்கள் தலைவனாகி மக்களைச் சந்திக்க வீதியில இறங்கினால் என்னவெல்லாம் நடக்குமோ?"

"இப்பதான் சரியான கோணத்தில யோசிக்கிறியல். உங்களுக்கு உந்த வரி யூனிப்போமும் சைட்டில பிஸ்டலும் நாளைஞ்சுப் பேரை பக்கத்திலையும் கொண்டு திரியிறதுதான் உங்களுக்கு ஒரு கம்பீரமா இருக்கும்."

"ஹா...ஹா...அப்ப இந்த ஜென்மத்தில எனக்கும் அரசியலுக்கும் எட்டாம் பொருத்தம் எண்டு சொல்லுறீர்."

"தலைவர் புரிஞ்சு கொண்டால் சரிதான்." உப்பிடியே திசைக்கொரு பக்கமாக உரையாடல் போகுதுங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(28.09.2006 தொடங்கி 04.10.2006 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், செவ்வாய், கேது, வெள்ளி. துலாம் - வியாழன், புதன். மீனம் - இராகு. கர்க்கடகம் - சனி. சந்திரன் விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை உயர்ச்சி, பண வரவு, உயர்ந்தோர் நட்பு, கௌரவம், மனக்குறை நீங்கும், இனசன நன்மை, பொருள் வரவு, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பலிதம், பணச் செலவு, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், மனக்கலக்கம், குடும்பப் பாரம், உத்தியோக அலைச்சல், மனச் சோர்வு, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பண வரவு, அந்நியர் உதவி, வெளியார் தொல்லை, குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, குடும்பப் பற்று, மனமகிழ்ச்சி, உத்தியோகத் தொல்லை, மனப்பயம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, பண வரவு, தூர இடப் பயணம், எதிர்பாரா செலவு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், மனப் பயம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் கலக்கம், பணச் செலவு, மனக்குறையதிகம், வெளியார் தொல்லை, இனசன மகிழ்ச்சி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி மந்தம், புதிய கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மாற்றம், புதிய முயற்சி, அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை, மனக் குழப்பம், குடும்பப் பற்று, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மேன்மை, பண வரவு, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியிடப் பயணம், பெரியோர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம் :- 03.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பகை, வீண் செலவு, மனக் கலக்கம், உயர்ந்தோர் நட்பு, தூர இடப் பயணம், குடும்ப நன்மை, சுபகாரிய சிறப்பு, உத்தியோகக் கலக்கம், மனப் பயம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 07.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, பண வரவு தடை, கடன் சுமை, வெளியிட வாழ்க்கை, எதிர்பாரா செலவு, குடும்பக் கஷ்டம், உத்தியோக மாற்றம், புதிய பதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, வரவு குன்றும், பயனற்ற செயல், அந்நியர் உதவி, கௌரவம், குடும்ப சகாயம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.


**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மந்தம், செலவு மிகுதி, கடன் படல், பிரயாணத் தொல்லை, தேகசுகம் பாதிப்பு, மனப் பயம், குடும்பப் பகை, உறவினர் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

## தாய்



தாய்ப் பாசம் என்பது மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் அதிகமாகவே உள்ளது என்பதற்கு மேலே உள்ள காட்சி மற்றுமொரு உதாரணமாகும். புளோரிடாவில் 2600 பவுண்டு எடையுள்ள நீர் யாணை ஒன்று தனது குட்டியுடன் வலம் வருகின்றது.

## மதிப்பு



ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். ஆனால் இன்றைய நவநாகரிகத்தில் ஆளின் மதிப்பை விட ஆடையின் மதிப்பு உயர்ந்து விட்டது என்றே கூறவேண்டும். ஜெர்மனி மொடல் அழகி அணிந்திருக்கும் இந்த ஆடையின் விலை ஒரு லட்சம் யூரோ. இதில் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

## திறமை



தனி இசை, குழு இசையென்று ஏராளமான போட்டிகள் நடக்கிறது. ஆனால் இங்குள்ளவர்கள் வித்தியாசமான இசைப்போட்டியொன்றை நடத்தியுள்ளார்கள். டோக்கியோவில் நடந்த உலக இசை நீச்சல் சம்பியன்சீப் போட்டியில் கனடா வீராங்கனைகள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டுகின்றனர். இனி வரும் காலங்களில் இதுபோன்ற போட்டிகள் மூலம் உடற்பயிற்சியையும் கலையையும் வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

## நீளம்



உலகிலேயே மிக நீண்ட கால் பாத நகங்களைக் கொண்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த லூயிஸ் ஹொலிஸ் என்ற பெண்மணியாவார். 1982ஆம் ஆண்டு முதல் இவர் நகங்களை வளர்த்து வருகிறார். பத்து நகங்களின் மொத்த நீளம் 2.21 மீற்றர் அல்லது ஏழு அடி 3 அங்குலம். நகங்கள் வெளியே தெரியக் கூடியதாக சப்பாத்துகளின் முன் பக்கங்கள் மூடப்படாமல் இருக்கும். நகங்கள் நிலத்தில் முட்டக் கூடாதென்பதற்காக சப்பாத்துகளின் அடிப்பாகம் மூன்று அங்குலம் உயரனமாதாக இருக்கும்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி க. கவிஷா** | **01.10.2006**

கவிகாந்தன் (கவீ) - சுதாஜினி (சுதா) தம்பதியினரின் செல்வப் புதல்வி கவிஷா தனது முதலாவது பிறந்த நாளை 01.10.2006 அன்று கனடாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அக்கா ரீனேஷா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பாமார், அம்மம்மாமார், தாத்தாமார், பாட்டிமார், பூட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மாமா, மாமிமார், அண்ணாமார், அக்காமார், தங்கை, மச்சான், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் முருகன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.




## போதும்

உலகிலேயே அதிக விலை கூடிய சான்ட்விச், மக்டொனால்ட் சான்ட்வீச் என்றழைக்கப்படுகிறது. இதன் விலை 85 பவுண்கள். அல்லது 147 அமெரிக்க டொலர்களாகும். பாண் அல்லது பணிஸ௰ க்கிடையில் இறைச்சி மற்றும் பல ெ உணவுப் பொருட்கள் வைத்துச் செய்யப்படும் உணவுப் பதார்த்தமே சான்ட்விச் என்றழைக்கப்படுகிறது. மக்டொனால்ட் என்ற பல்தேசிய உணவு விற்பனை நிறுவனத்தை நிறுவியவர் பிரிட்டனைச் சேர்ந்த ஸ்கொட் மக்டொனால்ட் என்பவர். 24 மணித்தியாலங்கள் புளிக்க வைக்கப்பட்ட பாண் துண்டுகளுக்கிடையில் வாக்யு என்றழைக்கப்படும் ஜப்பானிய மாட்டிறைச்சி, செம்மிளகு, கடுகு, தக்காளி துவையல் மற்றும் விலையுயர்ந்த உள்ளீடுகளை இடையில் வைத்துச் செய்யப்பட்ட இந்த மக்டொனால்ட் சான்ட்விச்சின் விலை இலங்கை ரூபா மதிப்பில் எவ்வளவு தெரியுமா? சுமார் 19ஆயிரம் ரூபா மட்டும் தான்.

